சீக்ரட் நாவல்     இதழ்

# நிறம் மாறும் நிஜங்கள்



## ராஜேஷ்குமார்




பம்பாய் விக்டோரியா டெர்மினசில், புவனா இறங்கியபோது விடியற்காலை ஐந்து மணி, ஸ்டேசன் வெளிச்சமாய் சறுசுறுப்பாய் இருந்தது. அந்நேரத்துக்கே சற்று புழுக்கமாய் இருந்தது. ஸ்டேசன் சுவர்களில் ராட்சச இந்திப்பட போஸ்டர்கள். ஹீரோக்கள் மெஷின் கன்களோடு பரட்டைத் தலையில் - பற்களைக் கடிக்க, ஹீரோயின்கள் - வயிற்றைக் காட்டிக் கொண்டு மழையில் நனைந்தார்கள். அரசாங்கம் நிரோத் உபயோகிக்கச் சொல்லி, ஆயுளை இன்சூர் பண்ணச் சொல்லி, இந்திர விகாஸ் பத்திரங்களை வாங்கச் சொல்லி - இந்தியில் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட விளம்பரங்கள் கண்ணிலடிக்க - நம் புவனா நடந்தாள்.

புவனா மாநிறம்தான். ஆனால் அழகாக இருந்தாள். சாமுத்ரிகா லட்சணப்படி ஒரு பெண்ணின் உடம்பும்

எங்கெங்கு வளைந்து சதைபிடித்து இருக்க வேண்டுமோ... அங்கெல்லாம்... அவளுடைய உடம்பு கீழ்படிந்து இருந்தது. சல்வார் கம்மீசுக்குள் சிக்கியிருந்த புவனாவுக்கு வயது இருபத்தி மூன்று இருக்கலாம். ஆனால், கடந்த மூன்று வருஷமாய் இருபத்தியோராவது பிறந்த நாளையே கொண்டாடி வருகிறாள்.

'நான் போட்ட லெட்டர் மைத்ரேயிக்குக் கிடைத்திருக்குமா? கிடைத்திருந்தால் நிச்சயமாய் காரை எடுத்துக் கொண்டு ஸ்டேசனுக்கு வந்திருப்பாள்... இல்லாவிட்டால் டாக்சி பிடித்து சயானில் இருக்கும் அவளுடைய பங்களாவுக்கு போக வேண்டியதுதான்!'

யோசித்துக் கொண்டே நடந்தாள் புவனா. ரோலர் சூட்கேஸ் அவளுக்குப் பின்னால் ஒரு நாய்க்குட்டி மாதிரி தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. புவனாவுக்கு பம்பாய் ஒன்றும் புதிய ஊர் இல்லை. காலேஜ் படிக்கும்போது எஜுகேசன் டூரில் ஒரு தடவை பம்பாய் வந்திருக்கிறாள். வாரம் பத்து நாட்கள் தங்கி அலுக்க அலுக்க பம்பாயைச் சுற்றிப் பார்த்திருக்கிறாள்.

எக்சிட் கேட் நெருங்கிக் கொண்டிருந்தது.

'எங்கே மைத்ரேயியைக் காணோம்...?'

'போட்ட லெட்டர் கிடைக்கவில்லையோ...? சே.. சிக்கனம் பார்க்காமல் ஒரு எஸ்.டி.டி. போட்டுப் பேசியிருக்க வேண்டும்...'

கேட்டில் நின்றிருந்த வழுக்கைத்தலை ரயில்வே ஆசாமியிடம் டிக்கட்டைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தாள் புவனா. புறநகர் ரயில்களைப் பிடிக்கிற கூட்டம் ஆண் பெண் வித்தியாசமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது.

கும்பலில் நுழைந்து ரோலர் சூட்கேஸை சிரமமாய் இழுத்துக் கொண்டு ஊர்ந்தபோது புவனாவின் பார்வைக்கு உயர்த்திப் பிடிக்கப்பட்ட அந்த அட்டை தெரிந்தது. 'புவனா ப்ரம் சென்னை!'

அட்டையை நோக்கி வேகவேகமாய்ப் போனாள் புவனா. இளைஞன் ஒருவன் அட்டையை ஏந்தியபடி கும்பலில் பார்வையைப் போட்டபடி நின்றிருந்தான்.

அவனுக்கு முன்பாய் போய் நின்றாள் புவனா.

'அயாம் புவனா. ப்ரம் சென்னை...'

அந்த இளைஞன் அட்டையைத் தாழ்த்திக் கொண்டு புன்னகைத்தான். ''மிஸ் மைத்ரேயியோட ப்ரெண்ட் நீங்க தானே?''

''நானேதான்!''

''வாங்க... காருக்குப் போகலாம்...''

நகர முயன்றவனை, ''எக்ஸ்க்யூஸ் மீ...'' என்று சொல்லி நிறுத்தினாள் புவனா. ''நீங்க யார்னு...?''

''சாரி... ஐயாம் பால முரளி... மிஸ் மைத்ரேயியோட பாதர் உயிரோடு இருந்த காலத்திலிருந்தே அந்த பங்களாவுக்கு ஹவுஸ் விண்மார்க் மானேஜரா இருக்கேன்.



நேட்டிவ் தமிழ்நாடுதான். கும்பகோணத்துக்குப் ப[illegible] நீடாமங்கலம். வாங்க பேசிக்கிட்டே காருக்குப் போகலாம்[illegible]

இருவரும் நடந்தார்கள்.

''ஸ்டேசனுக்கு மைத்ரேயி வருவாள்னு நினைத்தேன்!''

''அவங்களுக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை!''

''ஏன் உடம்புக்கு என்ன?''

''பீவரிஷ்தான்... ரெண்டு நாளைக்கு பெட் ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லிட்டார். அதையும் மீறி அவங்க புறப்பட்டு வரத்தான் இருந்தாங்க... நான்தான் வேண்டாம்னு சொல்லிட்டு காரை எடுத்துகிட்டு வந்தேன்!''

பார்க்கிங்கில் பல ஜாதி கார்கள் சோடியம் வேபர் வெளிச்சத்தில் குளித்து மின்னிக் கொண்டிருக்க, வெள்ளை நிற காண்டசா கிளாசிக்கை நெருங்கினான் பாலமுரளி. ரோலர் சூட்கேசை டிக்கியில் வைத்துவிட்டு பின்பக்கம் கதவைத் திறந்துவிட்டான்.

''இதுக்கு முன்னாடி பம்பாய்க்கு எப்ப வந்தீங்க?''

''மூணு வருசத்துக்கு முந்தி...''

''மிஸ் மைத்ரேயியும், நீங்களும் காலேஜ் மேட்ஸ் இல்லையா?''

''ஆமா...''

''அவங்களை என்னிக்கு கடைசியாப் பார்த்தீங்க...?''

''ரெண்டு வருசத்துக்கு முந்தி... சிங்கப்பூர் போறதுக்காக அவள் சென்னை வந்தப்ப பார்த்தது... அதுக்குப்புறம் இப்பத்தான் பார்க்கப் போறேன்!''

''இப் யூ டோண்ட் மைண்ட் ஒரு கேள்வி... கேட்கலாமா?''

''ப்ளீஸ்...?''

''எதுக்காக மும்பை வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?''

''தெரிஞ்சுக்கலாமே...? யுரேகா சின்த்தடிக் கம்பெனியைப் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''பிரமாதமா கேள்விப்பட்டிருக்கேன். வொர்லியில் இருக்கே அது தானே?''

''அதேதான். அங்கே எனக்கு ரிசப்ஷனிஸ்ட் வேலைக்கான இன்டர்வியூ வந்திருக்கு. அந்த இன்டர்வியூ அட்டெண்ட் பண்ணத்தான் வந்திருக்கேன்!''

''ஈசிட்?'' திரும்பிப் பார்த்து புருவங்களை உயர்த்தினான் பாலமுரளி. பிறகு புன்னகையோடு சொன்னான். ''உங்களுக்கு அந்த வேலை கிடைச்சிடும்...''

''எப்படி சொல்றீங்க?''

''அழகா இருக்கீங்களே?''

புவனா புன்னகைத்தாள். ''உங்க வாய் முகூர்த்தப்படி எனக்கு வேலை கிடைச்சா என்னோட முதல் நன்றி உங்களுக்குத்தான்.''

''ரெக்கமன்டேஷன் ஏதாவது பிடிச்சிருக்கீங்களா?''

''இல்லை''

''அங்கே-எம்.டியை ட்ரை பண்ணலாமா?''

''வேண்டாம். என்னோட மெரிட்டுக்கு வேலை கிடைச்சா கிடைக்கட்டும். இல்லேன்னா வேண்டாம்!''

''உங்க டிகிரி சப்ஜெக்ட் என்ன?''

''சோசியாலஜி... பர்ஸ்ட்க்ளாஸ்''

கார் சயான் ஏரியாவுக்குள் நுழைந்தது. வைகறை இருட்டில் பங்களாக்கள் மவுனமாய் வந்தன. ரோட்டோர பேவ்மெண்டில் சிலர் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்கள். பாலமுரளி ஒரு வளைவில் காரைத் திருப்பிக் கொண்டே சொன்னான்; ''மும்பை முன்னே மாதிரி இல்லை. இப்போ அது ஓர் இண்டர்நேஷனல் ப்ராட்சிட்டி. ரவுடீஸ், குண்டாஸ் அதிகம். ஒரு பெண் மும்பையில் தனியா தங்கி வேலை பார்க்கிறது கஷ்டம். நீங்க ஏன் சென்னையிலேயே ஒரு வேலையைத் தேடிக்கக் கூடாது?''

புவனா சிரித்தாள்.

''மும்பையில நான் தனியா தங்கி வேலை பார்க்கப் போறதா உங்ககிட்டே யார் சொன்னது?''

''பின்னே?''

''எனக்கு இங்கே வேலை கிடைச்சா சென்னைல வேலை பார்க்கிற என்னோட கணவர் மும்பைக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டு ஒரு வாரத்துல வந்துடுவார்!''

கார் திடுமென்று பிரேக்கிட்டு நின்றது. பாலமுரளி நெற்றி சுருங்க கேட்டான். ''நீங்க மேரீடு?''

''ஆமா''

''நீங்க சொல்லவே இல்லையே?''

புவனா புன்னகைத்தாள். ''நீங்க கேக்கலை, நான் சொல்லலை.''

''உங்க ஹஸ்பெண்ட் சென்னைல என்ன ஜாப்ல இருக்கார்?''

''ஒரு நேஷனலைஸ்ட் பாங்க்ல அக்கவுண்டண்டா இருக்கார்!''

''பேரு?''

''கிருஷ்ணகுமார்''

''எனி கிட்ஸ்?''

''கல்யாணமாகி ஆறு மாதம்தான் ஆகுது.''

''ஆச்சரியமாகிருக்கு!''

''எதைச் சொல்றீங்க?''

''இந்த மோசமான மும்பைக்கு அழகான ஓர் இளம் மனைவியை... தன்னந்தனியா அனுப்பி வெச்சிருக்கிற உங்க ஹஸ்பெண்டோட தைரியத்தைச் சொல்றேன்!''

''அவரும் என்கூட வரத்தான் இருந்தார். கடைசி நேரத்துல பாங்க்ல ப்ளையிங் ஸ்குவாட் ஆடிட்டிங். அவரால வர முடியலை... காரை கிளப்பலாமே?''



பாலமுரளி காரை நகர்த்தினான்.

''உங்களுக்கு இங்கே ரிசப்ஷனிஸ்ட் வேலை கிடைச்சா அவருக்கு உடனடியா டிரான்ஸ்பர் கிடைக்குமா?''

''பத்தே நாள்ல அவர் வாங்கிடுவார்!''

''எப்படி?''

''அவருக்கு இது டிரான்ஸ்பர் நேரம். எந்த ஊருக்கு போகப் பிரியப்படறீங்கன்னு ஹெட் ஆபிசிலிருந்து கேட்டிருக்காங்க. அதனாலே எனக்கு மும்பையில வேலை கிடைச்சா, அவரும் இம்மீடியட்டா மும்பைக்கு டிரான்ஸ்பர் கேட்டு அப்ளை பண்ணிடுவார்!''

''ப்ரி ப்ளானோடதான் வந்திருக்கீங்க.''

''ஆமா.''

''உங்களுக்கு கல்யாணமான நியூஸ்தான் எனக்கு அதிர்ச்சி. அந்த அதிர்ச்சி எனக்கு இன்னிக்கு பூராவும் இருக்கும்!''

''ஏன் அப்படி?''

''உண்மையைச் சொல்லட்டுங்களா?''

''ம்.''

''உங்களைக் காதலிக்கலாமான்னு யோசனை பண்ணிட்டிருந்தேன்!''

''நான் தப்பிச்சேன்'' புவனா சிரித்தாள்.

கார் வளைவில் திரும்பி எதிர்பட்ட பங்களாவுக்குள் நுழைந்து அரையிருட்டான போர்டிகோவில் நின்று இன்ஜினின் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

புவனா இறங்கினாள்.

பாலமுரளி அவளை வழிநடத்தி உள்ளே கூட்டிப்போய் மாடிப்படிகளைக் காட்டினான். ''மேலே போங்க... மிஸ் மைத்ரேயி உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்காங்க.''

புவனா படிகளில் ஏறினாள். பங்களா முழுக்க அசாத்திய நிசப்தம்.

மாடி வராந்தாவுக்கு வந்தாள் புவனா. பக்கவாட்டு தோட்டத்து மரங்களில் பட்சி வர்க்கம் கூச்சல் போட்டுக் கொண்டிருக்க புவனா மெதுவாய் நடந்து சாத்தியிருந்த அந்த அறைக் கதவுக்கு முன்பாய் வந்து நின்றாள்.

கதவை மெல்லத் தள்ளினாள்.

அறை ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் இருந்தது. அந்த மெலிதான வெளிச்சத்திலும் கட்டில் காலியாய் இருப்பது தெரிந்தது.

'பாத்ரூமுக்குள் போயிருப்பாளோ?'

யோசனையாய் உள்ளே நுழைந்து பார்வையைத் திருப்பியவள் -

திடுக்கிட்டாள்.

இதயத்துக்குள் ஓர் இரைச்சல் உற்பத்தியாயிற்று.




புவனா இமை கொட்டாமல் விரித்த கண்களோடு பார்த்துக் கொண்டிருக்க, மைத்ரேயி சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு பக்கத்தில் வந்தாள். பலவீனமான புன்னகையோடு ''வா புவனா...'' என்றாள்.

புவனா பதற்றமாய் அவளை நெருங்கி தோள்களைப் பற்றினாள். குரல் நடுங்கக் கேட்டாள், ''என்னடி இது கோலம்?''

''ரயில் பயணமெல்லாம் எப்படி இருந்தது?''

''மைத்ரேயி! நான் கேட்டதுக்கு பதில் சொல்லு? எதுக்காக இந்த சக்கர நாற்காலி வாசம்? உன்னோட காலுக்கு என்னாச்சு?''

''சொல்றேன். மொதல்ல அப்படி உட்கார்...'' கட்டிலின் மூலையில் அவளை உட்கார்த்தி வைத்தாள் மைத்ரேயி. ''மும்பைக்கு நீ வந்ததும் வராததுமா உனக்கு நான் ஓர் அதிர்ச்சிப் பொருளாயிட்டேன் இல்லையா புவனா? இந்த சக்கர நாற்காலி வாசம், நானே எதிர்பார்க்காத ஒண்ணு... போன மாசத்துல ஒரு நாள் திடீரென்று ரெண்டு காலும் முழங்காலுக்கு கீழே வலிக்க ஆரம்பிச்சது. சாதாரண கால் வலின்னு நினைச்சு ஒரு ஆயின்மெண்டை போட்டு தேய்ச்சேன்... ஆனா, கால் வலி நிக்கலை. பேமிலி டாக்டர் வந்து ஓர் ஊசி போட்டார். வலி குறைஞ்சது. உடனே தூக்கமும் வந்தது. தூங்கிட்டேன். மறுநாள் காலையில கண்விழிச்ச படுக்கையை விட்டு இறங்கும்போது தடால்னு விழுந்துட்டேன். காரணம் ரெண்டு காலிலும் முழங்காலுக்கு கீழே உணர்ச்சியே இல்லாம போயிடுச்சு. அதுக்கப்புறம் எவ்வளவோ டாக்டர்ஸ்! எத்தனையோ மருந்து! ஒண்ணும் பிரயோஜனப்படலை. சக்கர நாற்காலியில் உட்கார்ந்துட்டேன். ஒரு மாசமா இதுதான் எக்கு உலகம்!''

புவனா கண்களில் நீர் கோர்த்தாள்.

''மைத்ரேயி! உனக்கா இப்படி?''

''ஏன் எனக்கெல்லாம் இந்த நிலைமை வரக்கூடாதா? நான் என்ன தேவதையா நோயும், வயசும் என் பக்கத்துல வராம இருக்கிறதுக்கு?'' அவள் சிரித்தாள்.

''எனக்கு ஒரு லெட்டர் போட்டிருக்கலாமே?''

''போட்டிருந்தா உன்னால என்ன செய்திருக்க முடியும்? பிழியப் பிழிய நாலஞ்சு பக்கத்துக்கு லெட்டர் எழுதியிருப்பே. போன் போட்டு ஆறுதலா பேசியிருப்பே. முடிஞ்சா ஒரு தரம் வந்து என்னைப் பார்த்துட்டுப் போயிருப்பே... அவ்வளவுதான்! புதுசா கல்யாணமான உனக்கு என்னோட இந்த அவலத்தைத் தெரியப்படுத்த நான் விரும்பலை! அது சரி, உன்னோட மேரேஜ் லைப்பெல்லாம் எப்படி இருக்கு? உன்னோட பெட்டர் ஹாப் எப்படி நடந்துகிறார்...? ஐ மீன் ராத்திரியில'' - சொல்லிவிட்டு சிரித்தாள் மைத்ரேயி.



புவனா சிரிக்கிற அவளையே பார்த்தாள்.

''என்னடி பார்க்கிறே?''

''உன்னால எப்படி சிரிக்க முடியுது?''

''ஏன் சிரிக்காம என்ன? வாழ்க்கையில எதையுமே சுலபமா எடுத்துகிட்டா தாராளமா சிரிக்கலாம். என்னோட அம்மா சாகும்போது எனக்கு வயசு நாலு. செத்துப் போறதுன்னா என்னான்னு தெரியாத வயசு. அம்மா சாமிகிட்ட தான் போயிருப்பான்னு என்னோட பத்தாவது வயசு வரைக்கும் நம்பிட்டிருந்தேன். அப்பா இறக்கும் போது சாவுங்கிறது இந்த உலகத்துல சாசுவதமானது. யாரும் அது கிட்டயிருந்து தப்பிக்க முடியாதுன்னு பக்குவம் அடைஞ்ச மனசு எனக்கு. அதனால அப்பவும் நான் அழலை. இப்ப எனக்கு கிடைச்சிருக்கிற இந்தசக்கர நாற்காலி வாசம் ஆரம்பத்துல எனக்கு அதிர்ச்சிதான். ஆனா, இப்ப இதுவும் பழகிப்போச்சு. ஒரே ஒரு சிரமம் என்னான்னா டாய்லெட் போக, குளிக்க வேலைக்காரி சோனியைக் கூப்பிடணும். அவ்வளவுதான்.''

அறை வாசலில் நிழல் தட்டியது.

புவனா திரும்பினாள்.

பாலமுரளி பவ்யமாய் நின்றிருந்தான்.

''மேடம், மிசஸ் புவனாவுக்கு நீங்க சொன்ன மாதிரியே பக்கத்து அறையை ஏற்பாடு பண்ணியிருக்கேன்!''

''புவனாவோட லக்கேஜ்?''

''ரூம்ல கொண்டு போய் வெச்சுட்டேன்.''

''தாங்க்யூ மானேஜர்! நீங்க குவார்ட்டர்சுக்கு போலாம். ஆபீசுக்கு புறப்பட்டு போகும்போது ஒரு நிமிஷம் வந்து என்னைப் பார்த்துட்டு போங்க!''

''எஸ் மேடம்!''

நகர்ந்து போகிற அவனையே புவனா முறைக்க, மைத்ரேயி அவளுடைய தோளைத் தட்டினாள். ''மானேஜர் பாலமுரளி என்னைப் பத்தின உண்மையை உன்கிட்ட மறைச்சிருப்பார். அதுக்காக அவர் மேல் கோபப்படாதே. உன்கிட்ட எதையும் சொல்லக் கூடாதுங்கிறது என்னோட ஆர்டர்!''

புவனா பெருமூச்சொன்றை விட்டபடி மைத்ரேயியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். ''உனக்கு இந்த கால் ரெண்டும் எப்ப சரியாகும்? டாக்டர்ஸ் என்னதான் சொல்றாங்க?''

''டாக்டர்ஸ் எதை எதையோ சொல்லிட்டு இருக்காங்க. எந்த நிமிஷத்திலும் காலுக்கு உணர்ச்சி வந்து நான் பழையபடி நடக்கலாமாம். ஆனா, எனக்கு நம்பிக்கை இல்லை. வெட்டிப்போட்ட வாழைத்தண்டும், என்னோட கால்களும் சமம்! பாத்தியா, ரெண்டு நாள் ரயில் பயணம் செய்து டயர்டா வந்திருக்கிற உனக்கு ஒரு கப் காப்பியை கூட தராமே என்னைப் பத்தி புலம்பிட்டிருக்கேன். நீ வழக்கமா காலையிலே என்ன சாப்பிடுவே? டீயா, காபியா?''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்!''

மைத்ரேயி சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு போய் டீபாயின் மேலிருந்த இண்டர்காம் ரிசீவரை எடுத்தாள். ஒரு பட்டனைத் தட்டிவிட்டுப் பேசினாள்.

''சோனி! தோ சாய் ஹோனா ஜல்தி லே கே ஆனா!''

''சாந் நஹி! காபி சாஹியே!''

ரிசீவரை வைத்துவிட்டு புவனாவிடம் திரும்பினாள். ''காபி வர்றதுக்குள்ளஉன்னைப்பத்தி கொஞ்சம் பேசுவோமா? மும்பையில உனக்கு எந்த கம்பெனியில இண்டர்வியூ?''

''யுரேகா சின்த்தடிக் கம்பெனி!''

''ரிசப்ஷனிஸ்ட் போஸ்ட்டா?''

''ஆமா!''

''கிடைக்குமா?''

''நம்பிக்கை இருக்கு!''

''லெட்டர்ல எழுதியிருந்தபடி உனக்கு அங்கே வேலை கிடைச்சா உன்னோட ஹஸ்பெண்டுக்கும் டிரான்ஸ்பர் ஆர்டர் கிடைச்சிடும் இல்லையா?''

''ஆமா!''

''அப்படி நீயும் உன்னோட ஹஸ்பெண்டும் மும்பையில வந்து செட்டில் ஆயிட்டா என்னை விட சந்தோஷப்படறவங்க யாருமில்லை.''

''மைத்ரேயி! உன்னை இந்த நிலைமையில பார்க்கும் போது என் மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கு.''

''இன்னிக்கு முதல் நாள் பார்க்கும்போது அப்படித்தான் இருக்கும். ரெண்டு நாள் போனதும் சரியாப் போயிடும்.''

வேலைக்காரி சோனி காபி கோப்பைகளோடு உள்ளே வந்தாள். வேலைக்காரியாக இருந்தாலும் 'பளிச்'சென்று இருந்தாள். அந்நேரத்துக்கே குளித்திருந்தாள்.

''இவதான் சோனி. இருபத்தி நாலு மணி நேரமும் இவளுக்கு இங்கேதான் உத்தியோகம். என்னைக் குளிப்பாட்டறது, பாத்ருமுக்கு கூட்டிட்டு போறது எல்லாமே இவதான். தமிழ் பேசத் தெரியாது. ஆனா, நாம பேசினா புரிஞ்சிக்குவா. நீ வரப்போறதைப் பத்தி முன்னாடியே இவகிட்ட சொல்லி வச்சிருக்கேன்.''

சோனி புவனாவைப் பார்த்து அழகான பல்வரிசையைக் காட்டி, ''நமஸ்தே'' சொல்லி ஒரு காபி கோப்பையை எடுத்து அவளிடம் நீட்டினாள். புவனா வாங்கிக் கொண்டு ஒரு வாய் உறிஞ்சினாள். காபி அபாரமாய் மணத்தது.

மைத்ரேயி சோனியை ஏறிட்டபடி கேட்டாள் இந்தியில்: ''பக்கத்து ரூமை சுத்தம் பண்ணிட்டியா?''

''ம்.ராத்திரியே பண்ணிட்டேன்!''

''படுக்கை விரிப்பெல்லாம்?''

''மாத்திட்டேன்!''



''சரி ஹீட்டரைப் போட்டு விடு.''

சோனி நகர்ந்து போனதும் புவனாவிடம் திரும்பினாள் மைத்ரேயி. ''இதோ பார், காபி குடிச்சுட்டு உன்னோட ரூமுக்குப் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. குளிச்சிட்டு எட்டு மணி சுமாருக்கு என்னோட ரூமுக்கு வா. ஒண்ணா பிரேக் பாஸ்ட் சாப்பிடுவோம்! ஆமா, உனக்கு என்னிக்கு இண்டர்வியூ?''

''நாளைக்கு.''

''இன்னிக்கு நீ ப்ரீதானே?''

''ஆமா''

''என்கிட்ட நாலைஞ்சு நல்ல காசெட் இருக்கு. போட்டு பார்க்கலாம்.''

''மைத்ரேயி.''

''ம்.''

''நான் சென்னைக்கு போன் போட்டு என் ஹஸ்பென்டோட பேசணும். போன் பண்ணிக்கலாமா?''

''என்ன கேள்விடி இது? உன்னோட ரூம்லேயே போன் இருக்கு.''

தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தாள் புவனா. அறை விஸ்தாரமாய் ஒரு பைவ் ஸ்டார் ஓட்டலின் அறை மாதிரி இருந்தது.

கதவை சாத்திக் கொண்டு டெலிபோனை நெருங்கி ரிசீவரை கையிலெடுத்துக் கொண்டு டெலிபோன் எண்ணைச் சுழற்றினாள்.

இரண்டு தடவை என்கேஜ்ட் டோனுக்குப் பிறகு மூன்றாவது தடவை ரிங் அடித்தது. முதல் ரிங்கிலேயே ரிசீவர் எடுக்கப்பட்டு கணவன் கிருஷ்ணகுமாரின் குரல் கேட்டது. ''அலோ''

''என்னங்க! நான் புவனா''

''ஓ என் பிரியத்துக்குரிய பெண்டாட்டியா? குட்மார்னிங்!''

''இப்பத்தான் எந்திரிச்சீங்களா?''

''ம். எந்திரிச்சு கொட்டாவி விட்டுகிட்டு இருந்தேன். உன்னோட போன். ரயில் பயணம் எப்படி இருந்தது? உன்னோட ஆருயிர்த்தோழி ஸ்டேசனுக்கு வந்திருந் தாளா?''

''ம்ம்''

''என்ன குரல்ல சுரத்தையே காணோம்? காலங் கார்த்தாலே போன் பண்ணியிருக்கே. ஒரு முத்தம் குடேன்''

''என்னங்க! நான் இப்போ சந்தோமான மூட்ல இல்லை.''

''என்னாச்சு?''

மைத்ரேயி இருக்கும் நிலைமையை சுருக்கமா சொன்னான் புவனா. மறுமுனையில் கிருஷ்ணகுமாரின் உற்சாகம் வடிந்து போயிற்று.

''அடப்பாவமே! அப்பா, அம்மா, சொந்த பந்தம் எதுவும் இல்லாத அந்தப் பொண்ணுக்கு இப்படியொரு நிலைமையா? கேட்கும்போதே மனசுக்குள்ளே என்னவோ பண்ணுதே.''

''இப்ப நான் உங்களுக்குப் போன் செய்தது எதுக்காகத் தெரியுமா?''

''எதுக்கு?''

''நான் அந்த இன்டர்வியூவை முடிச்ச பிறகு ஒரு வேளை எனக்கு வேலை கிடைக்கலைன்னா உடனே நான் சென்னை புறப்பட்டு வந்துட மாட்டேன்.''

''புரியுது. ரெண்டு வாரமாவது உன் தோழி கூட தங்கியிருந்து அவளுக்குச் சந்தோஷத்தைக் குடுத்துட்டு வர்றேன்னு சொல்றே?''

''ஆமா.''

''தாராளமா இருந்து வா. உன்னோட தோழி பெரிய பணக்காரி. கோடிக்கணக்கான ரூபாய்க்கு சொத்துக் காரின்னு சொல்லியிருக்கே. அவளாலே ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு போய் கால்களைக் குணப்படுத்திக்க முடியாதா? வெளிநாட்டுல இருக்கிற டாக்டர்ஸ் கடவுள் மாதிரி. தே கேன் டூ வொண்டர்ஸ். உன்னோட தோழியை அமெரிக்காவில் இருக்கிற நோவா ஆஸ்பிடலுக்கு போகச் சொல்லு. டாலர் எக்கச்சக்கமா செலவழியும். இருந்தாலும் பரவாயில்லை. ரெண்டே மாசம். அஸ்வினி நாச்சப்பா மாதிரி ஓடலாம்.''

''அவகிட்ட சொல்றேன். நாளைக்கு இன்டர்வியூவை அட்டென்ட் பண்ணிட்டு மறுபடியும் உங்களுக்கு போன் பண்றேன். சாயந்தரம் ஏழு மணிக்கு மேல போனுக்கு பக்கத்துல இருங்க.''

''சரி.''

புவனா ரிசீவரை வைத்துவிட்டு பக்கத்திலிருந்த கூரை நாற்காலிக்குள் ஆயாசமாய் திணிந்தாள். மைத்ரேயியின் சக்கர நாற்காலி கோலம் அவளுடைய மனசுக்குள் புழுக்கமாய் இருந்தது.

'இவ்வளவு பெரிய பங்களா... கார்... சொத்துக்கள் இருந்து என்ன பிரயோஜனம்? அவளுடைய உலகம் சக்கர நாற்காலிக்குள் அடங்கிவிட்டதே?'

யோசித்துக் கொண்டே பல்லைத் தேய்த்தாள். குளித்தாள். எளிமையான ஒரு சேலைக்குள் நுழைந்து நெற்றியில் பொட்டிட்டுக் கொள்வதற்காக கண்ணாடி முன் வந்து நின்றபோது -

மைத்ரேயியின் அறையிலிருந்து அந்தப் பேச்சுக் குரல் கேட்டது. சற்று உரத்த குரல்கள். ஒன்று ஆண் குரல். இன்னொன்று மைத்ரேயியின் குரல்.

''எனக்கு பணம் வேணும் லாயர் சார்.''

''சாரிம்மா. இந்த மாச கோட்டா உனக்கு முடிஞ்சுது. வர்ற ஒண்ணாம் தேதி வரைக்கும் ஒரு பைசா கூட உனக்கு குடுக்க முடியாது.''



''பணம் குடுக்க மாட்டிங்களா?''

''ஊஹூம்''

அடுத்த விநாடி -

கண்ணாடி ஒன்று பெரிதாய் உடையும் சத்தம் கேட்டது.



**க**ண்ணாடி உடைபடும் சத்தம் கேட்டதும் சில விநாடிகளுக்கு நிசப்தம். பின் ஆண் குரல் தொடர்ந்தது. ''இதோ பாரம்மா மைத்ரேயி... நீ என் மேல கோபப்பட்டு ஒரு பிரயோஜனமும் இல்லை. உங்கப்பா எழுதி வெச்சிருக்கிற உயில் வாசகப்படிதான் பாங்கிலிருந்து பணத்தை எடுக்க முடியும்...''

மைத்ரேயி கத்தினாள். ''பெரிய உயில் வாசகம்.... எங்கப்பா பைத்தியக்காரத்தனமா உயில் எழுதி வெச்சா நீங்களும் அதை அப்படியே பாலோ பண்ணியாகணுமா?''

''சட்டப்படி பண்ணியாகணுமே?'' சம்பாஷணை தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க, புவனா தன்னுடைய அறையினின்று வெளிப்பட்டு மைத்ரேயியின் அறை வாசலில் வந்து நின்றாள்.

புவனாவைப் பார்த்ததும், நரைத்த தலையும், பவர்கிளாசுமாய் இருந்த லாயர், பேச்சை நிறுத்திக் கொள்ள சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த மைத்ரேயி கஷ்டமாய், அசந்தர்ப்பமாய் புன்னகைத்தாள்.

''என்ன புவனா அதுக்குள்ளே குளிச்சு ரெடியாயிட்டியா?''

''ம்...''

''தூங்கி ரெஸ்ட் எடுக்கச் சொன்னேனே...?''

''தூக்கம் வரலை...''

புவனாவும், மைத்ரேயும் பேசிக் கொண்டிருக்கும் போதே லாயர் வெளியேறிப் போனார். அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த புவனா பின் மைத்ரேயியிடம் திரும்பினாள்.

''போனவர் உங்க குடும்ப லாயரா...?''

''ஆமா... லாயர் லட்சுமிபதி...அப்பாவுக்கு பால்ய காலத்து ஸ்நேகிதம்...''

''உங்களுக்குள்ளே என்ன சண்டை...?''

''ஒண்ணுமில்லையே...''

''நீங்க ரெண்டு பேரும் பேசினதை நான் கேட்டேன்...''

''அது சும்மா... விளையாட்டுக்கு சண்டை போட்டுக்குவோம்... லாயர் எனக்கு அங்கிள் மாதிரி...''

''விளையாட்டுக்குக்கூட கண்ணாடியை உடைப்பியா...?''

''அது தவறி விழுந்துடுச்சு...'' சொன்னவள் உட்பக்கமாய் பார்த்து குரல் கொடுத்தாள். ''சோனி! டிபனை எடுத்து வை...''

''எனக்கு டிபன் வேண்டாம். உண்மைதான் வேணும்...''

''என்ன உண்மை...?''

''இங்கே என்ன நடக்குது? ஏராளமான சொத்துக்கு ஒரே வாரிசான நீ... செலவுக்கு பணம் வேணும்னு லாயர் கிட்ட ஏன் சண்டை போட்டுகிட்டு இருக்கே?''

மைத்ரேயி சிரித்தாள்.

''என்னடி சிரிக்கறே?''

''இதெல்லாம் உள்நாட்டு விவகாரம், கண்டுக்காதே...''

''அப்படி கண்டுக்காம என்னால இருக்க முடியாது. ஏன்னா, உன்னை நான் வேத்து மனுஷியா நினைச்சு பார்த்ததில்லை. உனக்கு உன்னோட சொத்தாலே வீட்லேயே ஏதோ பிரச்சனை. அந்தப் பிரச்சனையை நீ என்கிட்டே சொல்லியாகணும். சொல்லலைன்னா... இந்த வீட்ல ஒரு நிமிஷம் கூட நான் தங்கமாட்டேன்...''

''இனி நீ விடமாட்டியே? சரி வா... மொதல்ல டிபன் சாப்பிடு... அப்புறமா பேசுவோம்...''

''ஊஹூம்... மாட்டேன்... மொதல்ல பேசிட்டு அப்புறமா டிபன் சாப்பிடுவோம்...!''

''இங்கே எதையும் பேச வேண்டாம் புவனா... நாம் டிபன் சாப்பிட்டுட்டு கமலா நேரு பார்க்குக்குப் போயிடுவோம்... அந்த நிசப்தமான சூழ்நிலையில் உட்கார்ந்து பேசிட்டு வரலாம்...''

''நீ எப்படி...!''

''தாங்கு கட்டைகளோடு என்னால உன்னோட வேகத்துக்கு நடக்க முடியும். உனக்கு கார் ஓட்டத் தெரியுமில்ல''

''தெரியும்!''

''அப்படீன்னா டிரைவர் வேண்டாம் -''

''இந்த மும்பை டிராபிக்ல என்னால கார் ஓட்ட முடியாதுன்னு நினைக்கிறேன்!''

''தாராளமா நீ ஓட்டலாம் - சென்னையை விட மும்பையில் ரோடுகள் அகலம்... நூல் பிடிச்ச மாதிரி நேர் நேரான ரோடுகள், பிரேக்கையே உபயோகிக்காம நீ போயிட்டிருக்கலாம் - அதுவுமில்லாம நாம இப்ப போகக்கூடிய இடம் மெரீன் டிரைவ். சோபிஸ்ட்டிகேட்டட் ஏரியா.''

''எத்தனை மணிக்கு புறப்படறோம்?''

''டிபன் சாப்பிட்டதுமே... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துகிட்டு பத்து மணிக்கெல்லாம் கிளம்பிடுவோம்...''

சொன்னவள் சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு போய் டீபாயின் மேலிருந்த இண்டர்காம் ரிசீவரை எடுத்து பட்டனைத் தட்டினாள்.

''அலோ''

''மேடம்'' மானேஜர் பாலமுரளியின் குரல் கேட்டது.



''மானேஜர்! பத்து மணிக்கு கார் வேணும் - நானும் புவனாவும் வெளியே போறோம்!''

''வெளியேன்னா எங்கே மேடம்?''

''சும்மா - ஜாலி டிரைவிங்தான் - கமலா நேரு பார்க், ஜூஹூபீச் போயிட்டு வர்றோம் - காரை தயாரா வையுங்க - டிரைவர் வேண்டாம்!''

''டிரைவிங்?''

''புவனாவுக்கு டிரைவிங் தெரியும்!''

''எஸ் மேடம் - நான் காரைத் தயாரா வெச்சுடறேன்!''

சரியாய் பத்து மணி -

போர்டிகோவில் அந்த பிஸ்கட் நிற கார் நின்றிருக்க தாங்கு கட்டைகளோடு விசுக்விசுக்கென்று நடந்து வந்த மைத்ரேயி - காரின் பின் சீட்டில் கட்டைகளைக் கிடத்திவிட்டு முன் சீட்டில் தாவி உட்கார்ந்தாள். புவனா டிரைவிங் சீட்டுக்குப் போய் ஸ்டியரிங்கைப் பிடித்தாள்.

''போலாமா?''

''ம்''

இன்ஜினை உசுப்பி காரை நகர்த்தினாள் புவனா. கார் கான்க்ரீட் சிமெண்ட் பரப்பில் ஓடி காம்பவுண்ட் கேட்டைத் தாண்டி ரோட்டில் பிரவேசித்து வேகம் எடுத்தது.

''மெரீன் டிரைவ் இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

''பத்து கிலோ மீட்டர் இருக்கும் - நீ ஸ்ட்ரெயிட்டா போயி தேர்ட் கார்னரில் திரும்பினா மெரீன் டிரைவுக்கு போற ஹை ரோடு வரும்!''

கார் சுகமாய் பீறிட்டு ஓடியது.

''உன் குடும்பத்துப் பிரச்சனையை கார்ல போயிகிட்டே பேசலாமே?''

''வேண்டாம் - பார்க்குக்குப் போய்ப் பேசுவோம்.''

''உனக்கு ரொம்பவும் அழுத்தம்டி.''

''மும்பை உனக்கு பிடிச்சிருக்கா?''

''ஒரு வகையில் பிடிச்சிருக்கு.''

''எந்த வகை''

''சினிமாவில் வெளிநாடுகளைப் பார்க்கும்போது பிரமிப்பாய் இருக்கும். உயரமான கட்டிடங்கள் - அடுத்த பிளாட்கள்... மந்தை மந்தையா வரிசையா போற கார்கள் இதெல்லாம் வெளிநாடுகளுக்கு சவால் விடற மாதிரி மும்பாயிலும் இருக்கே...''

''இந்தியாவிலேயே எனக்கு பிடிக்காத ஊர் மும்பைதான்!''

''ஏண்டி அப்படிச் சொல்றே...?''

''இந்த ஊர்ல இருக்கிற ஒவ்வொரு மனுசனும் ரோபோட் மாதிரிதான். கொஞ்சம் பிளாட்பாரம் பக்கமா தலையைத் திருப்பிப்பாரு... ஒவ்வொருத்தனும் கீ கொடுத்த இயந்திர பொம்மை மாதிரி வேகவேகமா போயிட்டிருப்பான்... மனிதாபிமானம் கொஞ்சம் கூட

கிடையாது. யாராவது அடிபட்டுக் கிடந்தா பார்த்துட்டுப் போயிட்டே இருப்பான் - அப்புறம் போதை மருந்து பழக்கம் அதிகமா இருக்கிற சிட்டி மும்பைதான். காரணம் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ். உனக்கு இன்னொரு விசயம் தெரியுமா?''

''என்ன?''

''காலேஜ்ல படிக்கிற பாதி பெண்களுக்கு இல்லீகல் காண்டாக்ட்ஸ் உண்டு. தலைவலிக்கு மாத்திரை சாப்பிடற மாதிரி அபார்ஷன் இங்கே சர்வ சாதாரணம்.''

கார் சிக்னல்களில் தயங்கி, பச்சையில் வேகம் பிடித்து. மைத்ரேயியின் டைரக்ஷனுக்குக் கட்டுப்பட்டு ஓடியது.

பதினைந்து நிமிஷ பயணம்.

மெரீன் டிரைவ் வந்தது. கார் வளைவுகளில் எறி கமலா நேரு பார்க்குக்குள் நுழைந்து ஒதுக்குப்புறமாய் நின்றது. புவனா முதலில் இறங்கி மைத்ரேயி இறங்க உதவி செய்தாள். தாங்கு கட்டைகளை எடுத்துக் கொடுத்தாள்.

மைத்ரேயி புன்னகைத்தாள்.

''இது வேண்டாம்...''

''வேண்டாமா...? பின்னே எப்படி நடந்து வருவே...?''

''இப்படித்தான்'' காரினின்று விருட்டென்று வெளிப்பட்டு நடந்தாள் மைத்ரேயி.

புவனா சுவாசிக்கத் திணறினாள்.

''மைத்...ரேயி...உ....உனக்கு கா...கால்?''

''பரம சவுக்கியம்'' சொல்லிவிட்டு காரின் பானட் மேல் தாவி உட்கார்ந்தாள். கால்களை வேகமாய் ஆட்டினாள்.

புவனா சந்தோஷும் பூசிக்கொண்ட முகத்தோடு வேக வேகமாய் அவளை நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

''என்னடி இதெல்லாம்?''

''இந்த அம்மாவோட செட்டப்பு எப்படி?''

''எதுக்காக இந்த சக்கர நாற்காலி, தாஙகு கட்டை வேஷம்?''

''அதைச் சொல்லத்தானே உன்னைக் கூட்டிக்கிட்டு வந்தேன். வா அப்படியே நடந்துகிட்டே பேசலாம்.''

நடந்தார்கள்.

கமலா நேரு பார்க் நிசப்தமாய் இருந்தது. புவனா இன்னமும் பிரமிப்பு நீங்காமல் மைத்ரேயியையே பார்த்துக் கொண்டு நடந்தாள்.

''என்னடி அப்படி பார்க்கிறே?''

''நீ இப்படி நடக்கிறதைப் பார்க்கும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''என்னோட பிரச்சனை என்னன்னு தெரிஞ்சா உன்னோட சந்தோஷமெல்லாம் காணாமப் போயிடும்.''

''உன்னோட பிரச்சனை என்னான்னு சொல்லு பார்க்கலாம்!''



மைத்ரேயி பேச்சை ஆரம்பிப்பதற்காக வாய் திறந்த நேரம் பின் பக்கம் யாரோ நடந்து வருகிற சத்தம் கேட்டு புவனா திரும்பிப் பார்த்தாள்.

மைத்ரேயியின் மானேஜர் பாலமுரளி வந்து கொண்டிருந்தான்.




பாலமுரளியைப் பார்த்ததும் அதிர்ந்து விட்ட புவனா, திடுக்கிட்டபடி மைத்ரேயியை ஏறிட்டாள். அவள் சிரித்தாள். ''பாலமுரளிக்கு என்னோட சக்கர நாற்காலி வேஷம் தெரியும். அவர்தான் இந்த வேஷத்தையே போடச் சொன்னார்!''

பாலமுரளி புன்னகைத்துக் கொண்டே அவர்களை நெருங்கினான். மைத்ரேயியிடம் கேட்டான். ''என்ன மேடம்! உங்க ப்ரெண்டுகிட்ட எல்லா உண்மைகளையும் சொல்லிட்டீங்க போலிருக்கே?''

மைத்ரேயி சிரித்தாள்.

''வேஷத்தை மட்டும்தான் கலைச்சிருக்கேன். இன்னும் உண்மையைச் சொல்ல ஆரம்பிக்கலை. நீங்களும் வந்துரட்டும்னுதான் காத்திட்டிருக்கேன்!''

புவனா எரிச்சலாய் அவளைப் பார்த்தாள். ''இந்த சஸ்பென்சையெல்லாம் என்னால தாங்கிக்க முடியாதுடி. விஷயம் என்னாங்கிறதை மளமளன்னு சொல்லு.''

மைத்ரேயி மெல்ல நடந்தபடி சொன்னாள். ''புவனா! என்னைப் பத்தி உனக்குத் தெரியும், காலேஜ் நாளிலிருந்து கல்யாணத்தை நான் வெறுத்தே வந்திருக்கேன். ஓர் ஆணுக்கு மனைவிங்கிற உறவைக் கொடுத்து அவன் மூலமா பிறக்கப் போகிற குழந்தைகளுக்கு அம்மாங்கிற உறவையும் கொடுத்து குடும்ப வாழ்க்கைங்கிற சகதிக்குள்ள உழல எனக்கு விருப்பமில்லை!''

''அந்த எண்ணம் உன்கிட்டே இன்னமும் இருக்கா?''

''என்னிக்குமே இருக்கும்''

பாலமுரளி குறுக்கிட்டுச் சொன்னான். ''மேடத்தோட இந்த கல்யாண கொள்கை அவங்க அப்பாவுக்குப் பிடிக்கலை. அவர் உயிரோடு இருக்கிற வரைக்கும் மேடத்துக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து பார்க்க எவ்வளவோ முயற்சி பண்ணினாங்க. ஆனா, மேடம் ஒத்துக்கலை. அதனால அவர் இறக்கிறதுக்கு முந்தி உயிலில் ஒரு வாசகத்தை சேர்த்து எழுதிட்டுப் போயிட்டார்.''

''என்ன வாசகம்?''

மைத்ரேயி இடைமறித்து சொன்னாள். ''என்னோட பெண் மைத்ரேயி நான் இறந்த ரெண்டு வருஷத்துக்குள்ளே கல்யாணத்தைப் பண்ணிக்கணும். அப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் என்னோட சொத்து

பூராவும் முறைப்படி அவளுக்குச் சேரும். இல்லேன்னா கோயில், அனாதை விடுதிக்கு போய்ச் சேரணும்ன்னு எழுதிட்டார்!''

''அடப்பாவமே!''

''நீயே சொல்லுடி புவனா. இது அநியாயம்தானே? மக கல்யாணம் பண்ணிக்க விரும்பலைங்கிறதுக்காக எந்த பெத்த அப்பாவாவது இப்படி ஓர் உயிலை எழுதி வெப்பாரா?''

''நீ கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிறதுக்காக அப்படி எழுதி வெச்சருப்பாரு.''

''நானா பண்ணிக்குவேன்? கல்யாணம் பண்ணிக்கிறது என்னோட தனிப்பட்ட உரிமை, சுதந்திரம். அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை.''

''நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிறது உன்னோட கொள்கை. சரி, இந்த சக்கர நாற்காலி வாசம் எதுக்கு? உன்னோட கொள்கைக்கு இது எந்த வகையில் உதவப் போகுது?''

''அப்பாவோட உயில் வாசகத்துல ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன் இருக்கு. என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு வற்புறுத்த ஒரு சின்ன குழுவையே நியமனம் பண்ணியிருக்கார். அந்தக் குழுவில் என்னோட பேமிலி டாக்டர், லாயர், ஆடிட்டர் மூணு பேரும் இருக்காங்க. ரெண்டு வருசத்துக்குள்ளே நான் கல்யாணம் பண்க்கணும்ங்கிறது உயிலோட விதி. அந்த விதியிலேயும் ஒரு சின்ன பை-லா இருக்கு. மைத்ரேயிக்கு உடம்பு சரியில்லாம போனாலோ, எதிர்பாராத விதமாய் விபத்து ஏற்பட்டாலோ ஐந்தாண்டுகள் வரைக்கும் கல்யாணம் தள்ளிப் போகலாம். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு எந்தக் காரணத்தை முன்னிட்டும் கல்யாணத்தை தள்ளிப்போடக் கூடாது. அப்பா இறந்து போய் இன்னிக்கு ஒன்றரை வருஷ காலம் ஆகுது. கல்யாணத்தை ஐந்து வருசம் வரைக்கும் தள்ளிப் போடத்தான் மானேஜர் பாலமுரளியோட ஆலோசனைப்படி கால் விளங்காம போன மாதிரி நடிச்சி - சக்கர நாற்காலியில் ஏறிகிட்டேன். ஐந்து வருஷ கெடு வரைக்கும் இனி கவலையில்லையே?''

''சரி, கெடு முடிஞ்சதும் என்ன பண்ணுவே?''

''அதுக்குள்ளே ஒரு திட்டத்தைப் போட்டு சொத்து பூராவையும் என் பேருக்கு மாத்திக்கப் போறேன்!''

''திட்டமா? என்ன திட்டம்?''

''சொன்னா நீ தப்பா நினைச்சுக்கக் கூடாது. என்னா நீ இங்கே மும்பைக்கு வர்றதா லெட்டர் வந்த பின்னாடி தான் அந்தத் திட்டமே எனக்கு உதயமாச்சு. திட்டத்தைப் பத்தி மானேஜர்கிட்ட சொன்னேன். அவருக்கும் அது சரியாகவே பட்டதுன்னு சொன்னார்.''



''என்னடி என்னை மையமா வெச்சு என்னென்னமோ சொல்றே? என்னால உனக்கு என்ன உதவியைப் பண்ண முடியும்?''

''உன்னால முடியக்கூடிய உதவிதான்!''

''சொல்லு!''

மைத்ரேயி தயங்க - பாலமுரளி புன்னகைத்துக் கொண்டே சொன்னான். ''மிசஸ் புவனா! உங்க கணவரை ஒரு பதினைஞ்சு நாளைக்கு இங்கே வரவழைக்கணும்?''

''எதுக்கு?''

''திட்டத்துல மெயின் காரெக்டரே அவர்தான்!''

''என்ன சொல்றீங்க?''

''எஸ்.மேடம் நிச்சயமா கல்யாணம் பண்ணிக்க போறதில்லை. ஆனா அவங்களுக்கு கணவரா யாராவது கொஞ்ச நாளைக்கு நடிக்கலாமே. அப்படி கணவரா நடிக்கப் போறது உங்க கணவர்தான்.''

நடந்து கொண்டிருந்த புவனா சட்டென்று நின்றாள். முக வானத்தில் ஏராளமான அதிர்ச்சிப் பறவைகள். மைத்ரேயியிடம் கோபமாய்த் திரும்பினாள்.

''என்னடி இது?''

அவள் புன்னகைத்தாள். ''திட்டத்தைப் பத்தி மேலோட்டமா சொன்னா உனக்கு கோபம் தானே வரும். திட்டம் என்னாங்கிறதை உக்கு க்ளியரா சொல்றேன். எனக்கு நடக்கப் போறது ஒரு செட்டப் கல்யாணம். நானும் உன்னோட கணவரும் கழுத்துல ரோஜா மாலைகளை போட்டுகிட்டு காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள்ளே போவோம். எங்க கூடவே கோயில் குருக்களும் வருவார். அந்த கோயில் குருக்கள் பாலமுரளிக்கு தெரிந்தவர். ஆயிரம் ரூபாயை கையில் குடுத்துடா போதும். ஆயிரம் வகையான பொய்களைச் சொல்வார். நானும், உன்னோட கணவரும் கல்யாணம் பண்ணிகிட்டதா குருக்கள், டாக்டர், லாயர், ஆடிட்டர் அடங்கிய குழுகிட்டே சொல்வார். எண்ணி பத்தே நாள் சொத்து என் பேருக்கு மாறினதும், உன் கணவர் என்கிட்டே ஒரு பாவ்லா சண்டை போட்டுகிட்டு ஊருக்குப் போயிடலாம். அதுக்கப்புறம் அவர் இங்கே வரவேண்டியதே இல்லை!?''

மைத்ரேயியையே பார்த்தாள் புவனா.

''என்னடி அப்படிப் பார்க்கிறே?''

''நீ சொல்ற திட்டத்துல எத்தனைப் பெரிய விபரீதம் ஒளிஞ்சிட்டிருக்கு தெரியுமா?''

''இதை எப்படி விபரீதம்ன்னு சொல்றே புவனா? முன்பின் தெரியாத ஓர் ஆளைக் கூட்டிக்கிட்டு வந்து எனக்கு கணவனா நடிக்கச் சொன்னாத்தான் விபரீதம். அவன்கூட பேரம் பேசணும். பின்னாடி இதையே காரணமா வெச்சு ப்ளாக்மெயில் பண்ணுவான். நான்தான் உன் புருஷன்னு அழிச்சாட்டியம் பண்ணுவான். நாம

போட்டிருக்கிற திட்டத்துல நீ, நான், பாலமுரளி, உன்னோட கணவர் எல்லாருமே ஒருத்தருக்கொருத்தர் வேண்டியவங்க. எந்த விபரீதமும் ஏற்பட வாய்ப்பே இல்லை. உன்னோட கணவர் எனக்குக் கணவரா நடிக்கும்போது நீயும் என்கூடவேதான் இருக்கப் போறே!''

புவனா மவுனித்தாள். நகம் கடித்தாள்.

''என்னடி யோசிக்கிறே?''

''எனக்கென்னமோ இது சரியா படலை.''

''இதோ பார் புவனா... உன்னோட ஹஸ்பெண்ட் எனக்கு அண்ணன் மாதிரி... எனக்கு ஓர் அண்ணன் இருந்தா இந்த தங்கைக்கு உதவி பண்ண மாட்டார்? எங்கப்பாவோட உயிலை ஏமாத்தறதுக்காகத்தானே இந்த நாடகம். சரியா பத்து நாள் நாடகம்தான்.''

பாலமுரளி தொடர்ந்தான். ''மேடத்துக்கு சேர வேண்டிய சொத்தோட மதிப்பு கிட்டத்தட்ட ரெண்டு கோடி ரூபாய். மேடம் கல்யாணம் பண்ணிக்கலைன்னா நிச்சயம் அந்த சொத்து பூராவும் கோயில்களுக்கும், அனாதை விடுதிகளுக்கும் போயிடும். உங்க கணவர் திட்டத்துக்கு ஒத்துழைச்சா மேடத்துக்கு சொத்து கிடைக்கும். இல்லேன்னா ஒரு ஹாஸ்டலுக்கு போய் அனாதையா தங்கிக்க வேண்டியதுதான்.''

புவனா பெருமூச்சுவிட்டாள். ''எனக்கு பயமாகவும் இருக்கு. உனக்கு உதவி பண்ணணும் போலவும் இருக்கு!''

''இதுல பயப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை புவனா. எல்லாமே செட்டப். அப்படி ஏதாவது பிரச்சனை ஏற்பட்டா நான் வலிய வந்து உண்மையை ஒத்துக்குவேன். என்னால உன்னோட வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.''

''சரி. என்னோட கணவர் ஒத்துக்கணுமே?''

''அவரை ஒத்துக்க வைக்க வேண்டியது உன்னோட வேலை!''

''அவர் ஒத்துக் கொள்வார்னு எனக்குத் தோணலை. ஏன்னா, நான் விளையாட்டுக்குப் பொய் பேசினாக்கூட அவருக்குக் கோபம் வந்துடும். ஹி ஈஸ் மாரல்.''

''நீ அவரை இங்கே மும்பைக்கு வரவழை. நானும் பாலமுரளியும் பேசிக்கிறோம்... அவர்கிட்ட ப்ராப்ளத்தை சொல்றோம். அவர் ஒத்துக்கிட்டா சரி, இல்லேன்னா விட்டுடலாம். திட்டத்துக்கு வேற ஒரு ரிலையபிள் பர்சனைப் பார்த்துக்கிறோம்.''

புவனா லேசாய் மலர்ந்தாள்.

''அவருக்கு இதுல விருப்பமில்லைன்னா விட்டுடணும்!''

''கண்டிப்பா''

அன்று இரவு பத்து மணிக்கு மேல் சென்னையில் இருந்த கணவனோடு எஸ்.டி.டி.யில் தொடர்பு கொண்டாள் புவனா.



''என்னங்க... நீங்க உடனே மும்பை புறப்பட்டு வரணும்.''

''எதுக்கு?''

''நேர்ல வாங்க சொல்றேன்!''

''ஒரு க்ளு கொடேன்.''

''என்னோட ப்ரெண்ட் மைத்ரேயிக்கு உங்களால உதவியாகணுமாம். ஆபீசுக்கு ஒரு பத்து நாள் லீவு போட்டுட்டு வாங்க.''

''பத்து நாளா?''

''ஆமா''

''அவ்வளவு நாள் எதுக்கு?''

''சொல்றேன் வாங்க.''

''உன்னோட ப்ரெண்டுக்கு என்னால என்ன உதவி பண்ண முடியும்?''

''நாளைக்கு காலையில் ப்ளைட்டை பிடிச்சு வாங்க எல்லாமே புரியும்!''

ஒரு விபரீதத்திற்கு வித்திட்ட விபரம் தெரியாமல் ரிசீவரை வைத்தாள் புவனா.




பாலமுரளி காரை ஓட்டிக் கொண்டிருக்க, பின் சீட்டில் உட்கார்ந்திருந்த புவனா கேட்டாள்.

''ப்ளைட் எத்தனை மணிக்கு வரும்?''

''அரைவல் டைம் ஏழு அம்பது. எப்படியும் அரை மணி நேரம் லேட்டாகும்!''

பீச்சின் இடப்பக்கமாய்த் தெரிந்த ஏர்போர்ட் ரோட்டில் கார் போய்க் கொண்டிருந்தது. நேரம் காலை ஏழு மணி மெலிதான குளிர் காற்று.

''இந்த திட்டத்துக்கு என்னோட கணவர் ஒத்துக் கொள்வார்னு எனக்குத் தோணலை.'' புவனா ஒரு பெருமூச்சோடு சொன்னதை கேட்டுத் திரும்பினான் பாலமுரளி.

புன்னகைத்தான்.

''ஒத்துக்க வைக்க வேண்டியது உங்க வேலை!''

''அவர் இந்த விசயத்தை எப்படி ஒத்துக்குவார்னு எனக்கு புரியலையே!''

''உங்க கணவர் சம்மதம் சொன்ன பின்னாடிதான் இந்த திட்டத்தை சரியானபடி உருவகப்படுத்த நடைமுறைக்கு கொண்டு வரணும்.''

''மைத்ரேயி பேசாம ஒரு கல்யாணத்தையே பண்ணிக்கலாம். கொள்கை அது இதுன்னு சொல்லி வாழ்க்கையை வீணடிச்சுக்கிறா.''

''நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். மேடம் கேக்கிற மாதிரி இல்லையே?''

கார் ஏர்போர்ட்டை நெருங்கியது. கார் பார்க்கிங்கில் கார்கள் பல ஜாதிகளோடு தெரிய லவுஞ்சில் கும்பல் தெரிந்தது. ரன்வேயில் அந்நிய நாட்டு விமானம் ஒன்று சாதுவாய் நின்றிருந்தது.

காரை நிறுத்திவிட்டு லவுஞ்சுக்குள் நுழைந்தார்கள் இருவரும். சென்னை மும்பை ப்ளைட் இருபது நிமிஷம் தாமதமாக வந்து சேரும் என்று லவுஞ்சில் இருந்த ஸ்பீக்கர் இந்தியிலும், ஆங்கிலத்திலும் சொல்லிக் கொண்டிருந்தன.

''இன்னும் ஒரு மணி நேரம் முழுசா உயிரோடு இருக்கு. கேப்டீரியாவுக்குப் போய் காபி சாப்பிடலாமா?''

''ம்.''

ஏர்போர்ட்டின் கிழக்கு கோடியில் இருந்த கேப்டீரியாவை நோக்கி இருவரும் நடந்தார்கள்.

புவனா கேட்டாள். ''மைத்ரேயியோட சக்கர நாற்காலி வேஷத்தை என்னிக்குக் கலைக்கிறதா உத்தேசம்?''

''சொத்து கைக்கு வந்து நான்கைந்து வாரங்கள் ஆனதும் டாக்டர், லாயர், ஆடிட்டர் குழுவைக் கூப்பிடு என்னால இப்ப சுவரை பிடிச்சுகிட்டு நடக்க முடியுதுன்னு சொல்லி, நடந்து காட்டி கொஞ்சம் கொஞ்சமா அந்த வேஷத்தை கலைப்பாங்க!''

கேப்டீரியாவுக்கு வந்தார்கள். ரூபாய் கொடுத்து டோக்கன் வாங்கி கவுண்டரில் தர அட்டை டம்ளர்களில் சுடச்சுட காபியை நிரப்பிக் கொடுத்தார்கள். பாலிவினைல் ஆரஞ்சு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு உறிஞ்சினார்கள்.

''உங்களுக்கு மட்டும் மைத்ரேயிக்கு உதவி பண்ணணும்ங்கிற எண்ணம் எப்படி வந்தது... மிஸ்டர் முரளி?''

''இந்த உலகத்துல ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கொள்கை. மேடத்துக்கு கல்யாணமே பண்ணிக்கக் கூடாதுங்கிறது கொள்கை. அந்தக் கொள்கையில அவங்க ஏன் அப்படி பிடிவாதமா இருக்காங்கன்னு எனக்கு தெரியாது. ஆனா, ஏதோ ஒரு காரணம் இருக்குங்கிறது மட்டும் எனக்குத் தெரியும். அவங்க நினைச்சிருந்தா கொள்கையை விட்டுட்டு சொத்துக்காக ஒரு கல்யாணத்தைப் பண்ணியிருக்கலாம்! பட், பண்ணலை. அவங்களோட அந்த அப்ரோச் எனக்குப் பிடிச்சிருந்தது. உதவி பண்ண ஆரம்பிச்சேன்.''

''உங்களுக்கு சொந்த ஊர் எது?''

''கும்பகோணத்திற்குப் பக்கம் நீடாமங்கலம். பி.ஏ.வரைக்கும் படிச்சிருக்கேன். என்னோட ப்ரெண்ட் ஒருத்தன் மும்பைல இருந்தான். ஒரு கம்பெனியில நல்ல உத்தியோகம். வேலை வாங்கித்தர நானாச்சு. மும்பைக்கு புறப்பட்டு வான்னு லெட்டர் போட்டான். நானும்



வந்தேன். நான் மும்பை மண்ணை மிதிச்ச அன்னிக்கே என்னோட ப்ரெண்ட் ஒரு ரோடு ஆக்ஸிடெண்டில போயிட்டான்.''

''அடடே. அப்புறம்?''

''அப்புறமென்ன? நாய் அலைச்சல்தான். என்னோட உயரம், உடம்பு, சிவப்பு நிறம், சுருட்டை முடி ஒரு பைவ் ஸ்டார் ஓட்டலில் பேரர் வேலை வாங்கிக் குடுத்துடுச்சு. பேரர் வேலையைப் பார்த்துக்கிட்டே பேப்பர்ல வர்ற விளம்பரங்களைப் பார்த்து வேற வேலைகளுக்கு அப்ளை பண்ணிகிட்டிருந்தேன். என்னோட அதிர்ஷ்டம் உங்க ப்ரெண்ட் வீட்டுல மானேஜர் போஸ்ட் கிடைச்சது.''

''எத்தனை வருசமா இருக்கீங்க?''

''ரெண்டு வருசமா.''

''அப்படீன்னா மைத்ரேயியோட அப்பா உயிரோட இருக்கும்போதே வேலைக்கு சேர்ந்திட்டீங்க?''

''ஆமா'' என்ற பாலமுரளி காபி காலியான அட்டை டம்ளரை நசுக்கி 'வேஸ்ட் பின்'னில் போட்டுக் கொண்டே கேட்டான்.

''நீங்களும் மேடமும் காலேஜ் மேட்ஸ்தானே?''

''ஆமா''

''கல்யாணத்துல அவங்களுக்கு நாட்டமில்லாம போனதுக்கு காரணம் என்னவாயிருக்கும்னு உங்களுக்கு தெரிஞ்சிருக்கணுமே?''

''காரணம் எனக்குத் தெரியாது!''

''சரி அதைப்பத்தி நீங்க கேட்டதே இல்லையா?''

''கேட்டிருக்கேன். காரணத்தைச் சொல்ல மாட்டா. கட்டாயப்படுத்திக் கேட்டா, சில பேருக்கு கரப்பான்பூச்சி அலர்ஜி, பல்லி அலர்ஜி. அது மாதிரி எனக்கு கல்யாணம்னா அலர்ஜின்னு சொல்லுவா. பொதுவா மைத்ரேயி, மத்த பெண்கள் மாதிரி இல்லை. அவளோட ரசனைகள் எல்லாமே மாறுபட்டுத்தான் இருக்கும்.'

பேச்சில் நேரம் கரைந்து -

மணி 8.15 ஆனபோது, சென்னை விமானம் ரன்வேயில் இறங்கிக் கொண்டிருந்தது.

ஸ்டேர்சில் இறங்கும்போதே கைகளை அசைத்தான் புவனாவின் கணவன் கிருஷ்ணகுமார். அடித்த காற்றில் அவனுடைய அடர்த்தியான க்ராப் கலைந்து கலைந்து அமுங்கியது. லவுஞ்சில் நின்றிருந்த பாலமுரளி புவனாவிடம் சொன்னான்.

''உங்க கணவர் ஹீரோ மாதிரி இருக்கார்!''

''இப்ப கொஞ்சம் தொப்பை போட்டுட்டார். கல்யாணத்துக்கு முன்னாடி ட்ரிம்மா இருப்பார்.''

கிருஷ்ணகுமார் ஒரு சின்ன சூட்கேசோடு அவர்களை நெருங்கினான்.

''அலோ... புவனா...''

''வாங்க...''

புன்னகைத்தாள்.

''ஐயாம் பாலமுரளி, மிஸ் மைத்ரேயி வீட்டுல மானேஜர்...''

''க்ளாட் டு மீட் யூ'' இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

''பயணம் எப்படியிருந்தது?''

''ஃபைன்.''

''வாங்க காருக்குப் போகலாம்'' கிருஷ்ணகுமாரின் கையில் இருந்த சூட்கேசை வாங்கிக் கொண்டு பாலமுரளி முன்னால் நடக்க இருவரும் பின்தொடர்ந்தார்கள்.

புவனாவின் இடுப்புச் சதையில் தன் ஆட்காட்டி விரலால் குத்தியபடி கிருஷ்ணகுமார் ஜாடையில் கேட்டான்.

''என்ன விசயம்?''

''ஓட்டலுக்குப் போய்ப் பேசலாம்!''

''ஓட்டலுக்கா? உன் தோழி வீடு என்னாச்சு?''

''தோழி வீட்டுக்கு இப்ப நாம போகப் போறதில்லை.''

''நீ உன்னோட தோழி வீட்டுலதானே தங்கியிருக்கே?''

''ஆமா.''

''நீ மட்டும் அங்கே! நான் ஓட்டலா?''

''விசயம் இருக்கு. பேசாம வாங்க.''

''சரி. எந்த ஓட்டல்.''

''ஓட்டல் மவுரியா.''

ஓட்டல் மவுரியா.

ஐந்தாவது மாடி, 596 எண் அறை. பாலமுரளி விடைபெற்றுக் கொண்டு போய்விட, புவனாவும், கிருஷ்ணகுமாரும் அறையின் முன்பக்கம் இருந்த சிட் அவுட்டுக்கு வந்து உட்கார்ந்தார்கள்.

''இப்பவாவது விசயம் என்னான்னு சொல்றியா?'' கிருஷ்ணகுமார் கேட்க, புவனா ஒரு ஐந்து நிமிஷ நேரத்தை செலவழித்து, மைத்ரேயியின் விவகாரத்தை சொன்னாள். அவன் உன்னிப்பாய் செவி மடுத்துவிட்டுச் சிரித்தான்.

''உன்னோட தோழி மைத்ரேயிக்கு நான் கணவனா நடிக்கணுமா?''

''ஆமா.''

''இதுக்கு நீ ஒத்துக்கிறியா?''

''ஆரம்பத்துல எனக்கு தயக்கமாயிருந்தது. யோசிச்சுப் பார்த்தா பின்னாடி பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து அவளை விட்டு நழுவிப் போயிடக் கூடாதேங்கிற எண்ணத்துல ஒத்துக்கிட்டேன்.''

''நீ ஒத்துக்கிட்டது எனக்கு ஆச்சரியமா இருக்கு புவனா!''



''ஏன்?''

''ஒரு பெண் விளையாட்டுக்குக்கூட தன்னோட புருஷனை இன்னொருத்தி பங்கு போட்டுகிறதை விரும்ப மாட்டா.''

''இது ஒரு டைம்லி ஹெல்ப்தானே? இன்னும் சொல்லப் போனால் ஒரு பத்து நாள் டிராமா''

''எனக்கென்னமோ இது சரியாப்படலை.''

''ப்ளீஸ், மாட்டேன்னு சொல்லிடாதீங்க... உங்களை எப்படியும் ஒத்துக்க வைக்கிறதா மைத்ரேயிகிட்ட சொல்லியிருக்கேன்.''

''இவ்வளவு கஷ்டம் எதுக்கு? உன் தோழி யாரையாவது கல்யாணம் பண்ணிக்கட்டும். சொத்து அவ பேருக்கு மாறினதும் புருசை டைவர்ஸ் பண்ணிட்டுப் போகட்டும்.''

''நேத்து ராத்திரி அந்த யோசனையையும் சொல்லிப் பார்த்தேன்!''

''என்ன சொன்னா?''

''டைவர்சுக்குத் தகுந்த காரணத்தைக் காட்டலைன்னா கோர்ட்ல கேஸ் அடிபட்டுப் போயிடும்னு சொல்றா.''

''மைத்ரேயி ஏன் கல்யாணம் வேண்டாங்கிறதா?''

''கல்யாணம் பண்ணிக்காம வாழ்க்கை நடத்தறது அவ லட்சியமாம், கொள்கையாம்.''

கிருஷ்ணகுமார் சிரித்தான்.

''கொள்கையும் இல்லை. லட்சியமும் இல்லை. உன் தோழி ஏன் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிறதுக்கான காரணம் எனக்குத் தெரியும்.''

புவனா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.




''என்ன சொன்னீங்க? மைத்ரேயி கல்யாணம் பண்ணிக்காம இருக்கிறதுக்கு காரணம் என்னான்னு உங்களுக்குத் தெரியுமா?''

புவனா கண்களை விரித்துக் கொண்டு ஆச்சர்யமாய் கேட்க, கிருஷ்ண குமார் புன்னகைத்தான்.

''தெரியும்.''

''என்ன காரணம்?''

''உன்னோட தோழி கல்யாண வாழ்க்கைக்குத் தகுதியில்லாத பெண். அதனால்தான் அவ கல்யாணம் வேண்டாங்கறா.''

''மைத்ரேயி கல்யாண வாழ்க்கைக்குத் தகுதி இல்லாதவளா? அப்படின்னா?''

''ஒரு பெண் எப்போ முழுமையடையறா?''

''அவ தாய்மை அடையும்போது.''

''மைத்ரேயி அந்தத் தாய்மையை அடைய முடியாது''

புவனா திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தாள். ''என்ன... ஏதோ சொல்றீங்க.''

''நிஜத்தை சொல்லிட்டிருக்கேன். ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் இந்த உண்மையே எனக்குத் தெரியும் - என்னோட ப்ரெண்ட் சுகுமாரனும், அவனோட வைய்ப்பும் டாக்டர்ஸ்ங்கிற விவரம் உனக்குத் தெரியும். ரெண்டு நாளைக்கு முந்தி அவங்க எதேச்சையா நம்ப ரோட்டுப் பக்கமா கார்ல வரும்போது கார் மக்கராகி நின்னுடுச்சு. ஒர்க்ஷாப்புக்குப் போன் பண்ணி சொல்றதுக்காக நம்ம வீட்டுக்கு ரெண்டு பேரும் வந்தாங்க. போன் பண்ணிட்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசும்போது நீயும் மைத்ரேயியும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோவை சுவர்ல பார்த்த சுகுமாரனோட வைய்ப் ஆச்சரியப்பட்டா. அந்தப் பெண் மைத்ரேயிதானேன்னு கேட்டா. நான் ஆமான்னு சொன்னேன். 'உங்க வைய்புக்கு மைத்ரேயி ரொம்பவும் க்ளோஸ் ப்ரெண்டா'ன்னு கேட்டா. அதுக்கும் தலையாட்டினேன். டீ சாப்பிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு மறுபடியும் போட்டோவை பார்த்துக்கிட்டே 'மைத்ரேயியிக்கு கல்யாணம் ஆயிடுச்சா'ன்னு கேட்டா. நான் இல்லேன்னு சொன்னேன். அதுக்கு அவ 'பாவம் எக்கச்சக்கமான சொத்து இருக்கு. ஆனா ஒரு பெண்ணுக்கு எது வேணுமோ அது அவகிட்டே இல்லை'ன்னு சொன்னா. நான் விவரம் கேட்டேன். இந்த விசயத்தை வெளியே யார்கிட்டேயும் சொல்லக் கூடாதுன்னு பிராமிஸ் வாங்கிட்டு மைத்ரேயியைப் பத்தின அந்த உண்மையை என்கிட்ட சொன்னா.''

''என்ன சொன்னா?''

''அஞ்சு வருஷத்துக்கு முந்தி அவ சென்னை காலேஜ்ல படிச்சிட்டிருக்கும் போது மென்சஸ் ப்ராப்ளம்னு சொல்லிக்கிட்டு டாக்டர்கிட்டே வந்தாளம். டயாக்னைஸ் செய்து பார்க்கும்போதுதான் கருப்பையில் கான்சர்னு தெரிந்ததாம். ஆபரேசன் செய்து கருப்பையை ரிமூவ் பண்ணலைன்னா கான்சர் மத்த இன்னர் ஆர்கன்சுக்குப் பரவிடுமுன்னு சொல்லி...''

''ரிமூவ் பண்ணிட்டாளாமா?''

''ஆமா!''

புவனா திக்கித்துப் போனாள்.

கிருஷ்ணகுமார் தொடர்ந்தான்.

''கல்யாணம் செய்துகிட்டா தன்னோட குறை வெளியே தெரிஞ்சுடும்னு பயந்துதான் உன்னோட தோழி காலேஜ் டேய்சிலிருந்தே கல்யாணம் பண்ணிக்காமலேயே வாழ்க்கையை நடத்தறதுதான் லட்சியம் கொள்கைன்னு சொல்லிக்கிட்டு வந்திருக்கா!''

''அந்த டாக்டர் பேரென்ன?''

''யசோதா.''

புவனா பெருமூச்சோடு நாற்காலிக்குச் சாய்ந்தாள்.



மைத்ரேயியும் நானும் ஒரே ஆஸ்டலில் ஒரே அறையில் தான் தங்கியிருந்தோம். மென்சஸ் ப்ராப்ளம் அவளுக்கு இருந்தது வாஸ்தவம்தான். ஆனா, எனக்கே தெரியாம, யூடிரஸை ரிமூவ் பண்ணிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி இருந்திருக்கா.''

''எந்த ஓர் ஆணும் கல்யாணம் பண்ணிக்கிட்டா தனக்கு ஒரு குழந்தையை ஆவலா எதிர்பார்ப்பான். அந்த ஏமாற்றத்தை யாருக்குமே கொடுக்கக் கூடாதுங்கிறதுக்காக மைத்ரேயி இப்படியொரு லட்சியப் போர்வை போர்த்துக்கிட்டு இருக்கா.''

''என்னைப் பொறுத்தவரைக்கும் வாட் வீ திங்க்ஸ் ஈஸ் கரெக்ட். நீங்க சொன்ன இந்த விசயத்தினாலே எனக்கு இன்னமும் அவமேலே இரக்கமும், பச்சாதாபமும் ஏற்பட்டிருக்கு. அவளுடைய சொத்து அவ பேருக்கு மாறணும்ன்னா அவளுக்கு கணவனா நடிக்கிற இந்த திட்டத்துக்கு நீங்க ஒத்துக்கணும்.''

''ஒரு பெண்ணுக்கு புருஷனா நடிக்கிறது எவ்வளவு பெரிய ரிஸ்க் தெரியுமா?''

''ரிஸ்க்தான். நான் இல்லைன்னு சொல்லலை. மைத்ரேயி பத்தி எனக்குத் தெரியும். இந்தத் திட்டத்துல ஏதாவது பிரச்சனைன்னா அவ உடனே உண்மையை ஒத்துக்குவா. உங்களுக்கும் சரி; எனக்கும் சரி; எந்த கெட்ட பேரையும் வாங்கிக் குடுக்க மாட்டா.''

''பத்து நாள் மட்டும் புருஷனா நடிச்சா போதுமா?''

''போதும்.''

''அதுக்குப் பிறகு?''

''நீங்க அவகூட சண்டை போடற மாதிரி பாவ்லா பண்ணிட்டு சென்னை போயிட வேண்டியதுதான்!''

''இதை அந்த நடுவர் குழுவில் இருக்கிற டாக்டர், லாயர், ஆடிட்டர் ஒத்துக்குவாங்களா?''

''உயில் வாசகப்படி மைத்ரேயிக்கு கல்யாணம் ஆனதுமே சொத்து பூராவையும் அவ பேருக்கு எழுதி வைக்க வேண்டிய ஒரே கடமைதான் அவங்களோடது. அவ புருசனோடு வாழறாளா சண்டை போடறாளான்னு பார்த்துக்கிட்டிருக்க மாட்டாங்க.''

''சரி. எனக்கும் மைத்ரேயிக்கும் கல்யாணம் நடந்ததை எப்படி டிக்ளேர் பண்ணப் போறீங்க?''

''நீங்க அந்தத் திட்டத்துக்கு சம்மதிச்சா நாளைக்கு மறுநாளே கல்யாணம். காலையில் அஞ்சு மணிக்கு கார்ல நானும், மைத்ரேயியும், பாலமுரளியும் ஒரு கோயில் குருக்களோடு இந்த ஓட்டலுக்கு வருவோம். நீங்க பட்டு வேஷ்டி சட்டையோடு தயாராக் காத்திருந்து கார் வந்து நின்னதும் ஏறிக்கணும். ஓட்டலிலிருந்து நேரா வீட்டுக்குப் போறோம். அதுக்கு முன்னாடியே லாயர், ஆடிட்டர், டாக்டருக்கு போன் செய்து பாலமுரளி விசயத்தைச் சொல்லிவிடுவார்.''

''தாலி?''

''மைத்ரேயி அதைக் கட்டிட்டு வந்துடுவா! வீட்டுக்குப் போனதும் நீங்களும், அவளும் ஒண்ணா சேர்ந்து நடுவர் குழு கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கணும். அவ்வளவுதான்.''

''அவ்வளவுதானா?''

''ஆமா! கோயில் குருக்கள் கல்யாணத்தை நடத்தி வெச்சதா சாட்சி சொல்லுவார். ஒரு வார காலத்துக்கு நீங்க மைத்ரேயி வீட்டுல தங்கியிருக்கணும்!''

''நீ?''

''நானும் அதே வீட்டுலேதான் இருப்பேன். மைத்ரேயிக்கு பக்கத்து ரூம்தான் என்னோட ரூம். ராத்திரி நேரங்கள்ல என்னோட ரூமுக்கு நீங்க வந்துடலாம்!''

கிருஷ்ணகுமார் புன்னகைத்தான்.

''அந்த வசதி வேற இருக்கா? அப்படீன்னா சரிதான்'' கண்களை சிமிட்டினான் கிருஷ்ணகுமார்.

''ரொம்பவும் வழியாதீங்க.''

''சரி, மைத்ரேயிக்கு கால் ஊனமில்லைன்னு அந்த வீட்டுல யார் யாருக்குத் தெரியும்?''

''பாலமுரளிக்கு மட்டும்தான் தெரியும்.''

''வேலைக்காரி சோனிக்கு?''

''தெரியாது.''

''அந்த நடுவர் குழுவில் இருக்கிற டாக்டர், லாயர், ஆடிட்டர் மூணு பேரும் நார்த் இண்டியன்ஸ்தானே?''

''ஆமா. ஏன் கேட்கறீங்க?''

''ஒருவேளை அவங்கள்ல யாராவது சென்னைச் சேர்ந்தவங்களா இருந்து என்னைப் பத்தி தெரிஞ்சு வெச்சிருந்தா?''

''அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். இங்கே இருக்கிற யாருக்குமே உங்களைப் பத்தி தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை.''

''இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர்றதுக்கு முன்னாடி உன்னோட தோழி மைத்ரேயியை நான் சந்திச்சுப் பேசணும்!''

''தனியாவா?''

''இல்லை, நீயும் கூட இருக்கலாம்!''

''என்ன பேசணும்?''

''சும்மா அறிமுகப் பேச்சுதான். உன் தோழிக்குப் புருசனா நடிக்கப் போறேன். அவளைப்பத்தி தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''சரி. இன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு மேல இந்த ஓட்டலுக்கு கூட்டிட்டு வரேன். கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திட்டு அதுக்குள்ளேயே உட்கார்ந்து பேசுவோம்!'' சொல்லிக் கொண்டே எழுந்தாள் புவனா.

''என்ன எந்திரிச்சுட்டே?''



''நான் மைத்ரேயி வீட்டுக்குக் கிளம்பறேன். பத்து மணிக்கு இண்டர்வ்யூவை அட்டெண்ட் பண்ணணும். நீங்க குளிச்சு சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. ராத்திரி எட்டு மணிக்குப் பார்ப்போம்.''

புவனா கிளம்பி விட்டாள்.

கிருஷ்ணகுமார் குளித்து டிபன் சாப்பிட்டு பத்திரிகை படித்து மணி பத்தரையானதும் தூங்கலாமா என்று யோசித்தபோது, காலிங்பெல் அலறியது.

எழுந்துபோய் கதவைத் திறந்தான்.

வெளியே...

பாலமுரளி நின்றிருந்தான்.

முகம் முழுக்கப் புன்னகை.

''சாரி பார் தடிஸ்டர்பன்ஸ்.''

''ஓ நீங்களா! வாங்க உள்ளே.''

''இல்ல. மேடம் வெளியே கார் பார்க்கிங்கில் வெயிட் பண்றாங்க.''

''மேடம்?''

''மிஸ் மைத்ரேயி! நீங்க அவங்க கூட ஏதோ பேசணும்னு சொன்னீங்களாம்.''

''ராத்திரி எட்டு மணிக்கு மேலே மைத்ரேயியைக் கூட்டிட்டு வர்றதா புவனா சொன்னாளே.''

''யூ ஆர் கரெக்ட்; ஆனா மேடம் உங்ககிட்ட ஏதோ தனியா பேசணும்னு ஆசைப்பட்டாங்க. அதான் இப்பவே வந்திருக்காங்க. வர்றீங்களா?''

கிருஷ்ணகுமார் ஆச்சரியப்பட்டுக் கொண்டே அறையைப் பூட்டிக் கொண்டு பாலமுரளியோடு கிளம்பினான்.




ஓட்டல் சற்று ஒதுக்குப்புறமாய் மரங்கள் சூழ்ந்த பகுதியில் கார் பார்க்கிங் தெரிந்தது. பாலமுரளி, கிருஷ்ணகுமாரை அழைத்துக் கொண்டு குளிர் கண்ணாடிகள் ஏற்றப்பட்டிருந்த காண்டசா காரை நெருங்கினான்.

''மேடம் காருக்குள்ளே இருக்காங்க. நீங்க போய் பேசுங்க சார்...'' சொன்ன பாலமுரளி நகர்ந்துவிட கிருஷ்ணகுமார் தயக்கமாய் கார்க்கதவின் கைப்பிடியைப் பற்றித் திறந்தான்.

உள்ளே -

மைத்ரேயி புன்னகை நிறைந்த முகமாய் உட்கார்ந்திருந்தாள். ''குட் டே மிஸ்டர் கிருஷ்ணகுமார்! வாங்க உள்ளே.''

கிருஷ்ணகுமார் உள்ளே நுழைந்து உட்கார்ந்தான். கதவைச் சாத்திக் கொண்டாள். மைத்ரேயி புன்னகையின் பரப்பைப் பெரிதாக்கினாள்.

''என்னோட திட்டத்துக்கு ஒத்துழைப்பு கொடுக்க நீங்க சம்மதம் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி. என்கிட்டே ஏதோ பேசணும்னு சொன்னீங்களாம். அதுக்கு முந்தி நானே உங்ககிட்டே பேசணும்னு நினைச்சேன். புவனாவை வெச்சுகிட்டு அந்த விசயத்தைப் பத்திப் பேச முடியாது. அதனால்தான், அவ இண்டர்வியூவுக்கு புறப்பட்டுப் போனதும் நான் வந்தேன்!''

''என்ன விசயம்?''

''நீங்க என்கிட்ட என்ன பேசணும்னு நினைச்சீங்க?''

''திட்டத்தை அரங்கேற்றம் செய்யறதுக்கு முந்தி பொதுவா உங்ககிட்டே பேசணும்னு நினைச்சேன் தட்ஸ் ஆல்...''

''அவ்வளவுதானா?''

''ஆமா!''

''நான் உங்ககிட்டே பேச வந்த விசயமே வேற...''

''சொல்லுங்க.''

''புவனா எனக்கு ஸ்னேகிதி. அவ பண்ணப் போகிற இந்த உதவிக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கேன். எங்கப்பா ஏதோ ஒரு பிடிவாதத்தாலே உயில்ல அப்படியொரு வாசகத்தை எழுதிவிட்டார். அப்படி எழுதுவார்ன்னு நான் எதிர்பார்க்கவும் இல்லை. கிட்டத்தட்ட பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை விட்டுவிடவும் மனமில்லை. அதனால்தான் இந்தத் திட்டத்தை உருவாக்கி னேன். தன் கணவனையே இன்னொரு பெண்ணுக்கு கணவனா நடிக்க வைக்க எந்த பொண்ணுக்கும் மனசு வராது. ஆனா புவனாவுக்கு அந்த மனசு வந்தது. அவ பண்ணப் போகிற இந்த உதவிக்கு பதிலா நான் ஏதாவது பண்ண வேண்டாமான்னு நினைச்சேன். அதைப்பத்தி தான் உங்ககிட்ட இப்ப பேசப் போறேன்.''

கிருஷ்ணகுமார் மைத்ரேயியையே பார்த்துக் கொண்டிருக்க அவள் தொடர்ந்தாள். ''நம்ப திட்டம் நல்லபடி நடந்து சொத்து என் பேர்க்கு மாறினதும் புவனாவுக்கு என்னோட அன்பளிப்பா அம்பது லட்சம் ரூபாய் தரலாம்னு இருக்கேன். ஆனா அவ அதை வாங்கிக்க மாட்டா. அதனால அவளுக்குத் தெரியாம அந்தத் தொகையை உங்ககிட்டதான் கொடுக்க போறேன். நீங்களாவது அந்த தொகையை மறுக்காம வாங்கிக்கணும்.''

கிருஷ்ணகுமார் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''என்ன சிரிக்கறீங்க?''

''நான் மட்டும் பணம் வாங்கிக்குவேன்னு நீங்க எப்படி நினைக்கலாம்?''

''ஏன் வாங்கிக்க மாட்டீங்களா?''

''சாரி. இது ஒரு மனிதாபிமானத்தோடு பண்ற உதவி. இதை கமர்ஷியலா செய்தா அசிங்கம்.''

''என்னோட சந்தோஷத்துக்காக.''



''வெரி வெரி சாரி. இந்த விஷயம் புவனாவுக்குத் தெரிஞ்சாக்கூட ரொம்பவும் வருத்தப்படுவா.''

''இதைப்பற்றி அவகிட்டே எதையும் சொல்ல வேண்டாம். ராத்திரி எட்டரை மணிக்கு மறுபடியும் புவனாவோட இங்கே வர்றேன். காஷுவலா கொஞ்ச நேரம் பேசிட்டிருப்போம்.''

தலையாட்டினான் கிருஷ்ணகுமார்.

''இந்தத் திட்டம் உங்களுக்கோ, புவனாவுக்கோ எந்த பாதிப்பையும் உண்டாக்காது. அப்படி ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவானால் இந்த சொத்து பூராவையும் இழக்க நான் தயாரா இருக்கேன். எனக்கு சொத்து கிடைக்கிறதை விட உங்க ரெண்டு பேரோட குடும்ப வாழ்க்கைதான் முக்கியம்.''

''அந்த உத்திரவாதத்தை நீங்க குடுத்தாப்போதும். நான் வரட்டுமா?'' விடைபெற்றுக் கொண்டு காரிலிருந்து இறங்கினான் கிருஷ்ணகுமார்.

ஓட்டல் அறைக்குத் திரும்பியதும் டெலிபோன் கூப்பிட்டது. படுக்கையில் சாய்ந்தபடி ரிசீவரை எடுத்தான்.

''அலோ''

மறுமுனையில் புவனாவின் குரல்.

''ரூமை விட்டு எங்கே போயிருந்தீங்க?''

''ஏன்?''

''பதினைஞ்சு நிமிசமா டயல் பண்ணிட்டிருக்கேன். ரிங் போகுது. ஆனா எடுக்க நீங்க இல்லை.''

''பா... பாத்ரூம்ல இருந்தேன். ஆமா, என்ன விசயம்? இண்டர்வியூ என்னாச்சு?''

''முடிஞ்சாச்சு.''

''ரிசல்ட்?''

''ஜோரா ஒரு தடவை கைதட்டுங்க பார்க்கலாம்!''

''சக்சஸா?''

''க்ரேண்ட் சக்ஸஸ். இண்டர்வியூவுக்கு மொத்தம் அஞ்சு பேர்தான் வந்தாங்க. எல்லாருக்கும் அஞ்சு அஞ்சு நிமிஷம்தான் இண்டர்வியூ. எனக்கு மட்டும் இருபது நிமிஷம். அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கையில் கொடுத்துட்டாங்க!''

''ஈசிட்?''

''போஸ்டிங் எங்க தெரியுமா?''

''எங்கே?''

''நம்ம சிங்காரச் சென்னையில்!''

''நம்ப முடியலையே?''

''நம்புங்க. கம்பெனியோட புது பிராஞ்சு அடுத்த மாசம் சென்னைல ஓபனிங்காம். தேதியைப் பின்னாடி இன்பார்ம் பண்ணுவாங்களாம். அன்னிக்கு போய் டியூட்டியில் சேர்ந்தால் போதுமாம்!''

''அப்பபஃன்னா, நான் மும்பாய்க்கு டிரான்ஸ்பர் வாங்க வேண்டாமா?''

''வேண்டாம்!''

''சரி, உடனே புறப்பட்டு ஓட்டலுக்கு வா.''

''எதுக்கு?''

''உனக்கு வேலை கிடைச்ச சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டாமா?''

''இந்த ஊர்ல இருக்கிற வரைக்கும் நீங்களும் நானும் சந்திக்காம இருக்கிறது நல்லது. திட்டம் நல்லபடியா அரங்கேறி மைத்ரேயிக்கு விடிவுகாலம் பிறந்ததும் சென்னையிலே போய் நம்ம சந்தோஷத்தைக் கொண்டாடலாம். இன்னிக்கு ராத்திரி எட்டரை மணிக்குக்கூட மைத்ரேயியோடு உங்களை வந்து சந்திக்க வேண்டாம்னு பார்க்கிறேன்.''

''ஏன்?''

''ஒரு முன் ஜாக்கிரதைக்காகத்தான். இனிமே உங்களை சந்திச்சு பேச பாலமுரளி மட்டும்தான் அங்கே வருவார்.''

''போச்சுடா!''

''இனிமே போன் கூட பண்ண வேண்டாம். ஏதாவது மெசேஜை கன்வே பண்றதாயிருந்தா பாலமுரளி மூலமா கன்வே பண்ணுங்க.''

ரிசீவரை வைத்துவிட்டாள் புவனா.

**ரா**த்திரி சரியாய் எட்டரை மணிக்கு கிருஷ்ணகுமார் ஓட்டலின் ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, பாலமுரளி ஒரு ''அலோ'' சொல்லிக் கொண்டு எதிரில் வந்து உட்கார்ந்தான்.

''வாங்க.''

பாலமுரளி மேஜையின் மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டான். ''நாளைக்கழிச்சு மறுநாள் திட்டம் அமலுக்கு வருது.''

''முகூர்த்த நாள்தானே?''

''ஆமா!''

''கன்பார்ம் பண்ணிக்குங்க. அஷ்டமி நவமி இருக்கப்போகுது. நடுவர் குழுவுக்கு கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் வி வில் பி இன் தி ட்ரபுள்.''

''நாளை கழிச்சு மறுநாள் அருமையான முகூர்த்த நாள் கோயில் குருக்களே கன்பர்ம் பண்ணிட்டார்.''

''கோயில் குருக்கள் நம்பிக்கையானவர் தானா?''

''எனக்கு வேண்டியவர்.''

''பொய் சொல்லும்போது தடுமாற்றம் இருக்கக் கூடாது!''

''கவலைப்படாதீங்க கிருஷ்ணகுமார். குருக்கள் நம்ம ஆளு. அழகா பொய் சொல்வார்.''

''நான் எத்தனை மணிக்கு ரெடியாகணும்?''



''காலையில ஆறு மணிக்கு. நாளைக்கு உங்க சைசுக்கு பட்டு சட்டையும், பட்டு வேஷ்டியும் ரெடியாகி ரூமுக்கு வந்துடும்.''

''எனக்கொரு சந்தேகம்.''

''என்ன?''

''நானும் மைத்ரேயியும் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டோம்கிறதை நடுவர் குழு நம்புவாங்களா? ஏன்னா கல்யாணத்தை அவங்க பார்க்கலையே?''

''நீங்க அதைப்பத்திக் கவலைப்படாதீங்க கிருஷ்ணகுமார்! நடுவர் குழுவில் இருக்கிற மூணு கிழமும் ஏற்கெனவே நாங்க கல்யாணத்துக்கு வரணுமங்கிற அவசியம் கிடையாது. நீ எப்படியோ ஒரு கல்யாணத்தை பண்ணிட்டு வந்து இவன்தான் உன் புருசன்னு தகுந்த சாட்சியத்தோடு சொன்னா போதும்'னு சொல்லியிருக்காங்க. இருக்கிற ஒரேயொரு ப்ராப்ளம் என்னான்னா, நீங்களும் மைத்ரேயியும் ஒரு பத்து நாளைக்கு அவங்க முன்னாடி கணவன் மனைவி மாதிரி அந்நியோன்யமா இருக்கணும். ஐ மீன் நடிக்கணும். அதை பார்த்த பின்னாடிதான் மைத்ரேயி பேருக்கு சொத்தை மாத்துவாங்க.''

பேசிக் கொண்டே போன பாலமுருளி சட்டென்று பேச்சை நிறுத்தித் தலகுனிந்தான். கிருஷ்ணகுமார் கேட்டான்.

''என்னாச்சு. ஏன் பேச்சை நிறுத்திட்டீங்க?''

பாலமுரளி தன் முகத்தை இடக்கையால் மறைத்துக் கொண்டு சொன்னான்: ''உங்களுக்கு வலப்பக்கம் கொஞ்சம் தள்ளி வெயிஸ்ட் கோட்டை போட்டுக்கிட்டு ஒரு வழுக்கைத்தலை நின்னுட்டிருக்காரே. அவர்தான் மைத்ரேயிக்கு பேமிலி டாக்டர் ஆதர்ஷ். நடுவர் குழுவில் ஒருத்தர்.''

கிருஷ்ணகுமார் திரும்பிப் பார்த்தான்.

வெயிஸ்ட் கோட் அணிந்த அந்த வழுக்கைத்தலை மனிதரும் அதே நேரத்தில் திரும்பினார். அவர் முகம் லேசான மகிழ்ச்சிக்குப் போயிற்று. ''அலோ'' சொல்லி கையை உயர்த்திக் கொண்டு கிருஷ்ணகுமாரை நோக்கி வந்தார்.




**டா**க்டர் ஆதர்ஷ் 'அலோ' சொல்லிக் கொண்டு கிருஷ்ணகுமாரை நோக்கி வருவதைப் பார்த்தும் பாலமுரளி திடுக்கிட்டுப் போய்க் கேட்டான்.

''ஆதர்ஷை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?''

''தெரியாது...''

''பின்னே 'அலோ' சொல்லிட்டு வர்றாரே...?''

''அதான் புரியலை.''

''சரி... அவரை ஹேண்டில் பண்ணுங்க... நான் ரெஸ்டாரண்ட் பின் பக்கமா போயிட்டு அப்புறமா வர்றேன்...'' பாலமுரளி சொல்லி - பின்பக்கத்தை நோக்கி நழுவிக் கொண்டிருக்கும்போதே ஆதர்ஷ் கிருஷ்ண குமாருக்குப் பின்பக்கத்தில் வந்து நின்று அவனுடைய தோளைத் தட்டினார்.

''எப்படி இருக்கீங்க...?''

''சாரி... நீங்க யார்னு...?''

''மறந்துட்டீங்களா...ஐயாம் டாக்டர் ஆதர்ஷ்...''

''மறுபடியும் சாரி... உங்களை யார்ன்னு எனக்குத் தெரியலை...''

இப்போது ஆதர்ஷின் முகம் மாறியது.

''நீங்க மைக்கேலோட பிரதர்... கிறிஸ்டோபர்தானே...?''

''நோ... ஐயாம் கிருஷ்ணகுமார்... ப்ரம் சென்னை...''

''ஆதர்ஷ் அவஸ்தையாய் சிரித்தார். ''எக்ஸ்ட்ரீம்லி சாரி... எனக்கு தெரிஞ்ச கிறிஸ்டோபர்ன்னு ஒருத்தர் ஏறக்குறைய உங்க ஜாடையிலேயே இருப்பார்... அதான் ஏமாந்துட்டேன். மொதல்ல இந்தக் கண்ணாடிய மாத்தணும். சாரி பார் த ட்ரபுள்...''

''சோ வாட்...?''

''ப்ளீஸ்... கேரி-ஆன் யுவர் டின்னர்...'' டாக்டர் ஆதர்ஷ் சொல்லிவிட்டு பக்கத்தில் டைனிங் ஹாலுக்குப் போனதும் பாலமுரளி வந்தான்.

''என்ன சொன்னார் டாக்டர்...?''

''ஹி ஹேஸ் மிஸ்டேக்கன்... அவருக்குத் தெரிஞ்ச ஒருத்தர் என்னை மாதிரியே இருப்பாராம். அவர்தான் நான்னு நினைச்சுக்கிட்டு பேச வந்திருக்கார்...''

''அம்மாடி! தப்பிச்சோம்... ஒருவேளை டாக்டர் ஆதர்ஷ் உங்களுக்குத் தெரிஞ்சவரா இருந்திருந்தா இந்த கல்யாண திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முடியாம போயிருக்கும்...''

கிருஷ்ணகுமார் புன்னகைத்தான். ''அதான் நான் ஆரம்பத்திலே சொன்னேன். திட்டத்தை தியரிடிக்கலா பார்க்கும்போது பிரச்சனைகள் தெரியாது. அதை ப்ராக்டிக்கலுக்கு கொண்டு வரும்போதுதான் பிரச்சனைகள் திடீர் திடீர்ன்னு முளைக்கும்...''

''எந்தப் பிரச்சனை வந்தாலும் அதை சமாளிக்க நான் இருக்கேன். மிஸ்டர் கிருஷ்ணகுமார்! நீங்க மட்டும் பத்து நாளைக்கு மைத்ரேயியின் ஹஸ்பெண்டா நடிச்சாப்போதும்.''

''எந்தப் பிரச்சனையும் ஏற்பட்டுடாம திட்டம் நல்லபடியா முடியணுமேன்னு கவலையா இருக்கு... என்னா ரெண்டு பெண்களோட வாழ்க்கை சம்பந்தப்பட்ட விசயம் இது...! கண்ணாடிப் பாத்திரத்தை எடுத்துக்கிட்டு வழுக்குகிற பாறைல ஏறுகிற மாதிரியான காரியம் இது.



கொஞ்சம் ஏமாந்தாலும் பாத்திரம் நொறுங்கிற மாதிரி எல்லாருடைய சந்தோஷமும் நொறுங்கிடும்!''

''இது அநாவசியமான பயம் கிருஷ்ணகுமார்! நாலு சுவத்துக்குள்ளேயே முடிஞ்சு போகிற சாதாரண செட்டப் டிராமாதான் இது. டிராமா முடிஞ்சதும் வேஷத்தக் கலைச்சிட்டு உங்க மனைவி புவனாவோட நீங்க சென்னை போயிட்டே இருக்கலாம்...''

மறுநாள் காலை ஆறுமணி.

பட்டுப்புடவையில் மைத்ரேயி தானே கட்டிக் கொண்டு தாலிக் கயிற்றோடு சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருக்க, அருகே இருந்த குஷன் நாற்காலியில் கிருஷ்ணகுமார் உட்கார்ந்திருந்தான். பட்டுச் சட்டையும் பட்டு வேஷ்டியும் உடம்பில் மின்னியது. நெற்றியிலும் கழுத்திலும் சந்தன தீற்றல்கள்.

புவனா, பாலமுரளி, கோயில் குருக்கள் சுவரோரமாய் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள்.

மைத்ரேயி தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்துவிட்டு பாலமுரளியை ஏறிட்டாள்.

''லாயர், ஆடிட்டர், டாக்டருக்கு போன் பண்ணிடலாமே!''

''எஸ் மேடம்!''

டெலிபோனை நோக்கி போய் ரிசீவரை எடுத்து லாயர் வீட்டுக்கு டயலைச் சுழற்றி அவரைப் பிடித்தான் பாலமுரளி.

''லாயர் சார்... குட்மார்னிங்...''

''யாரு...?''

''நான் பாலமுரளி...''

''ஓ... மானேஜரா...? என்ன விசயம்...?''

''நீங்க உடனே வீட்டுக்கு வரணும்!''

''எதுக்கு?''

''வந்து வாழ்த்தணும்!''

''வாழ்த்தணுமா -? யாரை-?''

''மேடம் மைத்ரேயியைத்தான்! அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.''

''என்னது?'' லாயர் மறுமுனையில் திடுக்கிடுவது தெரிந்தது.

''எஸ் லாயர் சார்! ரொம்ப நாளாவே மேடம் ஒருத்தரை மனசுல நினைச்சிட்டு இருந்திருக்காங்க. நேத்து ராத்திரி அவர் வந்திருந்தார். இன்னிக்கு நாள் நல்லா இருந்ததினாலே கோயில் குருக்களை கூட்டிகிட்டு வந்து சிம்பிளா கல்யாணத்தைப் பண்ணிகிட்டாங்க -''

''நேத்து ராத்திரி மைத்ரேயிக்கு போன் பண்ணி பேசும்போதுகூட இது பத்தி ஒண்ணும் சொல்லலையே?''

''மேடத்தோட பாதர் நியமிச்ச நடுவர் குழு பேர்ல அவங்களுக்கு கோபம் சார்! அதான் யாரையும் கூப்பிடாம கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.''

''டாக்டருக்கும் ஆடிட்டருக்கும் போன் பண்ணிட்டீங்களா?''

''இனிமேதான் பண்ணணும் சார்! நீங்க புறப்பட்டு வாங்க சார்! அதுக்குள்ளே அவங்களும் வந்துடுவாங்க.''

''சரி மாப்பிள்ளை யாரு?''

''பேரு கிருஷ்ணகுமார், சென்னையைச் சேர்ந்தவர்!''

''பிசினஸ்...?''

''ரேடியோ ஸ்பேர் பார்ட்சுக்கு ஏஜென்சி எடுத்து பிசினஸ் பண்ணிட்டிருக்காராம்!''

''இன்னும் அரைமணி நேரத்துக்குள்ளே அங்கே புறப்பட்டு வர்றேன். நீங்க டாக்டருக்கும், ஆடிட்டருக்கும் போன் பண்ணி விசயத்தை கன்வே பண்ணிடுங்க!''

''சரி சார்.''

லாயரின் டெலிபோன் இணைப்பை துண்டித்துவிட்டு டாக்டர் ஆதர்ஷ் வீட்டுக்கு டயலைச் சுழற்றினான் பாலமுரளி.

''அலோ!'' பாமரத்தனமாய் ஓர் ஆண் குரல் கேட்டது. பேசுவது வீட்டு வேலையாள் என்பதை உணர்ந்து கொண்ட பாலமுரளி கேட்டான்.

''டாக்டர் வீட்டுல இல்லையா?''

''இல்லீங்களே''

''எங்கே வாக்கிங் போயிருக்காரா?''

''இல்லீங்க. அய்யாவும் அம்மாவும் நேத்து ராத்திரி டில்லியில் இருக்கிற மக வீட்டுக்கு அவசரமா புறப்பட்டுப் போனாங்க.''

''டில்லிக்குப் போயிருக்காங்களா? எதுக்கு?''

''அவங்க மருமகன் ஏதோ கார் ஆக்சிடெண்ட்ல மாட்டிகிட்டாராம். போன் வந்தது. உடனே புறப்பட்டுப் போயிட்டாங்க.''

''சரி போனை வச்சிடு!''

அவன் ரிசீவரை சாத்தியதும், ஆடிட்டர் வீட்டுக்கு டயலைச் சுழற்றி அவருக்கு விசயத்தைத் தெரிவித்துவிட்டு மைத்ரேயியிடம் வந்தான் முரளி.

''லாயரும் ஆடிட்டரும் மட்டும் வர்றாங்க.''

''டாக்டர்!''

''மருமகன் ஏதோ ஆக்சிடெண்ட்ல மாட்டிக்கிட்டாராம். டாக்டரும் அவரோட வைப்பும் டில்லிக்கு புறப்பட்டுப் போயிருக்காங்க.''

''டாக்டர் வராததும் ஒரு வகையில் நல்லதுான்.''

காத்திருந்தார்கள்.



சரியாய் இருபது நிமிஷ நேரம் கழித்து லாயரும், ஆடிட்டரும் காரை விட்டு இறங்கி அவசர நடையில் உள்ளே வந்தார்கள்.

லாயர் லேசாய் கோபம் கலந்த குரலில் கேட்டார். ''என்னம்மா இது கல்யாணம்னு முன்கூட்டியே சொல்ல வேண்டாமா?''

''நான் யாருக்கும் சொல்ல பிரியப்படலை. இத்தனை காலமும் நான் மனசால விரம்பிட்டிருந்தவர் திடீர்னு என்னைப் பார்க்க வந்தார். கல்யாணத்தைப் பற்றி அவரே பேசினார். நாளைக்கு நாள் நல்லா இருக்கான்னு கோயில் குருக்களை வரவழைச்சுப் பார்த்தோம். நாள் நல்லா இருந்தது. என்னோட ப்ரெண்ட் புவனாவும், மானேஜர் பாலமுரளியும் - பஜாருக்குப் போய் தாலி, பட்டுச்சேலை, பட்டு வேஷ்டி, மாலையெல்லாம் வாங்கிட்டு வந்தாங்க. அப்பா படத்துக்கு முன்னாடி மாலையை மாத்திகிட்டோம். கோயில் குருக்கள் மந்திரம் சொல்ல கிருஷ்ணகுமார் எனக்குத் தாலி கட்டினார்!''

கழுத்தில் இருந்த தாலியை எடுத்துக் காட்டினாள் மைத்ரேயி. ஆடிட்டர் குரலில் வருத்தம் மேலிட, சொன்னார்: ''இந்தக் கல்யாணத்துக்கு எங்களையும் கூப்பிட்டிருக்கலாம். ஏன்னா, உங்க அப்பாவுக்கு நாங்க ரொம்பவும் வேண்டியவங்க.''

''இதோ பாருங்க சார்! யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லாம எங்க அப்பாவோட உயில் வாசகப்படி நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இப்ப உங்களுக்கு சந்தோஷம்தானே?''

''நீ கல்யாணம் பண்ணிக்கிட்டது எங்களுக்கெல்லாம் பெரிய சந்தோஷம்தான். இதை இன்னும் கொஞ்சம் விமரிசையா நடத்தியிருக்கலாமேன்னு என் மனசுக்குப்படுது.''

''என்னோட கால் ஒழுங்கா இருந்திருந்த விமரிசையா கல்யாணம் செய்து இருக்கலாம்.''

லாயரும், ஆடிட்டரும் கிருஷ்ணகுமாரை நெருங்கி அவனுடைய கைகளைக் குலுக்கினார்கள். ''கங்கிராட்ஸ்! மைத்ரேயியை இப்படி கல்யாணக் கோலத்துல பார்க்கத்தான் ஆசைப்பட்டோம்.''

கிருஷ்ணகுமார் ஒரு கஷ்டச் சிரிப்பு சிரித்து உட்கார்ந்திருந்த நாற்காலியில் மெல்ல நெளிந்தான்.

மைத்ரேயி புன்னகையோடு கேட்டாள்: ''என்ன லாயர் சார்! இனிமே சொத்து பூராவையும் என் பேருக்கு மாத்த எந்தத் தடையும் இல்லையே?''

''இனிமே என்னம்மா தடை? கல்யாணமான பத்தாவது நாள் சொத்தை உன் பேருக்கு மாத்திக்கலாம்னு சொல்லுது உயில் வாசகம். ஆனா, அந்த பத்து நாளும் உன் வீட்டுக்காரரோட நீ சந்தோஷமா இருக்கணும். நீங்க

ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கிறது கன்பர்ம் ஆனாத்தான் சொத்து உன் பேருக்கு மாறும்!''

''அவரும் நானும் இனிமே எப்பவும் சந்தோஷமாத்தான் இருப்போம்!''

''அப்புறம் நீ கல்யாணம் பண்ணிகிட்டது வெளியுலகத்துக்கு தெரிவிக்கிற வகையில் நம்ப ரிலேடிவ்ஸ்சையும், ப்ரெண்ட்சையும் கூப்பிட்டு ஒரு ரிசப்ஷன் வைக்கணும். அதுவும் ரெண்டு நாள்ல''

மைத்ரேயி அவசர அவரமாய் மறுத்தாள்.

''நோ நோ. அதெல்லாம் வேண்டாம் லாயர் சார்!''

''என்னது? ரிசப்ஷன் வேண்டாமா? நீ ஏம்மா பயப்படறே? இதென்ன திருட்டுக் கல்யாணமா? அமர்க்களமா ரிசப்ஷன் வெச்சு ஊர் உலகத்துக்குத் தெரியப்படுத்தறது தான் உன்னோட குடும்ப பரம்பரைக்குப் பெருமை.''

''லாயர் சார் நான் என்ன சொல்றேன்னா?''

''நீ எதையும் சொல்ல வேண்டாம்மா. நீ இப்படி கல்யணம் பண்ணிக்கிட்டது சரியில்லை. அந்தக் குறையைப் போக்கறதுக்காவது கிரேண்டா ஒரு ரிசப்ஷனை வைக்கணும்! மானேஜர்!''

''சார்''

''ஒரு ஆயிரம் இன்விடேஷன் கார்டு பிரிண்ட் செய்து எங்கக்கிட்ட குடுங்க. ரிசப்ஷனை நாங்க அமர்க்களம் பண்றோம்!''

புவனாவுக்கு வயிற்றைக் கலக்கியது.



பாலமுரளி அவரமான குரலில் லாயரை ஏறிட்டான் ''ஆயிரம் இன்விட்டேஷன் கார்டு பிரிண்ட் பண்ணணுமா சார்...?''

''கண்டிப்பா... ப்ரெண்ட்ஸ் சர்க்கிள்லேயும், ரிலேட்டிவ் சர்க்கிள்லேயும் எவ்வளவு பேர் இருக்காங்க. தெரியுமா? அத்தனை பேரையும் கூப்பிட வேண்டாமா?''

மைத்ரேயி குறுக்கிட்டாள். ''லாயர் சார்! இந்த ரிசப்ஷன் ஆர்பாட்டமெல்லாம் எனக்குப் பிடிக்கலை. நான் சக்கர நாற்காலியிலும், அவர் ஒரு நாற்காலியிலும் உட்கார்ந்திருந்தா அது ரிசப்ஷன் மாதிரியா இருக்கும்? அந்த சூழ்நிலையே ஓர் இறுக்கமா இருக்கும். என்னை மத்தவங்க அனுதாபத்தோட பார்க்கிறதை நான் விரும்பலை!''

லாயர் புன்னகைத்தார். ''உங்கப்பா எழுதின உயில் வாசகங்கள் உனக்கு மறந்து போச்சுன்னு நினைக்கிறேன். 'என் மகளோட கல்யாணத்துக்கு உறவினர்கள் தரப்பிலேயும் சரி, நண்பர்கள் தரப்பிலேயும் சரி எல்லாரும் கூப்பிடப்படணும். என் பெண்ணுக்கு எல்லாருடைய



வாழ்த்துகளும் கிடைக்கணும்னு ஆசைப்படறேன்' உயிலோட வாசகங்கள் இப்படி இருக்கும்போது நீ கல்யாணத்தை ரொம்ப ரொம்ப சிம்பிளா செய்துக்கிட்டே. ரிசப்ஷனையாவது கிரேண்டா பண்ணணும்னு நாங்க நினைக்கிறோம். நாளை மறுநாள் நம்ம பங்களாவிலேயே ரிசப்ஷனை வச்சுக்கலாம்.

ஏதோ பேச முயன்ற மைத்ரேயியைக் குறுக்கிட்டு அடக்கினான் கிருஷ்ணகுமார். ''மைத்ரேயி! நோ ப்ராப்ளம். பெரியவங்க ஆசைப்படற மாதிரி ரிசப்ஷனுக்கு ஏற்பாடு பண்ணட்டும். அவங்க ஆர்வத்துக்கு தடை போடாதே.''

''தாங்க்யூ மாப்பிள்ளை'' லாயர் வலிய போய் கிருஷ்ணகுமாரின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

லாயரும், ஆடிட்டரும் அரை மணிநேரம் இருந்துவிட்டுப் போனதும் மைத்ரேயி கிருஷ்ணகுமாரிடம் திரும்பினாள்.

''என்ன மிஸ்டர் கிருஷ்ணகுமார்! ரிசப்ஷனுக்கு சரின்னு சொல்லிட்டீங்க. ரிசப்ஷன் வெச்சா எவ்வளவு பெரிய ரிஸ்க் தெரியுமா?''

கிருஷ்ணகுமார புன்னகைத்தான். ''ரிசப்ஷனுக்கு நீங்க ஒத்துக்கலைன்னா ஆடிட்டருக்கும், லாயருக்கும் கல்யாணத்துல சந்தேகம் வரலாம். இந்தத் திட்டத்துல அவங்க ரெண்டு பேரையும் கல்யாணத்துக்கு கூப்பிடாதது ஒரு பெரிய மைனஸ் பாயிண்ட். அவங்களுக்கு இந்தக் கல்யாணத்துல சந்தேகம் வராம இருக்கணும்னா ரிசப்ஷனை நடத்தியாகணும்!''

பாலமுரளி குறுக்கிட்டான். ''கிருஷ்ணகுமார்! ரிசப்ஷனுக்கு குறைந்தபட்சம் ஐநூறு பேராவது வருவாங்க. அவங்கள்ல யாராவது ஒருத்தருக்கு உங்களை அடையாளம் தெரிஞ்சட்டாலும் விசயம் விபரீதமாயிடும்.''

''எனக்கு இந்த மும்பையில் தெரிஞ்சவங்க யாரும் இருக்கப் போறதில்லை.''

''அப்படி யாராவது இருந்து வந்துட்டா?''

''அதையும் வடிகட்ட வழி இருக்கு!''

''எப்படி?''

''ரிசப்ஷனுக்கு யார் யாரை இன்வைட் பண்ணப் போறீங்களோ அந்த லிஸ்ட்டை என்கிட்ட குடுத்துடுங்க. எனக்கும் புவனாவுக்கும் பரிச்சயமானவங்க அந்த லிஸ்ட்ல இருக்காங்களான்னு பார்த்து சொல்லிடறோம். அவங்களுக்கு மட்டும் நீங்க இன்விடேசன் கார்ட்ஸ் அனுப்ப வேண்டாம்...''

மைத்ரேயி பெருமூச்சு விட்டாள். ''இதெல்லாம் எனக்கு சரியாப்படலை மிஸ்டர் கிருஷ்ணகுமார்! லிஸ்ட்லே இருக்கிற ஆட்கள் யார் யார்ன்னு உங்களுக்குத் தெரியும். நீங்க யார்ங்கிற விசயம் ஒருத்தருக்குத் தெரிஞ்சாலும் போதும். அது மளமளன்னு மத்தவங்களுக்குப் பரவிடும்.''

புவனாவும் சேர்ந்து கொண்டாள். "மைத்ரேயி சொல்றதும் சரிதாங்க. நீங்க ஏன் முந்திரிக்கொட்டைத் தனமா ரிசப்ஷனை ஏற்பாடு பண்ண ஒத்துக்கிட்டீங்க?"

"புவனா! நீயும், மத்தவங்களும் நினைக்கிற மாதிரி லாயரும், ஆடிட்டரும் சாதாரணமான ஆட்கள் இல்லை. அவங்க ரெண்டு பேரும் இன்னும் யோசிக்க ஆரம்பிக்கலை. ஆரம்பிச்சா அவங்களுக்கு நிறைய சந்தேகம் வரும். ரிசப்ஷனை நடத்திட்டா அவங்க யோசிக்க மாட்டாங்க."

"எனக்கென்னமோ 'திக் திக்'ன்னு இருக்கு."

"திட்டத்துல துணிந்து இறங்கிட்டோம். இனிமேல் பயப்படக் கூடாது. வரப்போகிற எதிர்ப்புகளைப் பக்குவமாய்த்தான் சமாளிக்கணும்" கிருஷ்ணகுமார் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பாலமுரளிக்கு பக்கத்தில் இருந்த டெலிபோன் தன் தொண்டையைத் திறந்து கனைத்தது.

பாலமுரளி ரிசீவரை எடுத்தான்.

"அலோ"

"ஈஸ் இட் டபுள் பைவ் செவன் டபுள் போர் சிக்ஸ்?" பெண் குரல் கேட்டது.

"எஸ்"

"கேன் ஐ ஸ்பீக் வித் மிசஸ் புவனா."

"மே ஐ நோ ஹூ ஆர் யூ ஸ்பீக்கிங்?"

"பி ஆன் த லைன்" சொன்ன பாலமுரளி புவனாவிடம் திரும்பினான். "லலிதான்னு யாரோ ஒரு பெண் பேசறாங்க. உங்க ப்ரெண்டாம்."

"பேரென்ன சொன்னீங்க லலிதாவா?" கேட்டுக் கொண்டே ரிசீவரை வாங்கினாள் புவனா.

"எஸ் நான் புவனா."

"ஏய் புவனா, நான் லலிதாடீ?"

"எந்த லலிதா?"

"சரியாப் போச்சு. நான் மன்னார்குடி லலிதா. உன்னோட காலேஜ்மேட் அண்ட் ஆஸ்டல் ரூம்மேட்."

"டீ நீயா? எங்கிருந்து பேசறே? மன்னார்குடியிலிருந்தா?"

'மன்னார்குடியா? அந்த மண்ணை மிதிச்சு ரெண்டு வருசமாச்சே. இப்ப மும்பையிலிருந்துதான் பேசிட்டிருக்கேன். அதுவும் எங்கிருந்து தெரியுமா?"

"எங்கிருந்து?"

"யுரேகா சின்த்தடிக் கம்பெனியிலிருந்து..."

"என்னது?"

"கம்பெனி குவார்ட்டர்சிலிருந்து தான் பேசிட்டிருக்கேன். போன வருச மார்ச்சிலிருந்து அந்த கம்பெனி ஸ்டெனோ."



"ஈசிட்?"

"ம். உன்னோட அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் பண்ணும்போதுதான் அப்ளிகேஷன்ல உன் போட்டோவை பார்த்து ஆனந்த 'ஷாக்'ல அதிர்ந்து போயிட்டேன். உடனே இண்டர்வியூ கமிட்டியில் இருக்கிற ஒருத்தரை காண்டாக்ட் பண்ணி மும்பையில நீ எங்கே தங்கியிருக்கேன்னு கேட்டேன். போன் நம்பர் அட்ரஸைக் கொடுத்தாங்க. நான் வேலை பார்க்கிற கம்பெனியிலேயே உனக்கும் வேலை கிடைச்சது குறித்து எனக்கு ரொம்ப சந்தோஷம். கங்கிராட்ஸ்."

"தேங்க்யூ"

"மும்பைல இன்னும் எத்தனை நாள் இருப்பே?"

"பத்துநாள்."

மைத்ரேயிங்கிறது?"

"என்னோட எம்.எஸ்.சி. கிளாஸ் மேட். உன்னை மாதிரியே க்ளோஸ் ப்ரெண்ட்."

"சரி அம்மாவா ப்ரமோஷன் ஆயிட்டியா?"

"இன்னும் இல்ல"

"அட ஏண்டி"

"இன்னும் ஒரு வருசம் போகட்டும்."

"தேசத்தோட கஷ்டம் தெரிஞ்சவ நீ. பை த பை உன்னோட ஹஸ்பெண்ட் எப்படி இருக்கார்? கல்யாணத்தன்னிக்குப் பார்க்கும்போது ஒல்லியா உடம்பு சதை பிடிக்காம இருந்தார். இப்ப தேறிட்டாரா?"

"ம்."

"மும்பைக்கு அவரும் வந்திருக்காரா?"

"...."

என்ன பதில் சொல்வது என்று புவனா திகைக்க மறுமுனையில் லலிதா கேட்டாள். "என்னடி பேச்சையே காணோம்?"

"நீ...நீ என்ன கேட்டே?"

"புவனா"

"ம்"

"ஏன் என்னவோ மாதிரிப் பேசறே?"

"எப்படிப் பேசறேன்?"

"யாருக்கோ பயப்படற மாதிரி."

"அதெல்லாம் ஒன்னுமில்லை. மும்பை க்ளைமேட் எனக்கு ஒத்துக்கலை. ரெண்டு நாளா கோல்ட் அண்ட் பீவர்."

"சரி என் வீட்டுக்கு எப்ப வர்றே?"

"சென்னை புறப்பட்டு போறதுக்குள்ளே ஒரு நாள் வர்றேன். உன் வீட்டு அட்ரஸைச் சொல்லு."

"நோட் பண்ணிக்க. நம்பர் ட்வெண்ட்டி த்ரீ, யுரேகா குவார்ட்டர்ஸ், மோத்தி நகர், தாராவி, மும்பை."

''கண்டிப்பா வர்றேன்'' ரிசீவரை வைத்துவிட்டு ஒரு பெரிய பெருமூச்சோடு திரும்பினாள் புவனா. கிருஷ்ணகுமார் கேட்டான்.

''போன்ல யாரு?''

''என்னோட பி.எஸ்.சி கிளாஸ்மேட். எனக்கு வேலை கிடைச்சிருக்கிற அதே யுரேகா கம்பெனியில் ஸ்டெனோவா இருக்காளாம். என்னோட அப்பாயின்ட் மெண்ட் ஆர்டரை டைப் பண்ணும்போது அப்ளிகேசன்ல இருந்த என் போட்டோவைப் பார்த்தாளாம். இண்டர்வியூ அதாரிடடியை என்கொயர் பண்ணி இங்கே நான் தங்கியிருக்கிற அட்ரசை வாங்கியிருக்கா.''

''என்னை அவளுக்குத் தெரியுமா?''

''ம். தெரியும்! நம்ம கல்யாணத்துக்கு அவ வந்திருக்கா.''

''சரியாப்போச்சு! நான் மும்பைக்கு வந்திருக்கிறதா அவகிட்டே சொல்லிட்டியா?''

''இல்லே.''

''மும்பையில அவளுக்கு எங்கே ஜாகை?''

''தாராவியில்.''

புவனா சொலலிக் கொண்டிருக்கும்போதே போர்டிகோவில் அந்த சத்தம் கேட்டது. பாலமுரளி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

''அடடே!'' கையை உதறிக் கொண்டு அதிர்ந்தான்.

''என்ன பாலமுரளி, யார் அது?'' மைத்ரேயி கேட்டாள்.

''மேடம் உங்க பாதரோட ப்ரெண்ட் ரிட்டையர்ட் போலீஸ் கமிஷனர் மல்ஹோத்ரா காரிலிருந்து இறங்கி வந்திட்டிருக்கார்.''

''எ...எதுக்காக?''

''தெரியலையே?''

மல்ஹோத்ரா பூட்ஸ் சத்தம் ஒலிக்க அறைக்குள் நுழைந்தார். தடியான உடம்பு, அகலமான சதுர முகத்தில் தீட்சண்யம் மிக்க கண்களும், நரை மீசையும் பிரதானமாகத் தெரிந்தன. க்ரீம் சபாரியில் செண்ட் வாசனையோடு உள்ளே வந்தார்.

மைத்ரேயி வலியப் புன்னகைத்து. ''குட்மார்னிங் அங்கிள்!'' என்றாள்.

''குட்மார்னிங்... குட்மார்னிங்! என்னம்மா கல்யாணம் பண்ணிக்கிட்டியாமே? கங்கிராட்ஸ்! உன்னோட பிடிவாதத்தை உடைச்ச மாப்பிள்ளைக்கு ஸ்பெஷல் கங்கிராட்ஸ்'' மல்ஹோத்ரா கிருஷ்ண குமாரின் பக்கம் திரும்பினார்.




கிருஷ்ணகுமாரின் கையை ரிடையர்ட் போலீஸ் கமிஷனர் மல்ஹோத்ரா குலுக்கி ஆச்சரியப்பட்டார்.



''என்ன மாப்பிள்ளை கையெல்லாம் இப்படி வியர்த்திருக்கு? கல்யாணம் ஆனதுமே மைத்ரேயிக்குப் பயப்பட ஆரம்பிச்சுட்டீங்களா?''

கிருஷ்ணகுமார் நெற்றியைச் சொறிந்து கொண்டு ஒரு மாதிரியாய் சிரிக்க மைத்ரேயி குறுக்கிட்டுக் கேட்டாள்:

''அங்கிள்! என்னோட கல்யாணம் நடந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''லாயர் தான் எனக்கு போன் பண்ணி சொன்னார். நீ யாருக்கும் தெரியப்படுத்தாமே கல்யாணம் செய்து கொண்டதில் எனக்குக் கோபம் இல்லை. உனக்கு பிடிச்சமான ஒருத்தரை கல்யாணம் செய்துக்கிட்டியே அதுதான் எனக்கு சந்தோஷம். என்னோட ஹார்ட்டி கங்கிராட்ஸ்.''

''தேங்க்யூ அங்கிள்.''

''இந்த அங்கிள் உனக்கு இப்ப ஒரு ப்ரசண்ட் பண்ணப் போறார்!''

''அதெல்லாம் வேண்டாம் அங்கிள். உங்களோட வாழ்த்துக்கள் மட்டும் போதும்!''

''நோ...நோ.. க்வாலியரில் இருக்கிற என்னோட டாட்டர்க்காக ஒரு மோதிரம் பண்ணி வெச்சிருந்தேன். அதைத்தான் இப்ப கொண்டு வந்திருக்கேன். மாப்பிள்ளை இதைப்பிடிங்க.''

மல்ஹோத்ரா சிறிய மஞ்சள் காகிதத்தில் மடித்து வைத்திருந்த ஒரு மோதிரத்தை அவனிடம் நீட்டினார்.

''உங்க கையாலேயே மைத்ரேயிக்கு போட்டு விடுங்க!''

எல்லாரும் திகைத்துப்போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொள்ள மைத்ரேயி அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தாள்.

''அந்த மோதிரத்தை நீங்களே போட்டுவிடுங்க அங்கிள்.''

''என்னது? நான் போட்டு விடறதா? நோ, நோ உன்னோட வீட்டுக்காரர்தான் இந்த மோதிரத்தைப் போடணும்... ம் பிடிங்க மாப்பிள்ளை சார்.''

மோதிரத்தை கிருஷ்ணகுமார் கையில் திணித்தார். அவன் புவனாவைத் திணறலாய்ப் பார்க்க மல்ஹோத்ரா தோளைத் தட்டினார்.

''என்ன அங்கே பார்க்கிறீங்க மாப்பிள்ளை...? ம் மைத்ரேயி கையில மோதிரத்தைப் போடுங்க.''

மைத்ரேயி இடக்கையை நீட்ட, கிருஷ்ணகுமார் லேசான நடுக்கத்தோடு மோதிர விரலைப் பற்றி மோதிரத்தைப் போட்டான். புவனா முகத்தைத் திருப்பிக் கொண்டு எங்கோ பார்த்தாள்.

அன்று இரவு எட்டு மணி -

புவனா கட்டிலில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க, அவளுக்கு அருகில் கிருஷ்ணகுமார் புகைபிடித்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''புவனா''

''ம்...''

''அரைமணி நேரமா நானும் பார்த்துட்டிருக்கேன். ஒண்ணுமே பேச மாட்டேங்கறியே?''

''மனசே சரியில்லீங்க.''

''ஏன் சரியில்லை?''

''இந்த விஷப் பரீட்சையில் இறங்கியிருக்க வேண்டாமோன்னு இப்ப என் மனசுக்குத் தோணுது.''

''ஏன் அப்படித் தோணுது?''

''மைத்ரேயிக்கு நீங்க மோதிரம் போட்டதை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சுக்குள்ளே 'பக்பக்'ன்னு இருக்கு.

''நடிப்புதானே?''

''நடிப்புன்னாலும்...''

''இதோ பார் புவனா! ஒரு நடிகை சினிமாவில எத்தனை தடவை தாலி கட்டிக்கிறா? அதையெல்லாம் நிஜம்னு நம்பிடறோமா? அது மாதிரிதான் இதுவும்! உன்னோட தோழிக்கு உதவறதா சொல்லிட்டு களத்துல இறங்கிட்டோம். போடற வேஷத்தை ஒழுங்காப் போட்டுத்தான் ஆகணும். பல்லைக் கடிச்சுகிட்டு ஒரு பதினைஞ்சு நாள் பொறுத்துக்கோ. சொத்து மைத்ரேயி பேருக்கு வந்ததும் நாம சென்னை கிளம்பிடுவோம்.''

''கிளம்ப முடியுமா?''

''ஏன் உனக்கு சந்தேகம்?''

''ஆடிட்டரும் லாயரும் போக விட்டுடுவாங்களா?''

''மைத்ரேயியும் நானும் சண்டை போட்டுக்கற மாதிரி பாவ்லா செய்து பிரிஞ்சுடப் போறோம். திட்டத்தோட கடைசி கட்டம் அதுதானே?''

''அந்த ரெண்டு கிழமும் உங்களை சமாதானப்படுத்த முயற்சி செய்வாங்களே?''

''செய்தா யார் கேக்கப் போறா?''

''டொக் டொக்'' அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கிருஷ்ணகுமார் கையிலருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு அணைத்துவிட்டு எழுந்து போய் கதவைத் திறந்தான்.

வெளியே -

பாலமுரளி நின்றிருந்தான்.

''என்ன?''

''கிருஷ்ணகுமார், சீக்கிரமா வெளியே வாங்க.''

''ஏன்?''



''லாயரும், ஆடிட்டரும் போர்டிகோவில் காரை நிறுத்திட்டு உள்ளே வந்துட்டிருக்காங்க. நீங்க மேடம் ரூமுக்குப் போயிடுங்க.''

''இந்நேரத்துக்கு எதுக்காக வராங்க?''

''தெரியலையே''

கிருஷ்ணகுமார் வெளியே வந்து மைத்ரேயி இருந்த பக்கத்து அறைக்குள் நுழைந்தான். சக்கர நாற்காலியில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த அவள் நிமிர்ந்தாள்.

''என்ன லாயரும், ஆடிட்டரும் வர்றாங்களா?''

''ஆமா''

''நான் கல்யாணம் செய்துக்கிட்டது அவங்க ரெண்டு பேருக்கும் ஒரு அதிர்ச்சியான விசயம். இன்னமும் அவங்களாலே நம்ப முடியலை. அதான் திடீர் திடீர்னு விசிட் தர்றாங்க.''

மாடிப்படிகளில் நடை சத்தம் கேட்டது.

''வந்துட்டாங்க.''

சில விநாடிகளுக்குப் பின் ஆடிட்டரும், லாயரும் அறைக்குள் நுழைந்தார்கள், மைத்ரேயி அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''வாங்க சார்''

''பாலமுரளி எங்கேம்மா?''

''எதுக்கு?''

''அவர்கூட கொஞ்சம் பேசணும்.''

நெற்றியைச் சுருக்கினாள் மைத்ரேயி.

''என்ன பேசணும்?''

கேட்டுக் கொண்டிருக்கும்போதே பாலமுரளி வந்தான். ''நானே வந்துட்டேன் சார். என்கிட்ட என்ன பேசணும்?''

''வாங்க அப்படி வராந்தா ஓரத்துக்குப் போயிடுவோம்'' சொல்லியபடியே வெளியே போக, பாலமுரளி கிருஷ்ணகுமாரை நோக்கி கண்ணைச் சிமிட்டிவிட்டு அவர்களைத் தொடர்ந்தான். மாடி வராந்தாவுக்குப் போய் அதன் கோடியில் நின்று கொண்டார்கள்.

''என்ன சார்?''

''மாப்பிள்ளைக்கு சொந்தக்காரங்க யாரும் இந்த ஊர்ல இல்லையா?''

''இல்லைன்னுதான் சொன்னாரு.''

''ஊர்லயாவது சொந்த ஜனம் இருக்காங்களா?''

''இருக்காங்களாம். ஆனா வரப்போக இல்லை. மாப்பிள்ளைக்கு அம்மாவும், அப்பாவும் இறந்ததுமே சொந்த ஜனம் யாரும் அண்டலையாம்.''

''சரி நப்ஷல் எப்போ?''

''நப்ஷல்?''

''புரியலை. சாந்தி முகூர்த்தம்.''

''அ...அ...அதைப்பத்தி என்கிட்ட ஒண்ணும் சொல்லலையே?''

''அவங்க சொல்லுவாங்களா என்ன? நாமதான் ஏற்பாட பண்ணணும். மைத்ரேயியோட தோழி பேரென்ன?''

''புவனா.''

''அந்தப் பொண்ணைப் போய் கூட்டிட்டு வாங்க சொல்றேன்.''

''சார், சார் அ... அந்த பொண்ணு?''

''கல்யாணமான பொண்ணுதானே?''

''ஆமா சார்''

''பின்னே போய் கூட்டிட்டு வாங்க. சாந்தி முகூர்த்தத்துக்கான ஏற்பாடுகளைப் பத்திப் பேசிடலாம்.''

''அது வந்து சார்.''

''ஏன் தயங்குறீங்க?''

''ஒண்ணுமில்லை. போய் கூட்டிட்டு வந்துடறேன்'' பாலமுரளி வராந்தாவில் வேகமாய் நடந்து போய் இரண்டு நிமிஷ நேரத்துக்குப் பின் புவனாவைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

லாயர் அவளை ஏறிட்டார்.

''ஏம்மா? மைத்ரேயி உன்கிட்ட ஏதாவது சொன்னாளா?''

''ஒ....ஒண்ணும் சொல்லலையே?''

''இன்னிக்கு நல்ல நாள் கல்யாணம் செய்துக்கிட்டது சரிதான். கல்யாணத்துக்குப் பிறகு நடக்க வேண்டிய சில சடங்குகளும் நடந்தாகணுமே. நான் எதைச் சொல்றேன்னு உனக்குப் புரியுதாம்மீா?''

''பு... புரியுது சார்.''

''அதுக்கான ஏற்பாடுகளைப் பண்ண வேண்டாமா?''

''வந்து... வந்து...''

''இதோ பாரம்மா எங்க மனசுல இருக்கிற சந்தேகத்தை இப்ப சொல்லிடறோம். மைத்ரேயி எங்களையெல்லாம் கூப்பிடாமலேயே திடீர்னு கல்யாணம் செய்துக்கிட்டா. எங்க மேலே இருக்கிற கோபத்தினாலே அவ அப்படி நடந்துக்கிட்டா. அதைப்பத்தி நாங்க கவலைப்படலை. உண்மையாகவே அவ மனசு மாறி, இந்தக் கல்யாணத்தை மனப்பூர்வமா செய்துக்கிட்டாளா அல்லது சொத்து தன் பேர்ல வரணும்ங்கிறதுக்காக அவசர அவசரமா இந்த கல்யாணத்தை செய்துகிட்டாளான்னு தெரியலை. கல்யாணம் செய்துக்கிட்ட மைத்ரேயி புருசன்கூட சந்தோஷமா இருக்காளான்னு பார்த்துட்டுதான் சொத்தை அவ பேர்க்கு மாத்த ஏற்பாடு செய்வோம். அதுக்கான ஆரம்ப ஏற்பாடுதான் இந்த சாந்தி முகூர்த்தம். இன்னிக்கு நாள் நல்லாயிருக்கு. ராத்திரி பத்து மணிக்கு மேலே நாள் இன்னமும் சிலாக்கியம். நீ இப்ப தங்கியிருக்கிற ரூமை சாந்தி முகூர்த்த அறையா மாற்றி பூ ஜோடனை செய்யணும்!''



புவனா ஸ்தம்பித்து நிற்க லாயர் பாலமுரளியிடம் திரும்பினார்.

''மானேஜர்! நீங்க ஜீவன்ராம் அல்வா கடைக்குப் போய் ஸ்வீட் வகைகளை வாங்கிட்டு வந்துடுங்க.''

''ச...சார்.''

''இதுல சங்கோஜப்பட ஒண்ணுமில்லை. எந்த சொந்த பந்தமும் இல்லாத மைத்ரேயிக்கு நாமதான் இருந்து செய்யணும்!''

''மைத்ரேயிகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு''

''இதையெல்லாம் போய் எதுக்காக அவகிட்டே சொல்லணும்? அறையை ஜோடனை செய்து ஸ்வீட்டெல்லாம் கொண்டு போய் தட்டுல வெச்சட்டு ரெண்டு பேரையும் உள்ளே அனுப்பிட வேண்டியதுதான்.''

''ச...சார்.''

''இன்னொரு விசயத்தையும் சொல்லிடறேன். இன்னும் ரெண்டு வார காலத்துக்கு நானும், ஆடிட்டரும் இந்த வீட்லதான் தங்கப் போறோம். தங்கி மைத்ரேயியும் அவ புருசனும் சந்தோஷமா இருக்காங்களான்னு கண்காணிக்கப் போறோம்!''

''அப்படியா சார்? இது மைத்ரேயிக்குத் தெரியுமா?''

''இல்லேம்மா. அவகிட்டே இனிமேதான் சொல்லப் போறோம்.''

## 11

புவனாவின் வயிற்றில் கலவரம் பிசைந்தது. இருதயத்துக்குள் எதுவோ கடின வஸ்து மாதிரி அடைத்துக் கொண்டு கண்களில் நீர் கீறியது.

''என்னம்மா ஜோடனை ஆச்சா?''

ஆடிட்டர் அறைக்குள் நுழைந்தார். புவனா பூக்கூடையோடுட கட்டில் அருகே ஸ்தம்பித்துப் போய் நிற்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

''என்னம்மா புவனா? பாலமுரளிகூட ஜீவன்ராம் கடைக்குப் போய் ஸ்வீட்செல்லாம் வாங்கிட்டு வந்தாச்சு. நீ பூக்கூடையை வெச்சட்டு அப்படியே நின்னுட்டிருக்கே. இந்த பூ ஜோடனையை முடிச்சுட்டுப் போய் உன்னோட ப்ரெண்ட் மைத்ரேயிக்கு அலங்காரம் செய்ய வேண்டாமா?

''இதோ ஆச்சு சார்!'' கூடையிலிருந்த உதிரிப் பூக்களை அள்ளி வெல்வெட் படுக்கையில் தூவினாள் புவனா.

ஆடிட்டர் அவளை உன்னிப்பாய் பார்த்துவிட்டு கேட்டார். ''ஏம்மா முகமெல்லாம் வாடியிருக்கு? உடம்பு கிடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். நேத்து ராத்திரியிலிருந்து சரியான தூக்கமில்லை. அதான்.''

''எப்படியோம்மா, நீ வீட்டுக்கு வந்த நேரம் கல்யாணமே செய்துக்க மாட்டேன்னு பிடிவாதமா இருந்த மைத்ரேயி

கல்யாணம் செய்துகிட்டா. எனக்கு இருந்த ஒரு பிரச்சனை தீர்ந்து போகக. இவங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்காங்களான்னு பத்து நாள் 'வாட்ச்' பண்ணிட்டு சொத்தை மாத்தி எழுதறதுக்கான ஏற்பாட்டை செய்திட வேண்டியதுதான்.''

லாயர் வந்து எதற்காக கூப்பிட்டார் என்பதற்காக ஆடிட்டர் வெளியே போக, பாலமுரளி ஸ்வீட் பாக்கெட்களோடு உள்ளே நுழைந்தான். புவனா குரலைத் தாழ்த்திக் கொண்டு ''பாலமுரளி'' என்று கூப்பிட்டாள்.

''ம்...''

''விசயம் கொஞ்சம் கொஞ்சமா விபரீதத்தை நோக்கிப் போயிட்டிருக்கு.''

''எல்லாமே செட்-அப் தானே! ஏன் பயப்படறீங்க? புவனா!''

''செட்டப்தான்னு தெரியுது. ஆனா மனதை தைரியப்படுத்திக்க முடியலையே?''

''நாய் வேஷம் போட்டாச்சு. குரைக்காம இருக்க முடியுமா?''

''ஆடிட்டரும், லாயரும் பேசறதைப் பார்த்தா நெஞ்சுக்குள்ளே 'திக் திக்'ன்னு இருக்கு.''

''என்ன பேசிக்கிறாங்க?''

''கல்யாணம் செய்துகிட்ட ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்காங்களான்னு கண்காணிக்கப் போறாங்களாம்!''

''கண்காணிக்கட்டுமே! ரூமுக்குள்ளே என்ன நடக்குதுன்னு எப்படி அவங்களால கண்டுபிடிக்க முடியும்!''

''நீங்க என்னதான் சொன்னாலும் என் மனசுக்கு சமாதானமாகலை. பாலமுரளி! என்னோட கணவரை இந்த விஷப்பரீட்சையில் இறக்கியிருக்கக் கூடாது!''

''ஒரு பத்து நாளைக்கு உங்க எமோஷனலைக் காட்டாமே கண்ட்ரோல் பண்ணிக்குங்க புவனா! எல்லாம் சரியாப் போயிடும். நீங்க நினைக்கிற மாதிரி இந்த விசயம் விபரீதமாகக்கூடிய அளவுக்குப் போகாது. ஏன்னா, நிலைமையை எப்படி சமாளிக்கணுங்கிற வித்தை உங்க கணவருக்கும் தெரியும். மைத்ரேயிக்கும் தெரியும்.''

பாலமுரளி சொல்லிக் கொண்டே தட்டுகளில் ஸ்வீட் வகைகளைப் பரப்ப, புவனா ஒரு கனமான பெருமூச்சோடு பூக்களைத் தூவினாள் கட்டிலின் மேல்.

இரவு மணி பத்து -

கிருஷ்ணகுமார் பட்டு வேஷ்டியிலும், சர்ட்டிலும் இருக்க ஆடிட்டரும், லாயரும் அவனுடைய கையைப் பிடித்துக் குலுக்கினார்கள்.

''விஷ் யூ ஆல் த பெஸ்ட். ஹேப்பினஸ் ஈஸ த எவ்ரிடே சன்னபுள் ஆப் யுவர் லைப்.''



''தாங்க்யூ''

''இந்த வீட்ல பெரியவங்க யாரும் இல்லாததினாலே சில சடங்குகளை நாங்களே செய்ய வேண்டிய கடமை. திஸ் ஈஸ் த ஆஸ்பீஷியஸ் டைம். நீங்க ரூமுக்குப் போங்க!''

கிருஷ்ணகுமார் வியர்த்துப் போன தன் முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டே தயக்கமாய் நடந்து - பக்கத்து அறைக்குள் நுழைந்தான். மல்லிகை மணமும், ஊதுபத்தியின் மணமும் நாசியை நோக்கி வந்து கனமாய் மோத - சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடி புத்தக மொன்றைப் புரட்டிக் கொண்டிருந்த மைத்ரேயி கண்களுக்கு கிடைத்தாள்.

சிரித்தாள்.

''வாங்க, கிருஷ்ணகுமார்.''

''இக்கட்டான நிலைமை.''

''எனக்கு தமாசா இருக்கு.''

''ஆடிட்டரும், லாயரும் இந்த விசயத்தில் ஏன் இவ்வளவு தீவிரமா இருக்காங்கன்னு தெரியலை.''

''என்னோட கல்யாணம் நடந்ததுல அவங்களுக்கு லேசான சந்தேகம். அந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கத் தான் அவங்க தலைமையில இந்த ஏற்பாடெல்லாம்.''

''புவனாதான் ரொம்ப டென்ஷனா இருக்கா.''

''எப்பவுமே கடன் கொடுத்தவங்களுக்குத்தான் டென்ஷன் அதிகம். உங்களுக்கு செஸ் விளையாடத் தெரியுமா கிருஷ்ணகுமார்?''

''தெரியும்!''

''வாங்க. விளையாடலாம். ஒரு மணி நேரம் கழிந்ததும் நீங்க புவனாவோட ரூமுக்குப் போயிடலாம்.''

''ஆடிட்டரும், லாயரும் பார்த்துட்டா?''

''அவங்க ஹால் ரூம்ல தங்கியிருக்காங்க. கொஞ்ச நேரத்துல தூங்கிடவும் போறாங்க. அப்புறம் என்ன பயம்?''

''அவங்க கண்காணிக்கப் போறதா தெரிஞ்ச பின்னாடி நாம கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருந்துடறது நல்லதில்லையா?''

''அப்படீன்னா... இன்னிக்கு ராத்திரி பூராவும் இதே ரூம்ல இருந்துடப் போறீங்களா?''

''ஆமா...''

''வேண்டாம். இது ஒரு நடிப்பாக இருந்தாலும் புவனாவோட மனசு ரொம்பவும் பாதிக்கப்படும். ஒரு மணி நேரமானதும் நீங்க புவனாவோட ரூமுக்குப் போயிடுங்க. நான் பாலமுரளிகிட்டே ஏற்கெனவே சொல்லி வச்சிருக்கேன். லாயரும், ஆடிட்டரும் தூங்கின பின்னாடி இண்டர்காம் மூலமா எனக்கு தகவல் கொடுக்கும்படி இன்ஸ்ட்ரக்ட் பண்ணியிருக்கேன். அவர் போன் பண்ணி சொன்னதும் நீங்க ரூமை விட்டு வெளியே போலாம். அதுவரைக்கும் நாம செஸ் விளையாடுவோம்''

சொல்லிக் கொண்டே செஸ் போர்டின் 'மேல்' அட்டையை விரித்தாள்.

'பாண்ட்ஸ்'களை வரிசையாய் நிறுத்திக் கொண்டே கிருஷ்ணகுமார் சொன்னான்: ''இன்னும் பத்து நாள்களை லாயருக்கும், ஆடிட்டருக்கும் சந்தேகம் வராமே எப்படி கழிக்கறதுன்னே தெரியலை.''

''இவங்க இவ்வளவு தீவிரமா இருப்பாங்கன்னு நானும் நினைக்கலை.''

செஸ் ஆட்டத்தில் நாற்பது நிமிடம் கரைந் திருந்தபோது அறையிலிருந்த இண்டர்காம் கிணுகிணுத்தது.

மைத்ரேயி ரிசீவரை எடுத்தாள்.

''எஸ்''

மறுமுனையில் பாலமுரளியின் குரல் கேட்டது.

''மேடம்! நான்தான்''

''எங்கிருந்து பேசிட்டிருக்கீங்க?''

''கிச்சன் செக்‌ஷனிலிருந்து''

''லாயர், ஆடிட்டர் தூங்கிட்டாங்களா?''

''இல்ல மேடம்! ரெண்டு பேரும் 'கார்ட்ஸ்' விளையாடிட்டு இருக்காங்க. அடிக்கடி வெளியே வந்து உங்க மாடி ரூமைப் பார்த்திட்டிருக்காங்க. இருக்கிற நிலைமையைப் பார்த்தா விடிய விடிய தூங்க மாட்டாங்க போலிருக்கே.''

''ஒரு காரியம் பண்ணுங்க பாலமுரளி''

''சொல்லுங்க மேடம்!''

''டீயோ, பாலோ ஏதாவது ஒண்ணை வேணுமான்னு கேட்டு அதுல ஸ்லீப்பிங் டேப்லட்சைப் போட்டுக் குடுத்துடுங்களேன். ரெண்டு கிழமும் தூங்கித் தொலை யட்டும்.''

''எஸ் மேடம்!''

''காரியத்தை செய்து முடிச்சுட்டு எனக்கு இண்டர்காம் பண்ணுங்க!''

''எஸ் மேடம்''

ரிசீவரை வைத்தாள் மைத்ரேயி.

பாலமுரளி பங்களாவின், கிச்சன் செக்‌ஷனிலிருந்து வெளிப்பட்டு இருட்டான ஹாலுக்குள் நடந்து லாயரும், ஆடிட்டரும் இருந்த அறைக்குள் நுழைந்தான். சீட்டு விளையாடும் மும்முரத்தில் இருந்த இருவரும் நிமிர்ந்தார்கள்.

''வாங்க மேனேஜர்! இன்னும் நீங்க தூங்கப் போகலையா?''

''போயிட்டே இருக்கேன். நீங்க?''

''தூக்கம் வர்ற வரைக்கும் விளையாடிகிட்டு இருப்போம்!''

''டீ, காபி ஏதாவது வேணுமா சார்?''



''இந்நேரத்துக்கு அதெல்லாம் எதுக்கு?''

''பாலாவது கொண்டு வந்து தரட்டுமா சார்?''

''என்ன லாயர் சார்! பால் சாப்பிடுவோமா?''

''எனக்கு அரை டம்ளர் போதும்.''

''சரி எனக்கும் அரை டம்ளர்.''

பாலமுரளி மறுபடியும் கிச்சனுக்குள் நுழைந்தான். பிளாஸ்க்கில் இருந்த சூடான பாலை இரண்டு டம்ளர்களில் வார்த்துக் கொண்டு தூக்க மாத்திரைகளை எடுப்பதற்காக பக்கத்து அறையில் இருந்த ஷெல்பை நோக்கிப் போனான்.

அரைமணி நேரம் கழித்து மைத்ரேயியின் அறை யிலிருந்த இண்டர்காம் கனத்தது. அவள் ரிசீவரை எடுத்தாள்.

''ம்''

''மேடம்! நான் பாலமுரளி.''

''என்னாச்சு?''

''நீங்க சொன்ன மாதிரியே பால்ல தூக்க மாத்திரை கலந்து குடுத்தேன். ரெண்டு பெரிசும் தூங்கிட்டிருக்கு.''

''அப்படின்னா... கிருஷ்ணகுமாரை புவனாவோட ரூமுக்கு தைரியமா அனுப்பிடலாமா?''

''அனுப்பிடலாம்... ரெண்டு கிழமும் நாளைக்கு காலையில ஏழு மணிக்குத்தான் கண்ணைத் தொறக்கும்...''

''சரி... நீங்க அவுட் ஹவுஸ் போயிடுங்க. காலையில் பார்ப்போம்.''

''எஸ் மேடம்.''

மைத்ரேயி ரிசீவரை வைத்துக் கொண்டே கிருஷ்ணகுமாரை புன்னகையோடு பார்த்தாள்.

''இனி நீங்க தைரியமா புவனாகிட்டே போலாம்.''

''லாயரும் ஆடிட்டரும்?''

''தூங்கிட்டாங்களாம்.''

''நடுவுல ஏதாவது முழிச்சிட்டாங்கன்னா?''

''ஏழு மணிக்கு முன்னாடி அவங்களை எந்திரிக்க விடாது தூக்க மாத்திரை. தைரியமா போங்க.''

கிருஷ்ணகுமார் எழுந்தான். அறைக்கதவின் தாழ்ப்பாளை விலக்கிக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். கீழே தெரிந்த ஹாலும், மாடி வராந்தாவும் இருட்டிலும் நிசப்தத்திலும் தெரிய மெதுவாய் வெளியே வந்தான். பூனையைப் போல் நடந்து புவனா இருந்த பக்கத்து அறையை நெருங்கி வெறுமனே சாத்தியிருந்த கதவைத் தள்ளினான்.

உள்ளே நுழைந்தான். கட்டிலில் தூங்காமல் படுத்திருந்த புவனா ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள். ''லாயர், ஆடிட்டர் ரெண்டு பேரோட கண்ல படாமதானே வந்தீங்க?''

''ஆமா.''
''கதவை மொதல்ல தாழ்ப்பாள் போடுங்க!''
போட்டான்.
இருவரும் கட்டிலில் வந்து உட்கார்ந்தார்கள். புவனா குரல் தழுதழுத்தாள். ''எனக்கு மனசே சரியில்லீங்க.''
''நானும் மைத்ரேயியும் உன்னைப் பத்தித்தான் பேசிக்கிட்டோம். ஒரு பத்து நாளைக்கு நடக்கப் போகிற விசயங்களைக் கண்டும் காணாத மாதிரி இருந்துக்க.''
''லாயரும், ஆடிட்டரும் இவ்வளவு தீவிரமா இருப்பாங்கன்னு நான் நினைக்கலைங்க. நல்லவேளை மைத்ரேயிக்கு குழந்தை பிறந்தாதான் சொத்தை அவ பேர்க்கு மாத்துவோம்னு சொல்லலை.''
''டொக். டொக்''
அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.




அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் கிருஷ்ணகுமாரும், புவனாவும் ஒருத்தரை ஒருத்தர் கலவரமாய்ப் பார்த்துக் கொண்டார்கள்.
''யார்ங்க அது?'' புவனா பயமாய் எச்சில் விழுங்கிக் கொண்டே கேட்டாள்.
''தெரியலையே?''
''நான் குரல் குடுத்து பார்க்கட்டுமா?''
''ம்.''
புவனா மெல்ல நடந்து கதவை நெருங்கி வந்தாள். கதவு மறுபடியும் தட்டப்பட்டது. குரல் கொடுத்தாள்.
''யாரது?''
''புவனா! நான்தான்'' பாலமுரளியின் குரல். நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளியிட்டபடியே தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்தாள்.
''ஏன பயந்துட்டீங்களா? புன்னகைத்துக் கொண்டே உள்ளே வந்தான். ''நானும் அவுட் ஹவுஸ் போய் 'பெட்'ல விழறேன். நாளைக்கு காலையில பார்ப்போம். கிருஷ்ணகுமார்! நீங்க மட்டும் காலையில ஆறு மணி சுமாருக்கு எழுந்து மைத்ரேயி ரூமுக்குப் போயிடுங்க. பெரிசு ரெண்டும் கண்ணை விழிச்சுப் பார்க்கும்போது நீங்க அந்த ரூம்லதான் இருக்கணும்!''
கிருஷ்ணகுமார் தலையாட்டினான்.
''நான் வரட்டுமா? குட் நைட்!'' பாலமுரளி வெளியே போனதும் கதவைச் சாத்தித் தாழிட்டாள் புவனா. கண்ணீரோடு திரும்பினாள்.
''காலையிலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் உயிர்போய் உயிர் வருதுங்க. எந்த நிமிசத்துல உண்மை தெரிஞ்சுடுமோன்னு 'நெக் நெக்' என்னு இதயம் அடிச்சுக்குது'' சொன்ன புவனாவின் உடல் நடுங்க



கிருஷ்ணகுமார் அவளை மெல்லமாய் போய் அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் தற்காலிகமாய் கொஞ்சம் கவலையை மறந்தாள் புவனா.

மறுநாள் காலை எட்டு மணி –
லாயரும், ஆடிட்டரும் டிபன் சாப்பிட்டுவிட்டு ஹாலுக்கு வந்து சோபாவில் உட்கார்ந்தார்கள். பாக்கை வாயில் போட்டு மென்று கொண்டே லாயர் சொன்னார்: ''ஆச்சரியமாயிருக்கு. நான் எவ்வளவு லேட்டா படுக்கைக்கு போனாலும் காலையில அஞ்சு மணிக்கெல்லாம் எந்திரிச்சுடுவேன். ஆனா இங்கே படுத்து தூங்கினதுல ஏழு மணிக்கு முன்னாடி எந்திரிக்க முடியலை.''
''என்னாலேயும் காலையில் எந்திரிக்க முடியலை. ராத்திரி படுக்கையில் சாய்ஞ்சதுதான் தெரியும். காலையில எந்திரிக்கும்போது ஏழு மணி.''
''குட்மார்னிங் சார்.''
இருவரும் நிமிர்ந்தார்கள்.
பாலமுரளி நின்றிருந்தான்.
''ஓ மானேஜரா? குட்மார்னிங் குட்மார்னிங். மாப்பிள்ளை எந்திரிச்சுட்டாரா?''
''ம். இப்பதான் எந்திரிச்சு உட்கார்ந்து பேப்பர் பார்த்திட்டிருக்கிறார். ரூமை விட்டு வெளியே வர இன்னும் ஒரு மணி நேரமாகும்.''
''வரட்டும் வரட்டும். பார்த்துட்டே கிளம்பறோம்.''
''டிபன் சாப்பிட்டீங்களா சார்?''
''ம். இப்பத்,நான் ஆச்சு''
''சார்'' குரலை தயக்கமாய் இழுத்தான் பாலமுரளி.
''ம்''
''மேடம் மைத்ரேயிக்கு உங்க ரெண்டு பேர் மேல கொஞ்சம் மனத்தாங்கல்''
''என் எதுக்கு?''
''அவங்க மேரீட் லைப்பை நீங்க சந்தேக கண்ணோட்டத்தோடு பார்த்து டெஸ்ட் பண்றதுக்காக ராத்திரி இங்கேயே தங்கினதுக்காக.''
''மைத்ரேயியும், மாப்பிள்ளையும் சந்தோசமா இருக்காங்களான்னு செக் பண்ணி பார்த்துட்டுதான் சொத்தை அவ பேருக்கு எழுதி வைக்கணும்னு உயில் வாசகம் சொல்லுதே.''
''பத்து நாளைக்கு இங்கேதான் தங்கப் போறீங்களா சார்?''
''நோ நோ எங்களுக்கு வேற வேலை இல்லையா என்ன? ஒரு பத்து நாளைக்கு எந்த நேரத்திலும் இங்கே வருவோம். மைத்ரேயியும், மாப்பிள்ளையும் சந்தோஷமா

ருக்காங்களான்னு பார்ப்போம். அவ்வளவுதான்'' லாயர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பங்களாவின் காம்பவுண்ட் கேட்டுக்குள் கைனடிக் ஹோண்டாவை ஓட்டியபடி ஒரு பெண் நுழைந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அவள் போர்டிகோவில் கைனடிக் ஹோண்டாவை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தாள். பாலமுரளி அவளை எதிர் கொண்டான்.

''எஸ்.''

''மிசஸ் புவனாவைப் பார்க்கணும்.''

''நீங்க யார்ங்கிறதைத் தெரிஞ்சுக்கலாமா?''

''என் பேர் லலிதா. புவனாவோட காலேஜ்மேட். நேத்து காலையில்கூட அவளோடு போனில் பேசினேன்.''

''உட்காருங்க. அவங்களைக் கூப்பிட்டு விடறேன்'' சோபாவைக் காட்டிவிட்டு மாடிக்குப் போனான் பாலமுரளி. புவனாவின் அறைக்குள் நுழைய, கண்ணாடி முன் நின்று நெற்றிப்பொட்டை சரி செய்து கொண்டிருந்த புவனா திரும்பினாள்.

''குட்மார்னிங்''

''குட்மார்னிங் சொல்லாதீங்க. இது பேட்மார்னிங்''

''ஏன்?''

''நேத்து காலையில உங்ககூட போன்ல பேசின பெண்ணோட பேரென்ன?''

''லலிதா.''

''அந்த லலிதா உங்களைப் பார்க்கறதுக்காக வந்து ஹால் சோபாவில் காத்திட்டிருக்கா.''

''அய்யய்யோ!'' கைகளை உதறினாள் புவனா. ''அவளுக்கு என்னோட கணவரைத் தெரியுமே! அவர் மும்பைக்கு வரலைன்னு போன்ல பொய் வேற சொல்லியிருக்கேன். இப்ப அவ எதுக்காக வந்திருக்கான்னு தெரிலையே?''

''கேசுவலா பார்க்க வந்திருக்கலாம்.''

''பாலமுரளி! நீங்க ஒரு ஹெல்ப் பண்ணணும்!''

''என்ன?''

''நான் ஹாலுக்குப் போறேன். அவகிட்டே பேசி திருப்பி அனுப்பற வரைக்கும் என்னோட ஹஸ்பெண்டை ரூமை விட்டு வெளியே வரச் சொல்லாதீங்க.''

''சரி.''

பாலமுரளி பக்கத்து அறைக்கு போக புவனா மாடிப்படி இறங்கி ஹாலை நோக்கிப் போனாள். உட்கார்ந்திருந்த லலிதா எழுந்தாள் புன்னகையோடு.

''வாடி லலிதா.''

அவள் ஓடி வந்து அணைத்துக் கொண்டாள். புவனா லாயரையும், ஆடிட்டரையும் பார்த்து அவசரப் புன்னகை சொன்னாள்.



''என்னோட ப்ரெண்ட் சார்.''

''தெரியும்மா! அந்தப் பொண்ணு எல்லா விவரத்தையும் என்கிட்டே சொல்லியாச்சு. அந்தப் பொண்ணு வேலை பார்க்கிற கம்பெனியில்தான் உனக்கும் வேலை கிடைச்சிருக்காமே?''

''ஆமா சார்!''

''ரூமுக்குக் கூட்டிக்கிட்டு போம்மா. உன்கிட்ட என்னவோ தனியா பேச வந்திருக்கு.''

''வா, லலிதா!'' ஹாலின் கோடியில் இருந்த ஓர் அறையை நோக்கிக் கூட்டிக் கொண்டு போனாள் புவனா. நடந்து கொண்டே கேட்டாள்.

''என்னடி இப்படி திடும்னு வந்து நிக்கறே?''

''கம்பெனி மானேஜிங் டைரக்டர் உன்னைப் பார்த்து பேசணுமாம். நேத்து சாயந்தரமே என்கிட்டே விசயத்தை சொல்லிட்டாங்க. நான்தான் மறந்துட்டேன். இன்னிக்கு காலையில எந்திரிச்சதும் திடீர்னு ஞாபகம் வந்தது. உனக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லலாம்னு வந்தா எங்க வீட்டு டெலிபோன் அவுட் ஆப் ஆர்டர். சரி நேர்ல போய் உன்னையும் பார்த்துட்டு விசயத்தையும் சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன். அம்மாடி இதென்ன வீடு? அரண்மனையா?''

அறைக்குள் நுழைந்தார்கள்.

''உட்கார்டி'' என்று சோபாவைக் காட்டிய புவனா கேட்டாள்: ''மானேஜிங் டைரக்டர் என்னை எதுக்காக கூப்பிட்டார்?''

''அவர் ஸ்டேட்சிலிருந்து நேத்து மத்தியானம்தான் மும்பைக்குத் திரும்பினார். உன் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் காப்பியைப் பார்த்துட்டு உன்கிட்ட பேசணும்னு ஒரு 'நோட்' எழுதி அனுப்பிட்டாரு. கர்டசிக்காகத்தான் கூப்பிட்டிருப்பார். பத்து மணிக்கு மேல கம்பெனிக்கு வர்றியா?''

''ம்''

''என்னடி சுரத்தில்லாம இருக்கே? ஒரு ரெப்யூட்டட் கம்பெனியில வேலை கிடைச்ச சந்தோஷமே உன் முகத்துல காணோமே.''

''ரெண்டு நாளா ஹெல்த் சரியில்லை. அதான் அப்படி?''

''முன்னைக்கு இப்போ உடம்பு போட்டுட்டே புவனா! இடுப்புல சதையைப் பார்... குறை... இல்லேன்னா பிரசவத்துக்கு அப்புறம் தொள தொளன்னு ஆயிடுவே!''

''சரி உன்னோட மேரீட் லைப் பத்தி நீ ஒண்ணுமே சொல்லலையே?''

''நீ கேக்கலை, நான் சொல்லலை.''

''இப்ப கேக்கறேன் சொல்லு''

''சுருக்கமா சொல்லட்டுமா? இல்லே கதை மாதிரி சொல்லட்டுமா?''

''உனக்குத்தான் ரப்பர் வாயாச்சே! சுருக்கமாகவே சொல்லு''

''போன வருசம் ஜனவரி பதினெட்டாம் தேதி எனக்கும் 'பிரேம் கிருஷ்ணன்'ங்கிறவர்க்கும் கல்யாணம் நடந்தது. இந்த வருசம் ஜூன் மாதம் டைவோர்ஸ் வாங்கிகிட்டோம்.''

''டை...டைவோர்சா? என்ன சொல்றே நீ?'' லலிதா சிரித்தாள்.

''நீ சுருக்கமா கேட்டதினாலே அப்படி சொன்னேன். நானும் பிரேம் கிருஷ்ணனும் மனப்பூர்வமா ஒருத்தரை ஒருத்தர் விரும்பித்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். அவருக்கு ஒரு விளம்பரக் கம்பெனியில் 'டிசைனர்' உத்தியோகம். நல்ல சம்பளம். கல்யாணமாகி ஓர் ஆறு மாசம் வரைக்கும் சந்தோஷமாத்தான் இருந்தோம். அதுக்கப்புறம் தான் ஒரு பிரச்சனை வந்தது. அந்த பிரச்சனை ஒரு பெண்ணோட ரூபத்துல வந்தது.''

''பொண்ணோட ரூபத்திலா?''

''எஸ்! புவான, ஒரு பெண் தன்னோட கணவனுக்கு இன்னொரு பெண்ணை அறிமுகப்படுத்தி வைக்கிறதோ, அவளை அவரோட சகஜமா பேச விடறதோ எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தான் எனக்குப் புரியுது!''

''லலிதா நீ என்ன சொல்றே?''

''என் ப்ளாட்டுக்கு பக்கத்து ப்ளாட்ல ஆஷான்னு ஒரு பெண். இண்டியன் ஏர்லைன்ஸ்ல ஏர் ஹோஸ்டஸ். அவளுக்கு ட்யூட்டி இல்லாத சமயங்கள்ல என் ப்ளாட்டுக்கு வருவா. அவளோட பயண அனுபவங்கள், பாசஞ்சர்சைப் பத்தி கதை கதையா சொல்லுவா. நல்லா சிரிக்க சிரிக்கப் பேசுவா. அவ பேசிட்டிருக்கும்போது என் கணவர் வர்ற பைக் சத்தம் கேட்டதுமே நான் வர்றேன்னு பின்பக்கக் கதவு வழியா அவளோட ப்ளாட்டுக்கு போயிடுவா. அப்படி ஒரு நாள் அவ என் கணவரோட பைக் சத்தத்தைக் கேட்டு பின் பக்க வழியா போக முயற்சி பண்ணினபோது அவ கையை கெட்டியா பிடிச்சுக்கிட்டேன். 'என்னோட ஹஸ்பெண்ட் என்ன புலியா? சிங்கமா? அவரை உனக்கு இன்னிக்கு அறிமுகப்படுத்தப் போறேன்னு சொன்னேன். அது மாதிரியே அறிமுகம் செய்து வச்சேன். அதுக்கப்புறம் அந்த ஆஷா பைக் சத்தம் கேட்டு ஓடலை. என் கணவருக்கு 'அலோ' சொல்லி சகஜமா பேச ஆரம்பிச்சா. சில சமயங்கள்ல மூணு பேரும் உட்கார்ந்து பேசுவோம். சில சமயங்கள்ல கிச்சன்ல எனக்கு வேலை இருந்தா அவங்க ரெண்டு பேர் மட்டும் பேசிட்டிருப்பாங்க. அதெல்லாம் அப்ப எனக்கு தப்பாவே தோணலை. ஒரு மாசத்துக்கு அப்புறம் ஒரு நாள் மென்சஸ் ப்ராப்ளம் காரணமா ஆபீசுக்கு அரை நாள் லீவு போட்டுட்டு வீட்டுக்கு வந்தேன். கதவுல பூட்டு இல்லை. ஆனா, கதவு உள்பக்கமா லாக் ஆகியிருந்தது. நானும், என்னோட கணவரும் தனித்



தனியா சாவி வெச்சிருக்கிறதுனால அவர்தான் உள்ளே இருக்கார்னு நினைச்சு கதவைத் தட்டப் போனேன். உள்ளே என் கணவரோட குரலும், ஆஷாவோட சிரிப்பும் கேட்டது.''

லலிதா சொல்லிக் கொண்டே போக புவனாவின் இருதய மையத்தில் ஓர் எரிமலை கண் திறந்து பார்த்தது.

''அப்புறம்?''

''அப்புறமென்ன? உடம்புல அரைகுறை துணியோட கையும் களவுமா ரெண்டு பேரையும் பிடிச்சேன். இது நியாமான்னு கேட்டேன். அதுக்கு அவர் ஒரு சிகரெட்டைப் பத்த வெச்சுக்கிட்டே ஒரு பதிலை சொன்னார்.''

''என்ன?''

''ஆஷா இல்லாமே எனக்கு வாழ்க்கை இல்லைனு சொல்லிட்டார்.''




புவனா பதற்றமாய்க் கேட்டாள். ''என்னடி இது அநியாயமா இருக்கு?''

லலிதா புன்னகைத்தாள்.

''அநியாயம்தான்! அந்த சமயத்துல என்னோட உணர்ச்சிகள் எப்படி இருந்திருக்கும்னு ஒரு விநாடி நனைச்சுப் பாரு... புவனா! அந்த ஆஷாவோட தலைமுடியைப் போய் ஆத்திரமாய்ப் பிடிச்சேன்... 'ஏண்டி எத்தனை நாளா இப்படி திருட்டுத்தனமா என் புருசன்கிட்டே நடந்துட்டிருக்கேன்னு கேட்டேன். அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா, புவனா?''

''என்ன சொன்னா?''

''எத்தனை தடவைன்னு என்னோட டைரியிலே குறிச்சு வெச்சிருக்கேன். சாயந்தரம் வேணும்னா வந்து சொல்றேன். இப்பவே தெரிஞ்சுக்கணும்னு நீ ஆசைப்பட்டா வா போகலாம்னு கூப்பிட்டா.''

''என்ன திமிர்? கன்னமே தெறிச்சுப் போற மாதிரி பளீர்னு ஓர் அறை விட வேண்டியதுதானே?''

''விட்டேன். உடனே என்னோட கணவருக்கு கோபம் வந்துருச்சு. 'இனிமே அவ மேல உன் கை பட்டா நான் சும்மா இருக்க மாட்டேன்'னு உறுமினார். 'ஆஷா இந்த வீட்டுக்குப் எப்ப வேணும்னாலும் வருவா போவா. அதையெல்லாம் நீ கண்டுக்கக் கூடாது. அப்படி இருக்கிறதா இருந்தால் இந்த வீட்ல இருக்கலாம். இல்லேன்னா வெளியே போய்கிட்டே இருக்கலாம்ன்னு வாசலை கைகாட்டிவிட்டார்.''

லலிதா சொல்லிக் கொண்டிருக்க, புவனா பயமும், பிரமிப்புமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அவர் வாசலை நோக்கி கை காட்டினதும் என்னால ஆத்திரத்தை அடக்க முடியலை. ஆபீசிலிருந்து திரும்பும் போது வாங்கின பூப்பொட்டலத்தைப் பிரிச்சு ரெண்டு

முழும் பூவை எடுத்துகிட்டு போய் - சுவர்ல மாட்டியிருந்த என் கணவரோட போட்டோவுக்கு சாத்தினேன். கழுத்தில் இருந்த தாலியைக் காட்டி அவர் மூஞ்சி மேல வீசி எறிஞ்சிட்டு ஆங்காரமா - என்னைப் பொறுத்த வரைக்கும் நீங்க செத்துட்டீங்க. சட்டப்படியான டைவோர்சுக்கு கோர்ட்ல சந்திப்போம்'ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''இந்த ஆம்பிளைகளுக்கு ஏன்தான் புத்தி இப்படி போகுதோ?'' புவனா கவலையாய் கன்னத்தைத் தாங்க லலிதா அதை மறுக்கிறவளைப் போல் தலையசைத்தாள்.

''ஆம்பிளைகளைக் குத்தம் சொல்லி பிரயோஜனமே இல்லை புவனா! ஓர் ஆம்பிளை திசை மாறிப் போறதுக்குக் காரணம் பெண் பண்ற முட்டாள்தனம்தான். ஆஷாவை என் கணவரோடு பழக விட்டது என்னோட இமாலயத் தப்பு. உரசினா பத்திக்கிற மாதிரியான உணர்ச்சி உடையவங்க ஆண்கள். சபலமான பெண்கள் அந்த மாதிரியான ஆண்களுக்குப் பக்கத்தில் போனா, ஒருத்தரையொருத்தர் சுலபமா இழந்துடுவங்க. நான் செய்த தப்புக்காக என்னோட கணவரைக் குறை சொல்லி எந்த பிரயோஜனமும் இல்லை.''

லலிதா பேசப் பேச புவனாவுக்கு முகம், கறுத்து பயத்தில் வியர்த்தது. சேலைத் தலைப்பால் மெலிதாய் ஒற்றிக் கொண்டாள். 'லலிதா செய்த தப்பை நானும் செய்கிறேனோ?'

''ஏண்டி உனக்கு இப்படி வியர்க்குது?''

''உன்னோட வாழ்க்கையைப் பத்தி நீ சொன்னதுமே எனக்கு ஒரு டென்சன்!''

''சென்னைல இருக்கிற உன் கணவரை நினைச்சிட்டியா?''

''ஆ…ஆமா''

''புவனா! நீ என்னிக்குமே எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. ஏன்னா சந்தர்ப்பம் கிடைக்காதவரை எல்லா ஆண்களும் உத்தமர்கள்தான். என்னோட மாஜிக் கணவர் பிரேம் கிருஷ்ணன் பெண்களைப் பார்த்தாலே ஒதுங்கற டைப். அநாவசியமா யாரோடும் பேச மாட்டார்.. என் ப்ளாட்டில் இருக்கிற மத்த பெண்களோடு அவர் பேசி நான் பார்த்ததில்லை. அப்பேர்ப்பட்டவரே தனியா சந்தர்ப்பம் கிடைச்சபோது தடம் மாறிட்டார். ஆஷா இல்லாம எனக்கு வாழ்க்கையே இல்லைன்னு என்கிட்டயே சொல்றார். இது எப்படி சாத்தியம்? பெண் எனும் ஒரு மாயப் பிசாசன்னு சித்தர் ஒருத்தர் பாடி வெச்சது தப்பான வாசகமே இல்லை.''

''டொக் டொக்''

அறைக் கதவு தட்டப்பட்டது.

இருவரும் திரும்பினார்கள்.

பாலமுரளி எட்டிப் பார்த்தான்.



''சாரி பார் த டிஸ்டர்பன்ஸ். உங்க ரெண்டு பேருக்கும் டிபன் இங்கேயே கொண்டு வரச் சொல்லட்டுமா?''

லலிதா தலையை ஆட்டினாள்.

''நோ. நோ. நான் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே சாப்பிட்டுத்தான் வந்தேன். வேணும்ன்னா ஒரு டம்ளர் காபி எடுத்துக்கறேன்.''

''சாப்பிடுங்க மேடம்! இந்த வீட்ல இட்லியும் கொத்து மல்லி சட்னியும் ரொம்பவும் பிரசித்தம்.''

''வேண்டாம். காபி போதும்.''

பாலமுரளியின் தலை மறைந்தது.

லலிதா கேட்டாள்: ''உன் ப்ரெண்ட் மைத்ரேயி எந்த ரூம்ல இருக்கா?''

''மாடியில்''

''நான் பார்க்கலாமா?''

''பொதுவா மைத்ரேயி யாரையும் பார்க்க பிரியப்படறதில்லை!''

''காரணம் காலோட ஊனமா?''

''ஆமா''

''அவகிட்டே கேட்டு பாரேன்!''

''சரி. வெயிட் பண்ணு. நான் போய் கேட்டுட்டு வந்துடறேன்.'' புவனா எழுந்து அறையினின்று வெளிப்பட்டு மாடிக்கு வேகவேகமாய் போனாள். லலிதா தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி சொன்னது மனசுக்குள் ஒரு திகிலை மூட்டியிருந்தது.

'கிருஷ்ணகுமாரும் மைத்ரேயியும் என்னை ஏமாற்றிவிடுவார்களா?'

'ச்சே! என் கணவர் அப்படிப்பட்டவரில்லை. ஒரு மனிதாபிமானத்துக்காகத்தான் மைத்ரேயிக்குக் கணவனா நடித்துக் கொண்டிருக்கிறார். சொத்து அவள் பெயருக்கு மாறியதும் நிலைமை சரியாகிவிடும்.''

மாடியறை வந்தது. உள்ளே பார்த்தபோது மைத்ரேயி சாசரில் காபியை ஊற்றி உதட்டுக்குக் கொடுத்துக் கொண்டிருக்க, கிருஷ்ணகுமார் ஜன்னல் ஓரமாய் இருந்த சோபாவில் உட்கார்ந்து பேப்பரைப் புரட்டியபடி தெரிந்தான். புவனா உள்ளே வந்ததும், இருவரும் கலைந்து நிமிர்ந்தார்கள்.

மைத்ரேயி கேட்டாள்: ''என்ன புவனா? கீழே யார் வந்திருக்கா''

''என்னோட ப்ரெண்ட்!''

''பேரு!''

''லலிதா!''

''என்னவாம்?''

''எனக்கு இப்ப வேலை கிடைச்சிருக்கிற கம்பெனியில தான் அவ வேலைக்கு இருக்கா. கம்பெனியோட எம்.டி. என்னைப் பார்க்கணும்னு சொன்னாராம்.''

''போயிட்டாளா?''
''இல்லை!''
''பின்னே நீ மேலே வந்துட்டே!''
''மைத்ரேயி! அவ உன்னைப் பார்க்கணும்ன்னு
ஆசைப்படறா. மேலே கூட்டிக்கிட்டு வரலாமா?''
''கூட்டிக்கிட்டு வாயேன்!''
''அவளுக்கு என்னோட கணவரைத் தெரியும். இங்கே
ரூமுக்கு வந்தா வம்பாயிடும்!''
கிருஷ்ணகுமார் எழுந்தான்.
''நான் வேணும்ன்னா கொஞ்ச நேரத்துக்கு பக்கத்து
ரூம்ல இருக்கேன்!''
''பக்கத்து ரூமெல்லாம் வேண்டாம். நீங்க மொட்டை
மாடிக்குப் போயிடுகங்க. லலிதா போனதும் கீழே இறங்கி
வாங்க!''
''சரி'' கையில் பேப்பரோடு கிருஷ்ணகுமார் மொட்டை
மாடி இருந்த திசை நோக்கி நடந்தான்.
மைத்ரேயி புன்னகைத்தாள்.
''இனிமே நீ உன்னோட ப்ரெண்ட் லலிதாவை
கூட்டிக்கிட்டு வரலாம்!''
புவனா கீழே வந்தாள். காபியைக் குடித்து முடித்து
பாலமுரளியோடு பேசிக் கொண்டிருந்த லலிதா
நிமிர்ந்தாள்.
''என்ன பர்மிஷன் கிடைச்சுதா?''
''ம்!''
''தாங்க்ஸ்! அஞ்சே நிமிஷம். பேசிட்டுக் கிளம்பிட
றேன்!'' புவனாவும், லலிதாவும், மாடிக்குப் போனார்கள்.
சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த மைத்ரேயி
லலிதாவைப் பார்த்ததும் புன்னைகத்து கை குவித்தாள்.
''வாங்க.''
லலிதாவும் கை குவித்தாள். ''புவனாவுக்கு நீங்க
காலேஜ் மேட். நான் அவளுக்கு ஸ்கூல் மேட். வெவ்வேறு
ஊருக்குப் போய் காலேஜ்ல படிச்சாலும் நாங்க ஒருத்தரை
ஒருத்தர் மறக்கலை.''
''அதுதான் உண்மை ப்ரெண்ட்ஷிப். உட்காருங்க.''
லலிதா உட்கார்ந்த கொண்டே சொன்னாள்: ''உங்க
வீடு அரண்மனை மாதிரி இருக்கு. ஐ லைக் இட்.''
மைத்ரேயி புன்னகைத்தாள். ''எல்லாருக்குமே இந்த
வீடு பிடிக்கும். என்னைத் தவிர.''
''ஏன் உங்களுக்கு பிடிக்காது?''
''இந்த வீட்ல நான் சந்தோஷமா இருந்த நாள்கள்
குறைவு. என்னோட அப்பா உயிரோடு இருந்த வரைக்கும்
அவரும் நானும் சண்டை போடாத நாளே கிடையாது!''
''அதுக்காக வீட்டைக் குற்றம் சொல்றது
சரியில்லையே! இப்ப இருக்கிற பெரிய ஆர்க்கிடெக்ட்ஸ்,



இன்ஜினியர்ஸ் எவ்வளவு முயற்சி பண்ணினாலும் இந்த மாதிரியான வீட்டைக் கட்ட முடியாது!''

லலிதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே லாயரும் ஆடிட்டரும் அறைக்குள் வந்தார்கள்.

''மைத்ரேயி!''

''என்ன லாயர் சார்?''

''நாங்க கிளம்பறோம்!''

''டிபன் சாப்பிட்டீங்களா?''

''திவ்யமா சாப்பிட்டோம். எனக்கு இன்னிக்கு கோர்ட்ல ஒரு முக்கியமான கேஸ் ஆர்க்யூமெண்ட் ஸ்டேஜ்.''

''சரி, போயிட்டு வாங்க!''

''உன் வீட்டுக்காரர் எங்கே? அவர்கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிடறோம்.''

''அ... அ... அவர் பாத்ரூம்ல இருக்கார்ன்னு நினைக்கிறேன்!''

''சரி. வந்ததும் சொல்லிடு. முடிஞ்சா இன்னிக்கு சாயந்தரம் வர்றோம்!''

மைத்ரேயி தலையாட்டினாள்.

அவர்கள் கிளம்பிப் போனதும் லலிதா ஆச்சரியமாய் மைத்ரேயியைப் பார்த்தாள். சொன்னாள்: ''உங்களுக்கு கல்யாணம் ஆகலைன்னே நினைச்சட்டிருக்கேன். உங்களை பத்தி புவனா சொன்னப்பக்கூட இந்த கல்யாண விசயத்தை சொல்லலையே.''

புவனா குறுக்கிட்டுச் சொன்னாள்.

''கல்யாணமே ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் ஆச்சு. அதுவும் சிம்பிளா கோயில்ல வச்சு.''

''கங்கிராட்ஸ்''

மைத்ரேயி அவஸ்தையாய் புன்னகைத்தாள். லலிதா தொடர்ந்தாள்: ''இனிமே உங்க வாழ்க்கை சந்தோஷமாயிருக்கும் மிஸஸ் மைத்ரேயி!''

''தேங்க்ஸ்!''

அறை வாசலில் மறுபடியும் லாயர், ஆடிட்டரின் சத்தம் கேட்டது. மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஆடிட்டர் கையில் ஒரு பழுப்பு நிறக் கவரோடு வர பின்னாலேயே லாயர் சிரிப்போடு தொடர்ந்தார்.

''எல்லா போட்டோவும் பளிச் பளிச்ன்னு விழுந்திருக்கு. போட்டோ கிராபர் நல்லா எடுத்திருக்கார்.''

புவனா கேட்டாள்: ''என்ன சார் கையில் கவர்?''

''போட்டோஸ். நேத்து ராத்திரி மைத்ரேயியையும் மாப்பிள்ளையையும் ஒரு போட்டோ கிராபரை கூட்டிட்டு வந்து நாலைஞ்சு ஸ்நேப்ஸ் எடுத்தோமே?''

''ஆ...ஆமா.''

''அதை போட்டோகிராபர் டெவலப் செய்து பிரிண்ட் போட்டுக் கொண்டு வந்துட்டார். எல்லாப் படங்களும்

அமர்க்களமா வந்திருக்கு'' ஆடிட்டர் சொல்லிக் கொண்டே கவரிலிருந்து போட்டோக்களை உருவினார்.

உருவியபோது -

ஒரே ஒரு போட்டோ மட்டும் விரல்களுக்கு சிக்காமல் நழுவி காற்றில் பறந்து லலிதாவின் மடியில் விழுந்தது.




லலிதாவின் மடியில் விழுந்த போட்டோவை புவனா பதற்றமாய் குனிந்து எடுப்பதற்குள் லலிதாவே அதை எடுத்தாள். போட்டோவில் பார்வையைப் போட்டவளின் முகம் சட்டென்று மாறியது.

''என்ன போட்டோவில் க்ளியரிட்டியே இல்லை. முகமெல்லாம் பூசி மெழுகின மாதிரி இருக்கு!''

லாயர் வெடித்தார்: ''அந்த ஒரு போட்டோ மட்டும் இல்லேம்மா. எடுத்த எல்லா போட்டோவும் அப்படித்தான் இருக்கு!''

''பின்னே ஒவ்வொரு போட்டோவும் பளிச் பளிச்னு அழகா விழுந்திருக்குன்னு சொன்னீங்க'' மைத்ரேயி கேட்டாள்.

''சும்மா கிண்டல் அடிச்சேன். மானேஜர் பாலமுரளி ஏற்பாடு செய்த போட்டோ கிராபர் எவ்வளவு அழகா போட்டோ எடுத்திருக்கான்னு காட்டத்தான். அந்த போட்டோ கிராபரை ஹாலிலேயே உட்கார வைச்சிட்டு அந்த அற்புதமான போட்டோக்களை எடுத்துட்டு வந்தோம். எங்கே பாலமுரளி?''

''லாயர் சார்! நான் இங்கிருக்கேன்!''

அறை வாசலில் குரல் கேட்க திரும்பினார்கள். ஆடிட்டர் வேகமாய் அவனை நெருங்கி போட்டோக் களைக் கையில் திணித்தார்.

''நீ ஏற்பாடு செய்த போட்டோ கிராபர் எவ்வளவு மோசமா ஸ்நேப் எடுத்திருக்கான் பார்த்தியா? அவன் கிட்டே என்னப்பா போட்டோவெல்லாம் இப்படி இருக்கேன்னு கேட்டா புது காமிராவைக் கொண்டு வந்து ஹேண்டில் பண்ணினேன் சார்! டெக்னிகலா ஏதோ நடந்துச்சுன்னு சொல்றான். ஒரு முக்கியமான பங்க்ஷனை போட்டோ எடுக்கும்போது இப்படியா அலங்கோலம் பண்றது?''

''சாரி சார்''

''சாரி சொல்லிட்டா தீர்ந்ததா? ஒரு ரோல் பூராவையும் அந்த போட்டோ கிராபர் நாசம் பண்ணியிருக்கான். ஒரு போட்டோவாவது நல்லா வந்திருக்கான்னு பாரு. எண்ணெயைப் போட்டு மெழுகின மாதிரி ஒரே மசமசப்பு.''

மைத்ரேயி குறுக்கே குரல் கொடுத்தாள். ''அட விடுங்க ஆடிட்டர் சார்! ஏதோ தப்பு நடந்து போச்சு. இதைப் போய் பெரிசா எடுத்துகிட்டு.''



ஆடிட்டரும், லாயரும் பாலமுரளியை முறைப்பாய் பார்த்துக் கொண்டே வெளியேறினார்கள். அறையில் நிலவிய அரை நிமிஷ நேர நிசப்தத்தின் பிறகு லலிதா எழுந்தாள்.

''மிஸஸ் மைத்ரேயி! நானும் கிளம்பறேன். உங்களை சந்திச்சு கொஞ்ச நேரம் பேசிட்டிருந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

மைத்ரேயியும் கைகளைக் குவித்தாள். புவனா லலிதாவை வழியனுப்புவதற்காக அவளோடு எழுந்து நடந்தாள். அவர்கள் தலைமறைந்ததும் பாலமுரளி வாயைத் திறந்தான்.

''மேடம், அந்த போட்டோஸ்?''

''எனக்குத் தெரியும். வேணும்னே அவுட்-அப் போகஸ் செய்து ஸ்நேப் பண்ணச் சொன்னது நீங்கதானே?''

''ஆமா மேடம்!''

''நீங்க செய்தது உத்தமமான காரியம். போட்டோகிராபர் உங்களுக்கு தெரிஞ்ச ஆள்தானே?''

''ஆமா மேடம்!''

''வெளியே யார்கிட்டேயும் சொல்லிட மாட்டானே?''

''எனக்குத் தெரிஞ்ச ஆள் மட்டுமில்லை மேடம்! நம்பிக்கையான ஆளும் கூட!''

''இதோ பாருங்க பாலமுரளி, சொத்து என் பேருக்கு மாறுகிற வரைக்கும் ஒவ்வொரு திட்டமும் துல்லியமா நடக்கணும். ஏதாவது குளறுபடி நடந்து விசயம் வெட்ட வெளிச்சமாயிட்டா பாதிக்கப்படறது புவனாவும் அவளோட புருசனும்தான். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவங்க என்னால பாதிக்கப்படக் கூடாது!''

''எனக்குத் தெரியும் மேடம்!''

''சரி, லாயரும் ஆடிட்டரும் என் பேருக்கு சொத்து மாத்தறதைப் பத்தி என்ன பேசிக்கிட்டாங்க?''

''நீங்களும் கிருஷ்ணகுமாரும் ஒரு வாரம் பத்து நாள் சந்தோசமா இருக்கிறதைப் பார்த்துட்டுதான் அதுக்கு ஏற்பாடு எண்ணுவாங்களாம்!''

''ரெண்டுமே சந்தேகக் கோட்டான்கள்!''

''அவங்களை சமாளிக்க நானாச்சு மேடம்! நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாம ப்ரீயா இருங்க.''

''சரி, கிருஷ்ணகுமார் மொட்டை மாடியில் இருப்பார்., போய் வரச் சொல்லிடுங்க!''

தலையாட்டிக் கொண்டே நகர முயன்ற பாலமுரளி நின்றான்.

''மேடம்.''

''என்ன?''

''ஊர்ல என்னோட சிஸ்டருக்கு மேரேஜ் பிக்ஸ் பண்ணிட்டதா அப்பா லெட்டர் எழுதியிருக்கிறார்!''

''பணம் அனுப்பணும் இல்லையா?''

''ஆமா மேடம்!''

''எவ்வளவு வேணும்?''

''ஐம்பதாயிரம்!''

''சொத்து என் பேருக்கு வரட்டும். முதல் செக் உங்களுக்குத்தான்!''

''தேங்க்யூ மேடம்'' பாலமுரளி வெளியே போனதும் புவனா உள்ளே வந்தாள். ''மைத்ரேயி! ஒரு நிமிஷம் நான் ஆடிப் போயிட்டேன். போட்டோ மட்டும் க்ளீயரா வந்திருந்து. அதை லலிதா பார்த்திருந்தா இங்கே ஒரு சின்ன பூகம்பமே நடந்திருக்கும்!''

மைத்ரேயி புன்னகைத்தாள். ''பாலமுரளி இருக்கிற வரைக்கும் நீயும், நானும் பயப்பட வேண்டியதில்லை புவனா!''

''லலிதா இப்படி திடீர்னு வந்து நிற்பாள்னு நான் நினைக்கலை!''

''எதுக்கு வந்தா?''

''கம்பெனி எம்.டி. என்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாராம்!''

''அப்படின்னா நீ போகணும்.''

''ஆமா.''

''எத்தனை மணிக்கு?''

''பத்து மணிக்கு.''

''காரை எடுத்துக்கிட்டு போயிடு. வேணும்ன்னா உன்னோட கணவரையும் கூப்பிட்டுக்கோ''

''வேண்டாம். மைத்ரேயி! போடற வேஷத்தை ஒழுங்கா போட்டு நடிச்சுடலாம். என்னோட கணவர் இங்கேயே இருக்கட்டும்.''

**கா**லை ஒன்பது மணி.

லாயர் தன்னுடைய அலுவலக அறைக்குள் நுழைந்து இருக்கையில் சாய்ந்ததும் இண்டர்காம் ரிசீவரை எடுத்து. ''ஜீவா... என்றார்!''

''நான்தான் சார்!''

''என்ன செய்துட்டிருக்கே?''

''ஆர்க்யூமெண்ட் பாயிண்ட்சை டைப் செய்துட்டிருகக்கேன்!''

''அதை அப்படியே வெச்சுட்டு என்னோட ரூமுக்குகு வா'' லாயர் ரிசீவரை வைத்துவிட்டு அன்றைய தபாலில் வந்த ஒரு கடிதத்தைப் பிரிப்பதற்குள் அந்த இளைஞன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். வெள்ளை நிற பேண்டுக்குள் இளநீல சர்ட்டை நுழைத்து இன்செய்து பெல்ட்டை மாட்டியிருந்தான்.

''சார்!''

''உட்கார்''



அவன் உட்கார்ந்தான். லாயர் தொடர்ந்தார்: ''என்கிட்டே இருக்கிற ஜூனியர்களிலேயே உனக்குத்தான் கொஞ்சம் முன் யோசனையும் நிதானமும் இருக்கிறதுனால ஒரு முக்கியமான வேலையை உன்கிட்டே ஒப்படைக்கப் போறேன்!''

''சொல்லுங்க சார்! எந்த கேசானாலும் நான் டீல் பண்றேன்!''

''இது கேஸ் இல்லை.''

''பின்னே?''

''ஒரு வீட்டையும், அதுல இருக்கிறவங்களையும் கண்காணிக்கிற வேலை!''

''கண்காணிக்கிற வேலையா?''

''எஸ், உனக்கு மைத்ரேயியைத் தெரியுமில்லையா?''

''அந்த சக்கர நாற்காலிதானே!''

''அவளேதான். அவ கல்யாணம் செய்துக்கிட்டாதான் சொத்து பூராவும் அவ பேருக்கு வரும்ங்கிற விசயத்தையும் உனக்கு சொல்லியிருக்கேன்!''

''ஆமா சார்!''

''கல்யாணமே செய்துக்க மாட்டேன்னு பிடிவாதமா இருந்த அந்த மைத்ரேயி நேத்திக்கு யாருக்கும் தெரியாம போய் ஏதோ ஒரு கோயில்ல கல்யாணத்தை முடிச்சுகிட்டு வந்திருக்கா. மாப்பிள்ளை பேரு கிருஷ்ணகுமார். சென்னையைச் சேர்ந்தவர். பிசினஸ் - ரேடியோ ஸ்பேர் பார்ட்ஸ் ஏஜென்சி.''

''இப்பவாவது மனசு மாறி கல்யாணத்தை செய்துக்கிட்டாங்களே! இல்லேன்னா சொத்து பூராவும் அநாதை விடுதிகளுக்கும், கோயில்களுக்கும் போயிருக்குமே?''

ஜீவாவைக் கையமர்த்தினார் லாயர். ''அவசரப்படாதே! நான் பேச வந்த விசயத்தையே இன்னும் ஆரம்பிக்கலை.''

''சார்''

''இந்தக் கல்யாணம் எனக்கு சந்தேகமா இருக்கு!''

''சந்தேகமா?''

''எஸ். உண்மையிலேயே நடந்த ஒரு கல்யாணம் மாதிரி இது எனக்குத் தோணலை. மைத்ரேயி ஒரு கெட்டிக்காரப் பெண். சொத்தைத் தன் பேருக்கு மாத்தறதுக்காக ஒரு செட்டப் கல்யாணம் செய்து இருப்பாளோன்னு என் மனசுக்குள்ளே ஒரு நெருடல். அது உண்மையாவே நடந்த கல்யாணமா. அல்லது செட்டப்பான்னு நீதான் கண்டுபிடிக்கணும்!''

''சார்!'' ஜீவாவின் நெற்றியில் சுருக்கம் விழுந்தது.

''ரெண்டு நாளைக்கு அந்த வீட்டைக் கண் காணிக்கிறதுதான் உன்னோட வேலை. அந்த வீட்டுக் குள்ளே யார் யார் போறாங்க. யார் யார் வர்றாங்கன்னு லிஸ்ட் பண்ண வேண்டியது முதல் வேலை. ரெண்டாவது

அந்த கிருஷ்ணகுமார் எங்கேயாவது வெளியே போனா அவனை பாலோ செய்து அவன் யார் யாரை மீட் பண்றான்னு பார்க்கணும்.''

''சரி சார்!''

''விஷயம் மத்த ஜூனியர்சுத் தெரியக் கூடாது!''

''சொல்ல மாட்டேன் சார்!''

''கிளம்பு. மைத்ரேயி வீட்டுக்கு எதிர்ல ஒரு லெண்டிங் லைப்ரரி இருக்கு. புஸ்தகத்தை அங்கேயே உட்கார்ந்து படிச்சிட்டு திருப்பித் தந்திடலாம். அங்கே போய் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துக்கிட்டு உட்கார்ந்துக்கோ. படிக்கிற மாதிரி பாவ்லா செய்துகிட்டே பங்களாவை வாட்ச் பண்ணு.''

''எஸ் சார்!''

''கிருஷ்ணகுமார் எப்படி இருப்பான்னு சொல்றேன். கேட்டுக்கோ. நல்ல உயரம், மாநிறம், சிலுப்பின மாதிரி சுருட்டை முடி, கழுத்தை ஒட்டின மாதிரி செயின் போட்டிருப்பான். அப்புறம் அந்த வீட்ல புவனான்னு ஒரு பொண்ணு இருப்பா. வயசு இருபத்தஞ்சுக்குள்ளே. அழகான பொண்ணு.''

'' அவளையும் பாலோ பண்ணணுமா சார்?'

''வேண்டாம். நமக்கு முக்யம் கிருஷ்ணகுமார்தான். அவனை மட்டும் க்ளோஸ் பாலோஅப் பண்ணினா போதும்.''

ஜீவா தலையாட்டிவிட்டு அறையினின்று வெளிப் பட்டு ஸ்கூட்டர் சாவியை எடுத்துக் கொண்டு ஆபீஸ் வாசலில் நிற்கும் தன் ஸ்கூட்டரை நோக்கிப் போனான்.

அதே விநாடிகளில் -

ஆடிட்டர் வீட்டின் உள்ளறையில் தன் ஒரே மகன் சுதாகரோடு கீழ் ஸ்தாயி குரலில் பேசிக் கொண்டிருந்தார். ''இது இப்படி 'திடுதிப்'னு' கல்யாணத்தை செய்துகிட்டு வந்து நிப்பான்னு தோணலையடா சுதாகர்! கடைசி வரைக்கும் கல்யாணமே வேண்டாம்னு சொல்லி வீம்பா இருந்துடுவான்னு நினைச்சேன். அந்த தைரியத்துலதான் அவளோட சொத்து விவகாரங்கள்ல சிலமிஷங்களை செய்து லட்சக் கணக்குல பணத்தை உருவியிருக்கேன். நாளைக்கு இந்த அக்கவுண்ட்டை எல்லாம் மைத்ரேயியும் அவ புருசனும் சரிபார்க்க ஆரம்பிச்சா நிச்சயமா நான் மாட்டிக்குவேன்!''

நகத்தை கடித்தபடி யோசித்துக் கொண்டிருந்த இருபத்தைந்து வயது சுதாகர் தன் அப்பாவை ஏறிட்டான்.

''திடீர்னு நடந்த கல்யாணம்தானே?''

''ஆமா!''

''உங்களையோ லாயரையோ கல்யாணத்துக்கு கூப்பிடலை. இல்லையா?''



''ஆமா''

''அப்பா!''

''ம்...''

''எனக்கு கிருஷ்ணகுமார் மேல சந்தேகமா இருக்கு.''

## 15

ஆடிட்டர் தன் மகன் சுதாகரை ஏறிட்டார்.

''கிருஷ்ணகுமார் மேல சந்தேகப் படறியா...?''

''ஆமா...''

''என்ன சந்தேகம்...?''

''மைத்ரேயிக்கு அவன் உண்மையாகவே புருஷன் தானா...? அல்லது வாடகைக்குப் புருஷனாங்கிற சந்தேகம்தான்...''

''உண்மையான புருஷன்தான்... கோயிலுக்குப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்ததுக்கு சாட்சியம் இருக்கே...!''

''யார் யார் சாட்சியம்...?''

''பாலமுரளி, புவனா, கோயில் அர்ச்சகர்...''

''எந்தக் கோவில் அர்ச்சகர்னு தெரியுமா?''

''மாதுங்கா விநாயகர் கோயில்ல இருக்கிற அர்ச்சகர்னு சொன்னாங்க...''

''அது போதும் எனக்கு...''

''உன்னால என்ன பண்ண முடியும்...?''

''பண்ணிட்டு வந்து சொல்றேன்பா...'' சுதாகர் நாற்காலியை பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தான்.

''நான் வரட்டுமா?'' - புவனா தோளில் டம்ப்ப் பையை மாட்டிக் கொண்டு மேஜையின் மேலிருந்த கார் சாவியைப் பொறுக்கிக் கொண்டாள்.

வீடியோவில் படம் பார்த்துக் கொண்டிருந்த மைத்ரேயியும் கிருஷ்ணகுமாரும் நிமிர்ந்தார்கள். மைத்ரேயி கொஞ்சம் கவலையோடு கேட்டாள்.

''காரைத் தனியே ட்ரைவ் பண்ணிக்கிட்டு நீயே போய்ட்டு வந்துடுவியா?''

''எனக்கென்ன பயம்?''

''இது சென்னை இல்லை. மும்பை.''

''இருக்கட்டுமே.''

''துணைக்கு உன்னோட கணவரைக் கூட்டிக்கிட்டு போயேன்.''

''வேண்டாம். அவர் இங்கேயே இருக்கட்டும். நான் போய்ட்டு ஒரு மணி நேரத்துல வந்துடறேன்.''

புவனா கிளம்பினாள். மாடிப்படி இறங்கும்போது மனசுக்குள் லேசாய் ஓர் உறுத்தல். 'இவரை இப்படி தனியே

விட்டுவிட்டுப் போவது சரியா?' லலிதா சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் முகாம் அடித்தன.

'ஆம்பிளைகளை குத்தம் சொல்லி எந்த பிரயோஜனமும் இல்லை புவனா! ஓர் ஆம்பிளை திசைமாறிப் போறதுக்குக் காரணம் பெண் பண்ற முட்டாள்தனம்தான். ஆஷாவை என் கணவரோடு பழக விட்டது என்னோட இமாலயத்தப்பு. உரசினா பத்திக்கிற மாதிரியான உணர்ச்சி உடையவங்க ஆண்கள். சலபமான பெண்கள் அந்த மாதிரியான ஆண்களுக்கு பக்கத்தில் போனா ஒருத்தரையொருத்தர் சுலபமா இழந்துடுவாங்க. நான் பண்ணின தப்புக்காக என்னோட கணவரை குறை சொல்லி எந்த பிரயோசனமும் இல்லை. சந்தர்ப்பம் கிடைக்காதவரை எல்லா ஆண்களும் உத்தமர்கள்தான்.'

மாடிப்படி இறங்கிக் கொண்டிருந்த புவனா சட்டென்று நின்றாள். 'அவரை அழைத்துக் கொண்டு போய்விடலாமா?'

'அதுதான் சரி!'

மறுபடியும் மாடிப்படி ஏறி மைத்ரேயியின் அறைக்கு முன்பாய் வந்து நின்றாள். மைத்ரேயி அவளை ஆச்சரியமாய் ஏறிட்டாள்.

''என்ன புவனா?''

''அவரையும் நான் கூட்டிக்கிட்டே போறேன். நீ சொன்ன மாதிரி நான் காரை தனியா ஓட்டிக் கொண்டு போறது சரியில்லைதான்.''

''நான் ரெடி...''

கிருஷ்ணகுமார் எழுந்தான். கண்ணாடி முன் நின்று தலையை வாரிக் கொண்டு கிளம்பினான். மைத்ரேயி புன்னகையோடு புவனாவைப் பார்த்து தலையசைத்தாள்.

''உன்னோட கணவரை காரை ஓட்டட்டும். நீ பின் சீட்ல உட்கார்ந்து டோர் கிளாசை ரெய்ஸ் பண்ணிக்கோ. க்ளாசை ஏத்தி விட்டுட்டா வெளியே இருந்து பாக்கிறவர்களுக்கு நீ உள்ளே இருக்கிறது தெரியாது.''

கிருஷ்ணகுமார், புவனா இருவரும் அறையை விட்டு வெளியே வந்து மாடிப்படிகளில் இறங்கி போர்டிகோவில் நின்றிருந்த காருக்கு வந்தார்கள்.

கிருஷ்ணகுமார் ட்ரைவிங் சீட்டுக்குப் போக, - புவனா பின் சீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

கார் நகர்ந்து காம்பவுண்ட் கேட்டைத் தாண்டியது கிருஷ்ணகுமார் கேட்டான்.

''என்ன திடீர் மாற்றம்?''

''எதுக்கு?''

''என்னை வேண்டாம்னு சொல்லிட்டு, மறுபடியும் எதுக்காக வந்து கூப்பிட்டே?''

''நான்தான் சொன்னேனே? தனியாகப் போக பயம்



''காரணம் அதில்லை.''

''பின்னே?''

''நான் மைத்ரேயியோடு அந்த ரூம்ல இருக்கிறது உனக்குப் பிடிக்கலை.''

''நோ நோ''

''அதுதான்''

''நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லை.''

கிருஷ்ணகுமார் சிரித்துக் கொண்டே காரை ஓட்டினான். ''எப்படியோ இன்னும் ஒரு பத்து நாளைக்கு ஒழுங்காக இந்த 'செட்டப்' நாடகத்தைப் போட்டு மைத்ரேயியோட பேருக்கு சொத்தை மாத்திட்டா போதும்.''

''எனக்கென்னவோ இப்ப பயமாயிருக்குங்க.''

''என்ன பயம்?''

''லாயரும், ஆடிட்டரும் சாமான்யப்பட்டவங்க மாதிரி தெரியலை. அவங்க பேசற பேச்சும், நடந்துக்கிற முறையையும் பார்த்தா மைத்ரேயியோட பேருக்கு அவ்வளவு சீக்கிரத்துல சொத்தை மாத்த மாட்டாங்கன்னு எம் மனசுக்குப் படுது.''

''எதனால அப்படி சொல்றே?''

''எனக்குக் காரணம் புரியலை.''

''மனசைப் போட்டு குழப்பிக்காதே புவனா! உயில் வாசப்படி மைத்ரேயிக்கு கல்யாணமானதும் சொத்து பூராவையும் அவ பேருக்கு மாத்தியாகணும். எப்படியும் நாலைஞ்சு நாளைக்குள்ளே - ஆடிட்டரும் லாயரும் அதுக்கான ஏற்பாடுகளை செய்வாங்கன்னு நினைக்கிறேன்.''

''பண்ணினா சரிதான்.''

கார் பதினைந்து நிமிடங்களையும் - ஆறு கிலோ மீட்டர்களையும் விழுங்கி கம்பெனியின் பிரம்மாண்ட கட்டிட காம்பவுண்ட் கேட்டுக்குள் நுழைந்தது. கார் பார்க்கிங்கில் போய் ஒதுங்கி நின்றது.

புவனா இறங்கினாள்.

''நீங்க கார்க்குள்ளேயே இருங்க. நான் போய் எம்.டி.யைப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''சீக்கிரமா வந்துடுங்கம்மா. காரை ரொம்ப நேரம் வெயிட்டிங் போட்டுடாதீங்க.''

பிசிறில்லாமல் ஒழுங்காய் லிப்ஸ்டிக் பூசியிருந்த அந்த ரிசப்ஷனிஸ்ட் புவனாவை ஏறிட்டபடி ''எஸ்'' என்றாள்.

''எம்.டி.யைப் பார்க்க வேண்டும்ட.''

''எக்சிக்யூடிவ் ஆர் மானேஜிங்?''

''மானேஜிங்?''

''பர்ப்பஸ்?''

''அவர் வரச் சொல்லியிருந்தார்.''

''யுவர் குட் நேம் ப்ளீஸ்.''

''புவனா.''

''ஒன் மினிட்'' - சொன்னவள் இண்டர்காமின் ரிசீவரை எடுத்து மெலிதான இந்தியில் யாருடனோ பேசி விட்டு புவனாவை எறிட்டாள்.

''கோ அண்ட் ஸீ''

''வேர் ஈஸ் ஹிஸ் காபின்?''

''பர்ஸ்ட் ப்ளோர்.''

''போனாள்.

ஏர்கண்டிஷன் சில்லிப்பில் இருந்த பப்பாளிப்பழ நிற எம்.டிஇயை சந்தித்தாள். முன் வழுக்கையில் மெலிதான நரை க்ராப் துளி ரோமம் இல்லாத தாடை கழுத்தில் ஸ்வஸ்திக் டாலரோடு ஒரு செயின்.

''குட்மார்னிங் சார்!''

''குட்மார்னிங் மிஸஸ் புவனா.''

எதிரே இருந்த நாற்காலியைக் காட்டினார்.

உட்கார்ந்தாள்.

எம்.டி. சுலபமான ஆங்கில வார்த்தைகளோடு பேசினார்.

''எங்க கம்பெனியில் உங்களுக்கு வேலை பார்க்க சம்மதம்தானே?''

''சம்மதம்தான் சார்''

''ஹஸ்பெண்ட் எங்கே?''

''சென்னையில்.''

''அவர் அங்கே நீங்க இங்கே எப்படி?''

''அவர் டிரான்ஸ்பர் வாங்கிட்டுவந்துடுவார்.''

''தட்ஸ் குட்'' என்று உள்ளங்கையைத் தேய்த்த எம்.டி. ஒரு சிரிப்போடு சொன்னார். ''அப்ளிகேஷன்ல இருந்த போட்டோவை விட நேர்ல பார்க்கிறதுக்கு ரொம்ப அழகா இருக்கீங்க.''

''தாங்க்யூ சார்'' - சொன்னவள் திடுக்கிட்டாள். அவருடைய பார்வை போகக் கூடாத இடத்திற்கெல்லாம் போய்க் கொண்டிருந்தது.

''மிஸஸ் புவனா... அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரில் இருக்கிற சம்பள ஸ்கேலைப் பத்தி பொருட்படுத்தவே வேண்டாம்... அவுட் ஆப் ரிகார்ட்ஸ் நான் உங்களுக்கு சேலரி தர்றேன்... எவ்வளவு தெரியுமா.. மந்த்லி முப்பதாயிரம்.''

புவனா திகைத்தாள்.

எம்.டி. சிரித்தார்.

''என்ன அப்படி பார்க்கிறீங்க...? புவனா.... ப்ராங்கலி ஐயாம் டெல்லிங் யூ... நான் அழகை ஆராதிக்கிற ரகம். அட் எனி காஸ்ட்...ஐ...வில்...''

புவனா நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தாள்.



''அட... ஏன் எந்திரிச்சுட்டீங்க?''

''ஒன் மினிட்'' - சொன்னவள் டம்பப் பையைப் பிரித்து உள்ளே இருந்த அந்தக் கம்பெனியின் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை எடுத்தாள்.

கிழித்தாள்.

இரண்டாய் -

நான்காய் -

எட்டாய் -

''ஏய் வா ஆர் யூ டூயிங்?''

காகிதத் துணுக்குகளை எம்.டியின் முகத்தின் மேல் வீசியெறிந்துவிட்டு தமிழில் சொன்னாள்.

''பொறுக்கி ராஸ்கல்ர நீயெல்லாம் ஒரு தாய்க்குப் பொறந்திருக்க மாட்டே... தெரு நாய்க்குத்தான் பொறந்திருப்பே.''

''வாட் வாட்?''

''அர்த்தம் புரியலையா? போய் தமிழைக் கத்துக்க. புரியும்'' கத்திவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு கோபமாய் வெளியேறினாள் புவனா.

லலிதா எதிர்ப்பட்டாள்.

''புவனா!'' கூப்பிட்ட அவளை உக்கிரமாய் முறைத்தாள் புவனா.




புவனாவின் முறைப்பைப் பொருட்படுத்தாமல் லலிதா புன்னகைத்தாள். ''என்ன புவனா? கம்பெனி எம்.டியைப் பார்த்துப் பேசினதும் ரொம்ப சூடாயிட்டே போலிருக்கே?''

''லலிதா! நான் இங்கே வேலைக்கு வர்ற மாதிரி இல்லை.''

''ஏன்?''

''உங்க கம்பெனி எம்.டி. கிட்டே பணம் இருக்கு. ஆனா ஒழுங்கு இல்லை...''

லலிதா மெதுவாய் நடந்து வந்து புவனாவின் தோள் மேல் கையை வைத்தாள். ''எம்.டி. உங்கிட்டே ஒரு மாதிரி பேசியிருப்பாரே...?''

''ஆமா.''

''மாசம் முப்பதாயிரம் ரூபாய் தர்றேன். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிட்டு போகணும்ன்னு சொல்லியிருப்பாரே?''

-''ஆமா...''

''அவர் அப்படி பேசினதுக்கு நீ என்ன பண்ணினே?''

''அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் காப்பியை கிழிச்சு அவர் மூஞ்சி மேலயே வீசிட்டு வந்தேன்.''

லலிதா சிரித்தாள்.

''என்னடி சிரிக்கறே?''

''பரீட்சையில் நீ பாசாயிட்டே!''

''பரிட்சையா?''

''எஸ். இங்கே புதுசா வேலைக்கு சேரப் போகிற உனக்கு எங்க கம்பெனி எம்.டி. வெச்ச பரீட்சை இது. எனக்கே கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் இந்த பரீட்சை விஷயம் தெரியும்.''

''எ...எதுக்காக இது?''

''காரணம் இருக்கு. இந்த கம்பெனி ஒரு கடல் மாதிரி. 'டிப்ரஷன்' நடக்க எல்லா டிபார்ட்மெண்ட்லேயும் சான்சஸ் இருக்கு. ஸ்டாப் ஒழுக்கமானவங்களா இருந்தால்தான் கம்பெனியும் ஆரோக்கியமா இருக்கும்ங்கிறது எம்.டி. யோட எண்ணம். ஸோ.... பணத்தாசை பிடிச்ச, சபலப்பட்ட பெண்களுக்கு இந்தக் கம்பெனியில் இடம் இல்லை. ஜெனுய்ன் ஸ்டாபை செலக்ட் பண்ணத்தான் எம்.டி. இப்படி ஒரு வழியை வெச்சிருக்கார். ஆனா பரீட்சைகள் வெவ்வேறு ரூபத்துல இருக்கும்ங்கிறது இப்பத்தான் எனக்குத் தெரியும்.''

அவள் பேசப்பேச பின்பக்கம் தொண்டை கனைப்பு சத்தம் எழுந்தது.

புவனா திரும்பினாள்.

எம்.டி. புன்னகையின் பரப்பை பெரிதாக்கியபடி நின்றிருந்தார். ''மிஸஸ் புவனா! இது ஒரு செக் பாயிண்ட்தான். நான் பேசியதைத் தப்பாய் எடுத்துக்க வேண்டாம். இந்த கம்பெனியில் ஏறக்குறைய ஐம்பது பேர் கீ போஸ்ட்களில் இருக்கிறார்கள். அத்தனை பேரும் ஆண்கள். இதற்கு முன்பு இங்கே வேலைக்கு இருந்த சில பெண்கள் கீ போஸ்டில் இருக்கிற ஆண்களோடு இல்லீகல் டச் வைத்துக்கொண்டு கம்பெனியின் நிர்வாகத்திறனையே பாழடித்து வந்தார்கள். அந்தப் பெண்களையும், ஆண்களையும் களையெடுத்து வீட்டுக்கு அனுப்பலாயிற்று. அந்தத் தவறு மறுபடியும் நடக்கக்கூடாது என்பதற்காகவே ஒரு செக் பாயிண்ட்டை வைத்து சபலப்படாத பெண்களை செலக்ட் செய்கிறோம். நான் பேசியதுக்கு ஆத்திரமடைந்து அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை கிழிச்சப் போட்டதின் மூலமா, என் கம்பெனியில வேலை செய்ய நீங்க பொருத்தமானவங்கங்கிற முடிவுக்கு வந்துட்டேன்.''

புவனா அவரை ஏறிட்டு மெல்லிய குரலில் முனகினாள். ''சாரி சார்! நான் உங்களைத் தப்பாப் புரிஞ்சுகிட்டேன்.''

''நோ ப்ராப்ளம்! உங்களுக்கு இன்னொரு குட் ந்யூசை சொல்லட்டுமா? நீங்க விருப்பப்பட்டா எங்க கம்பெனியோட மெட்ராஸ் பிராஞ்சிலேயே வேலை பார்க்கலாம். நீங்க எங்கே வொர்க் பண்ண விரும்புறீங்க? பாம்பே ஆர் மெட்ராஸ்?''



''மெட்ராஸ்...''

''வேலையில எப்ப ஜாயின் பண்ணுவீங்க?''

''ஒருபத்து நாள் டயம் வேணும் சார்...!''

''டேக் யுவர் வோன் டயம். லலிதா...!''

''சார்...!''

''மிஸஸ் புவனாவுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் செய்து அவங்களுக்கு ஒரு காப்பியை கொடுத்துட்டு மெட்ராஸ் பிராஞ்சுக்கு ஒரு காப்பியை போஸ்ட் பண்ணிடுங்க.''

''எஸ் சார்...!''

''விஷ் யூ ஆல் த பெஸ்ட் மிஸஸ் புவனா!'' எம்.டி. கையைக் குவித்துவிட்டு நகர, லலிதா புவனாவைக் கட்டிக்கொண்டு தன்னுடைய கேபினுக்குப் போனாள். ரெண்டு நிமிட நேரத்துக்குள் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் செய்து புவனாவின் கையில் ஒரு காப்பியைக் கொடுத்துக்கொண்டே கேட்டாள்.

''கார்லதானே வந்திருக்கே...?''

''ஆமா...''

''செல்ப் ட்ரைவிங்கா? இல்ல ட்ரைவர் வந்திருக்காரா?''

''ட்ரைவர் வந்திருக்கார்''

''நீ பம்பாய் பிராஞ்சிலேயே வேலை பார்க்கறதா சொல்லியிருந்தா ரொம்பவும் சந்தோஷப்பட்டிருப்பேன்.''

''மெட்ராஸ் ப்ராஞ்சிலேயே வேகன்சி இருக்கும்போது ஏன் வேண்டாம்னு சொல்லணும்?''

''சரி பம்பாய்ல இன்னும் எத்தனை நாள் வாசம்?''

''மைத்ரேயிக்காக ஒரு வாரம் இருந்துட்டுத்தான் போகணும்'' சொல்லிக்கொண்டே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் காப்பியோடு எழுந்தாள் புவனா. லலிதாவும் எழுந்தாள்.

''நீ எங்கே வர்றே?''

''கார் வரைக்கும் வந்து உன்னை வழியனுப்பத்தான்.''

''வேண்டாம். நானே போய்க்கிறேன். நீ உன்னோட வேலையைக் கவனி. எனக்காக மெனக்கெட்டு கார் பார்க்கிங் வரை வராதே.''

''சரி மறுபடியும் உன்னை எப்பப் பார்க்கலாம்?''

''நானே போன்ல சொல்லிட்டு வர்றேன்.''

''மறந்துட மாட்டியே?''

''என்ன இது? காதலன்கிட்டே காதலி பேசற மாதிரி பேசறே? நான் மெட்ராஸ் போறதுக்குள்ளே நீயும் நானும் ரெண்டு தடவையாவது சந்திக்கிறோம். சரியா?''

''ரொம்ப சரி.''

**மை**த்ரேயி சந்தோஷப்பட்டாள்.

''நிஜமாவா புவனா?''

''ஆமா. மெட்ராஸ் ப்ராஞ்சிலேயே எனக்கு வேலை கிடைச்சிடுச்சு. வேலையில ஜாய்ன் பண்ண பத்து நாள் டயம் கேட்டிருக்கேன். அதுக்குள்ளே உன்னோட பேருக்கு சொத்தை மாத்திக்கிற விவகாரத்தை முடிச்சுக்கிறது நல்லது மைத்ரேயி. ஏன்னா என் கணவரும் சரி, நானும் சரி, ரொம்ப நாள் இங்கே தங்க முடியாது.''

''கவலைப்படாதே. நாலைஞ்சு நாளைக்குள்ளே சொத்து என் பேர்க்கு வந்து சேரும். அடுத்த வாரம் நீயும் உன்னோட கணவரும் இந்த பம்பாயிலிருந்து கிளம்பிடலாம். என்னால உனக்கு எந்த பிரச்சினையும் வராது.''

மைத்ரேயி சொல்லிக் கொண்டிருப்பது போதே -

இண்டர்காம் கூப்பிட்டது.

ரிசீவரை எடுத்தாள்.

கீழே ஹாலில் இருந்து பாலமுரளி பேசினான்.

''மேடம்.''

''என்ன?''

''லாயர் வந்துட்டிருக்கார். நீங்களும் கிருஷ்ணகுமாரும் சந்தோஷமா பேசி சிரிச்சுட்டிருங்க.''

''லாயர் மட்டும்தான் வர்றாரா?''

''ஆமா.''

மைத்ரேயி ரிசீவரை வைத்துவிட்டு புவனாவை ஏறிட்டாள். ''லாயர் வந்துட்டிருக்காராம். நீ உன்னோட ரூமுக்கு போயிடு புவனா! நானும் கிருஷ்ணகுமாரும் அன்னியோன்யமா இருக்கிற மாதிரி காட்டிக்கணும்.''

புவனா அசையாமல் நின்றாள்.

கிருஷ்ணகுமார் படபடத்தான்.

''உன்னைத்தான் புவனா! மைத்ரேயி சொல்லிட்டிருக்காங்க! நீ பாட்டுக்கு நின்னுட்டிருந்தா என்ன அர்த்தம்? நீ உன்னோட ரூமுக்குப் போ.''

புவனா ஒன்றும் பேசாமல் தலைகுனிந்தபடி தன் அறையை நோக்கி வேகமாய்ப் போனாள். அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டு கட்டிலில் விழுந்தாள். அடுத்த அறையில் சிரிப்பும் பேச்சும் எழுந்தது.

புவனாவுக்கு தன் உடம்பு முழுவதும் தீப்பற்றிக் கொண்ட மாதிரியான உணர்ச்சி ஆட்கொள்ள ஆரம்பித்தது.

உள்மனசு மட்டும் பலஹீனமாய் சொல்லிப் பார்த்தது.

'அது நடிப்புதானே?'

'இன்றைக்கு இது நடிப்பு. சரி, நாளைக்கே நிஜமாகி விட்டால்?'

'சேச்சே! மைத்ரேயியை அப்படி நினைக்காதே.'



'ஏன் அவளும் பெண்தானே?'

'உன் கணவனின் மேல் நம்பிக்கை இல்லையா?'

'எந்த ஆணையும் ஒரு பெண் நினைத்தால் தன் வழிக்குக் கொண்டுவர முடியும். லலிதாவின் கணவரை அந்த ஏர்ஹோஸ்டஸ் ஆஷா வளைத்துப் போடவில்லையா?'

பக்கத்து அறையில் லாயரின் பேச்சுக்குரல் கேட்டது. ''என்ன மாப்பிள்ளை சார்! சிரிப்பும் கும்மாளமுமாய் இருக்கீங்க? ஏதாவது ஜோக்கா?''

''வாங்க லாயர் சார்.''

''வர்றேன் வர்றேன். வேலைக்காரி சோனி இருக்காளா?''

''சமையல் கட்டுல இருப்பா. ஏன் உங்களுக்கு என்ன வேணும்?''

''கோர்ட்டிலிருந்துரெஜிஸ்ட்ரர் ஆபீசுக்கு போயிட்டு இப்படியே வர்றேன். ஜில்லுன்னு ஒரு பெரிய டம்ளர் நிறைய மோர் வேணும்.''

''கொண்டு வரச் சொல்றேன்'' சொன்னவள் பக்கத்திலிருந்த இண்டர்காம் ரிசீவரை எடுத்து கிச்சனில் இருந்த சோனியிடம் பேசிவிட்டு லாயரை ஏறிட்டாள்.

''ரெஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு நம்ம விஷயமாத்தானே போயிருந்தீங்க?''

''ஆமாம்மா! அடுத்த வாரத்துக்குள்ளே சொத்தை எல்லாம் என் பேருக்கு மாத்தி ரிஜிஸ்ட்ரேஷன் செய்துடலாம்ன்னு நினைச்சேன். ஆனா அதுல ஒரு சிக்கல்.''

''என்ன சிக்கல்?''

''ரெஜிஸ்ட்ரார் லீவ்ல இருக்கார். லீவு முடிஞ்சு அவர் திரும்ப ஒரு மாசமாகுமாம். அவர் வந்த பின்னாடிதான் ரெஜிஸ்ட்ரேஷனை செய்ய முடியுமாம்.''

மைத்ரேயி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ''ஏன் வேற ரெஜிஸ்ட்ராரை வெச்சு ரெஜிஸ்ட்ரேஷனை முடிக்க முடியாதா லாயர் சார்?''

''அதெப்படி முடியும்? நம்ம சர்க்கிளுக்கு அவர்தானே ரெஜிஸ்ட்ரேஷன் அத்தாரிடி? வேற சர்க்கிளுக்கு நாம போக முடியாதே?''

மைத்ரேயி எரிச்சலாய் நிமிர்ந்தாள். ''என்ன லாயர் சார்? திடீர்ன்னு வந்து இப்படி சொல்றீங்க?''

''நான் என்னம்மா செய்யட்டும்? ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் இருக்கிற நிலைமையைச் சொன்னேன். அடுத்த மாசம் நல்ல முகூர்த்த மாசம். அப்பவே ரெஜிஸ்ட்ரேஷனை முடிச்சுக்கலாம்.''

மோர் வந்தது.

வாங்கி வயிற்றுக்கு வார்த்துக்கொண்டு புறப்பட்டார் லாயர். ''இந்த விஷயத்தைச் சொல்லிட்டுப் போறதுக்காகத்

தான் வந்தேன். நான் வரட்டுமா? முடிஞ்சா நானும் ஆடிட்டரும் ராத்திரிக்கு வர்றோம்..."

லாயர் கிளம்பிப் போனதும் -

பாலமுரளி உள்ளே வந்தான். மைத்ரேயி கோபமாய்க் கேட்டாள்.

"என்ன லாயர் அப்படி சொல்லிட்டுப் போறார்?"

"அதானே?"

"கிருஷ்ணகுமாரும் புவனாவும் அடுத்த வாரம் மெட்ராஸ் புறப்பட்டுப் போயாகணுமே! இவர் இப்படி வந்து ஒரு குண்டைப் போட்டுட்டுப் போறார்."

கிருஷ்ணகுமார் குறுக்கிட்டுச் சொன்னான்.

"நோ ப்ராப்ளம் மிஸ் மைத்ரேயி! ஒரு மாசம் கழிச்சே ரெஜிஸ்ட்ரேஷனைப் பண்ணிக்கலாம்."

"அப்படீன்னா? நீங்களும், புவனாவும் ஒரு மாசம் பம்பாய்ல இருந்தாகணுமே. அவ மெட்ராசுக்குப் போய் ட்யூட்டியிலே ஜாய்ன் பண்ண வேண்டாமா?"

"பண்ணட்டும்."

"நீங்க?"

"நான் இங்கேயே இருக்கேன்."

அடுத்த அறையில் -

கட்டிலில் படுத்தபடி உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த புவனாவுக்கு தன்னுடைய கணவன் சொன்னதைக் கேட்டு தூக்கிவாரிப்போட்டது. இருதயம் இரைச்சலாய் அடித்துக்கொள்ள எழுந்து உட்கார்ந்தாள்.




'திக் திக்' என்று அடித்துக்கொள்ளும் இதயத்தை கையில் பற்றிக்கொண்டு அடுத்த அறையில் கேட்டுக் கொண்டிருக்கும் பேச்சுக்குரலைத் தொடர்ந்து செவிமடுத்தாள் புவனா.

"நீங்க இங்கே! புவனா மெட்ராஸ்ல! அது நல்லா இல்லையே மிஸ்டர் கிருஷ்ணகுமார்?" பாலமுரளி சொல்ல, கிருஷ்ணகுமார் சிரித்தான்.

"அதனால என்ன? புவனா மட்டும் தனியா பம்பாய்க்கு வரலையா என்ன? அவ மெட்ராஸ்ல ஒரு மாசம் இருக்கட்டும். நான் இங்கேயே உங்ககூட தங்கி சொத்து ரிஜிஸ்ட்ரேஷனை முடிச்சுட்டுப் போயிடறேன்."

இப்போது மைத்ரேயின் குரல் கேட்டது. "வேற வழியில்லை பாலமுரளி! மிஸ்டர் கிருஷ்ணகுமார் ஒரு மாசம் இங்கே இருக்க வேண்டியதுதான். புவனா வேணும்னா மெட்ராசுக்கு போய் ட்யூட்டியில் ஜாயின் பண்ணட்டும்."

"மேடம்! இன்னொரு விஷயம்."

"என்ன?"



"நாலஞ்சு நாளா உங்கப்பாவோட ப்ரண்ட்ஸ் கிட்டேயிருந்து நிறைய வாழ்த்து தந்திகள் வர ஆரம்பிச்சுடுச்சு. சில பேர் உங்களைப் பார்க்க வர்றதாக்கூட தந்தியில் மென்ஷன் பண்ணியிருக்காங்க. என்னோட யோசனை என்னான்னா?"

"சொல்லுங்க."

"நீங்களும் கிருஷ்ணகுமாரும் ஹனிமூன் போறதா சொல்லிட்டு வோனாவாலா ஹில்ஸ்டேஷனில் இருக்கிற உங்க கெஸ்ட் ஹவுஸ் வீட்டுக்குப்போய் ஒரு மாசம் தங்கிட்டு வர்றது உத்தமம். நீங்க ரெண்டு பேரும் அங்கே போயிட்டா யாராலேயும் எந்தப் பிரச்சினையும் வராது. நீங்க ஒரு மாசம் வோனாவாலாவில் இருந்துட்டு வந்ததும் ரெஜிஸ்ட்ரேஷனை முடிச்சுடலாம்."

"இதுகூட நல்ல ஐடியாதான்" கிருஷ்ணகுமார் குரல்.

"வோனாவாலா க்ளைமேட் ரொம்ப 'ஜில்'லா இருக்கும். எனக்கு ஒத்துக்காதே! சைனஸ் ப்ராப்ளம் எனக்கு இருக்கு தெரியுமில்லே?"

"மேடம்! நீங்க ரூமுக்குள்ளேயே இருங்க. அடிக்கடி ஹீட்டரை போட்டுக்குங்க. சைனஸ் ப்ராப்ளம் பக்கத்திலேயே வராது."

"புவனாகிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டுக்கலாம்" கிருஷ்ணகுமார் சிரித்தான். "அவ என்ன சொல்லப்போறா? வேஷம் கட்டியாச்சுன்னா மேடையில் ஒழுங்கா நடிச்சுத்தானே ஆகணும்?"

"மேடம்."

"என்ன?"

"நான் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் வரைக்கும் போய்ட்டு வந்துடறேன். இந்த தடவை வந்த டெலிபோன் பில்லில் கொஞ்சம் குளறுபடி. வேற யார்க்கோ போக வேண்டிய எஸ்.டி.டி. கால்ஸ் நம்ம பில்லில் ஏறியிருக்கு."

"போன் பண்ணிக் கேட்க வேண்டியதுதானே?"

"கேட்டேன். சரியான ரிப்ளை இல்லை. நேர்ல போனாத்தான் காரியம் நடக்கும்."

"சரி போயிட்டு வாங்க."

பாலமுரளி ஷூ சத்தம் ஒலிக்க வெளியேறியதும் மைத்ரேயியின் குரல் கேட்டது. "கிருஷ்ணகுமார்! நீங்க வோனாவாலா போயிருக்கீங்களா?"

"இல்லை. அது எங்கே இருக்கு?"

"பூனாவுக்கும் பம்பாய்க்கும் மத்தியில் இருக்கிற ஒரு ஹில் ஸ்டேஷன். உடல் ஆரோக்கியமா இருக்கிறவங்களுக்கு அருமையான க்ளைமேட். எந்தப் பக்கம் திரும்பினாலும் பச்சைப் பசேல்தான். அங்கே ஒரு மாசம் தங்கி பால், தயிர் சாப்பிட்டா உடம்பு மினுமினுன்னு ஆயிடும். என்னோட ஃபாதர் உயிரோடு இருந்தப்ப அடிக்கடி வோனாவாலா போயிடுவார். ஒரு வாரம் பத்து நாள் இருந்துட்டு வருவார்."

கிருஷ்ணகுமார் கேட்டான்.

''வேனாவாலா ஊட்டி மாதிரி இருக்குமா?''

''ஏறக்குறைய.''

''அப்படீன்னா புதுமண ஜோடிக்கு ஏற்ற இடம்.''

''கண்டிப்பா! அங்கே இருக்கிற லாட்ஜ்ல வருஷம் பூராவும் ஃபுல்லாவே இருக்கும். அதனால்தான் எங்கப்பா ஒரு கெஸ்ட் ஹவுஸைக் கட்டிட்டார். இன்னிக்கு அந்த கெஸ்ட் ஹவுஸோட மதிப்பு இருபது இலட்சம் ரூபாய்.''

''மைத்ரேயி.''

''ம்...''

''நான் ஒண்ணு சொன்னா கோபிக்க மாட்டீங்களே?''

''என்ன?''

''நீங்க நிஜமாகவே ஒருத்தரைக் கல்யாணம் செய்திருந்திருக்கலாம். இவ்வளவு பெரிய சொத்தைக் கட்டிக் காக்கிறதுக்கு உங்களுக்கு எப்பவுமே ஓர் ஆண் துணை தேவை.''

''..............''

''என்ன பேசாம இருக்கீங்க? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?''

''நோ நோ. நீங்க சொல்றது உண்மைதான். கடந்த ரெண்டு நாளாவே என் மனசுக்குள்ளே ஓர் இடறல். உண்மையாகவே ஒருத்தரைக் கல்யாணம் பண்ணி யிருந்திருக்கலாமோன்னு நினைக்க ஆரம்பிச்சுட்டேன். ஆனா இனிமே அது முடியாத காரியம். நீங்க சொன்ன மாதிரி வேஷம் கட்டியாச்சு. ஒழுங்கா நடிக்க வேண்டியதுதான் முக்கியம்! ஆமா புவனாவை ரொம்ப நேரமா காணோம்?''

''புவனாதானே? ரூம்ல இருக்கா'' கிருஷ்ணகுமாரின் குரலில் தொனித்த அலட்சியம் புவனாவின் இதயத்தைத் தாக்கியது. கண்களில் திரண்ட நீரை மனசுக்குள் வெடித்த துக்கத்தைக் கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

மாதுங்கா.

சாயன் ரோட்டின் கார்னரில் இருந்த ரத்தின விநாயகர் கோயிலின் முன்னால் பைக்கை நிறுத்திவிட்டு கீழே இறங்கினான் ஆடிட்டரின் மகன் சுதாகர். நேரம் காலை 11.00 மணி.

கோயிலில் அதிகமாய் கூட்டமில்லை.

சுதாகர் விநாயகர் சந்நிதியில் எலி வாகனத்துக்கு முன்னால் உட்கார்ந்து தட்டில் இருந்த விபூதியையும், குங்குமத்தையும் தனித்தனி பொட்டலங்களாய் கட்டிக் கொண்டிருந்த அந்த குருக்களை நெருங்கினான்.

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமள வர்ணா விளம்பித சூத்திர
வாமன ரூப... மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாதம் நமஸ்தே...



என்று விநாயக தோத்திரம் சொல்லிக் கொண் டிருந்தவர், சுதாகரைப் பார்த்ததும் நிமிர்ந்தார்.

அவன் கேட்டான்.

''பாலகணபதி குருக்கள்ங்கிறது.''

''நான்தான்.''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

''நீங்க யார்ன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''நான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வர்றேன்.''

குருக்கள் முகம் மாறினார். ''போலீசா?''

''ஆமா...''

''எ... என்ன விஷயம்?''

''மூணு நாளைக்கு முன்னாடி அதாவது புதன்கிழமை அன்னிக்கு இந்தக் கோயில்ல நீங்க யாருக்காவது கல்யாணம் பண்ணி வெச்சீங்களா?''

குருக்கள் நெற்றியில் இட்டிருந்த குங்குமம் வியர்வையில் இளகியது. மனசுக்குள் மைத்ரேயி, கிருஷ்ணகுமார் முகங்கள் நிழலாட ஜாக்கிரதையானார். பதற்றத்தை மறைத்துக்கொண்டு இயல்பாய் சிரித்தார்.

''ஆ... ஆமா...''

''கல்யாண ஜோடி யார்ன்னு தெரியுமா?''

''எதுக்காக கேக்கறீங்க?''

''ஒரு விசாரணைக்காக தேவைப்படுது. அந்த ஜோடி யார்ங்கிறதைச் சொல்றீங்களா?''

''சொ... சொல்லாமே! பொண்ணோட பேர் மைத்ரேயி. மாப்பிள்ளையோட பேர் கிருஷ்ணகுமார்.''

''கல்யாணத்தை நீங்கதானே நடத்தி வெச்சீங்க?''

''ஆமா.''

''கல்யாணத்துக்கு யார் யாரெல்லாம் வந்தாங்க?''

''பெண்ணையும் மாப்பிள்ளையும் சேர்த்து மொத்தம் நாலுபேர் தான் வந்தாங்க. கல்யாணத்தை முடிச்சுகிட்டு உடனே போயிட்டாங்க.''

''நீங்க சொல்றது பொய்யில்லையே?''

''நா... நான் எதுக்காகப் பொய் சொல்லணும்?''

''இந்தக் கோயில்ல வேற குருக்கள் யார் யார் இருக்காங்க?''

''வேற யாருமில்லை. நான் ஒருத்தன்தான்.''

''இந்தக் கல்யாணம் எத்தனை மணிக்கு நடந்தது?''

''விடிகாலை அஞ்சரை மணிக்கு.''

''அந்தக் கல்யாணத்தை நீங்கதான் நடத்தி வெச்சீங்க இல்லையா?''

''ஆமா.''

''நடந்த கல்யாணத்துல எந்தப் பித்தலாட்டத்தனமும் இல்லையே?''

''இல்லை.''

சுதாகர் மேற்கொண்டு கேள்வி கேட்காமல் மவுனமாய்த் திரும்பி நடக்க, அவன் முதுகையே பயமாய் வெறித்துப் பார்த்தார் பாலகணபதி குருக்கள்.

அறையில் இருக்கப் பிடிக்காமல் மாடிப் படிகளில் மெல்ல இறங்கி ஹாலுக்கு வந்த புவனா டீபாயின் மேலிருந்த டெலிபோன் கதறுகிற சத்தம் கேட்டு ரிசீவரை எடுத்தாள்.

''அலோ.''

''அம்மா! நான் பாலகணபதி குருக்கள் பேசறேன்.''

''ஓ! குருக்களா? என்ன விஷயம் சொல்லுங்க.''

''பேசறது மைத்ரேயியா?''

''இல்ல நான் புவனா.''

''அம்மா! நான் இப்போ கோயிலுக்கு எதிர்த்தாப்பில இருக்கிற டெலிபோன் பூத்திலிருந்து பேசிக்கிட்டிருக்கேன். விஷயம் விவகாரமாயிடும் போலிருக்கும்மா.''

''விவகாரமா? என்ன சொல்றீங்க?''

''மைத்ரேயிக்கு நடந்த கல்யாணம் நிஜமான்னு கேட்டுட்டு கோயிலுக்கே போலீஸ் வந்துட்டாங்கம்மா.''

புவனா திடுக்கிட்டாள்.

''போலீசா?''

''ஆமாம்மா! போலீசிலிருந்து வந்த ஆசாமி துருவித் துருவி கேள்வி கேக்கிறான். எனக்கு ஒரே உதறல். கல்யாணம் நடந்தது உண்மைதான்னு அடிச்சு சொல்லிட்டேன். நீங்களும் அப்படியே சொல்லிடுங்கம்மா.''




''கல்யாணம் நடந்தது உண்மைதான்னு அடிச்சு சொல்லிட்டேன், நீங்களும் அப்படியே சொல்லிடுங்கம்மா...'' என்று குருக்கள் சொன்னதைக் கேட்டு புவனா சில விநாடிகள் சுவாசிக்கத் திணறினாள்.

''எனக்குத் தெரியும்மா... விவகாரம் இப்போது போலீஸ் வரைக்கும் போயிருக்கிறதுனால... கொஞ்ச நாளைக்கு அதை உண்மையாக்கிவிட வேண்டியதுதான். இல்லேன்னா பேப்பர் வரைக்கும் நியூஸ் போய் - ஊர் சிரிக்கும்படியா ஆயிடும்! பாலமுரளிகிட்டேயும் இந்தவிஷயத்தையும் சொல்லி ஜாக்கிரதையா இருக்கச் சொல்லுங்கம்மா...'' குருக்கள் சொல்லிவிட்டு, ரிசீவரை வைத்துவிட, புவனாவும் ரிசீவரை வைத்துவிட்டு, பற்றி எரிகிற இதயத்தோடு மாடிப்படிகள் ஏறி தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள்.

கண்ணாடி முன் நின்று கிருஷ்ணகுமார் தலைவாரிக் கொண்டிருந்தான். புவனாவைப் பார்த்ததும் கேட்டான்.



''அதுக்குள்ளே எங்கே போயிட்டே புவனா?''

புவனா ஒன்றும் பேசாமல் கட்டிலின் நுனிமேல் வந்து உட்கார்ந்தாள். கணவனின் முதுகையே வெறிக்கப் பார்த்தாள்.

''என்ன பேச்சையே காணோம்?''

புவனா பெருமூச்சொன்றை அனலாய் விட்டபடி கேட்டாள்: ''மைத்ரேயி ரூமிலிருந்து நீங்க எப்ப வந்தீங்க?''

''இப்பத்தான். ஒரு ரெண்டு நிமிஷம்கூட இருக்காது. ஆமா நீ ஏன் மைத்ரேயி ரூமுக்கு வரலை? லாயர்தான் வந்ததுமே புறப்பட்டுப் போயிட்டாரே?''

''அவர் புறப்பட்டு போனதுமே நீங்க ஏன் நம்ம ரூமுக்கு வரலை?''

கிருஷ்ணகுமார் புவனாவையே உறுத்துப் பார்த்தான். ''என்ன புவனா, பேச்சோட தொனியெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு?''

''மத்தவங்க நடவடிக்கை மாறியிருக்கிறதை விடவா?''

''புவனா! நீ என்ன சொல்றே?''

''நிஜங்கள் நிறம் மாறுதுன்னு சொல்றேன்!''

''எனக்குப் புரியலை.''

''நிஜமாவே புரியலையா? புரியாத மாதிரி நடிக்கறீங்களா? என்னை மெட்ராசுக்கு அனுப்பிட்டு இங்கே மாசக்கணக்கா டேரா போட முடிவு செய்திருக்கீங்களே... அதுக்கு என்ன அர்த்தம்?''

''அது சும்மா ஒரு பேச்சுக்காக சொன்னது!''

''எனக்கு அப்படித் தோணலை!''

கிருஷ்ணகுமார் புன்னகைத்தான். ''உன் மனசுக்குள்ளே சந்தேகம் பூத்துக்கிச்சுன்னு நினைக்கிறேன். இந்த நிலைமையில் நான் பேசற ஒவ்வொரு பேச்சும் எடுக்கிற ஒவ்வொரு நடவடிக்கையும் உன்னோட சந்தேகத்துக்குத் தீனி போடற விஷயங்களாத்தான் அமையும். உன்னோட ப்ரெண்ட் மைத்ரேயிக்கு கணவனா நடிக்கப் போறேன்னு நானா சொல்லலை. நடிங்கன்னு நீதான் சொன்னே. நான் வேண்டாம்னு மறுத்தப்ப நீ விடலை. விடாப்பிடியா வேஷம் போட வெச்சே. இப்ப நான் நடிச்சிட்டிருக்கேன். மைத்ரேயியோட பேருக்கு சொத்து மாறுகிற வரைக்கும் நான் நடிச்சாகணும். அப்படி நான் நடிக்கும்போது நீ உன்னோட உணர்ச்சிகளைக் கொட்டறது தப்பு.''

புவனா கிருஷ்ணகுமாரை நெருங்கி அவனுடைய கையைப் பற்றிக்கொண்டாள். ''எ... என்னங்க?''

''ம்...!''

''எனக்குப் பயமா இருக்கு.''

''எதுக்கு பயம்?''

''சுத்தி நடக்கிற நிகழ்ச்சிகள் சரியில்லை. விவகாரம் போலீஸ் வரைக்கும் போயாச்சு.''

கிருஷ்ணகுமார் திடுக்கிட்டான். ''நீ என்ன சொல்றே புவனா? விஷயம் போலீசுக்கு போயிடுச்சா?''

''ஆ... ஆமா...! கல்யாணம் நடந்தது உண்மையா இல்லையான்னு விசாரிக்க குருக்களை போய் போலீஸ் பார்த்திருக்காங்க. அவர் பயந்து போய் கல்யாணம் நடந்தது உண்மைதான்னு சொல்லிட்டார்!''

''போலீசு வரைக்கும் எப்படி விஷயம் போச்சு?''

''இதெல்லாம் லாயர், ஆடிட்டர் வேலையாய் இருக்கலாமோ?''

''மைத்ரேயிகிட்ட கேட்டுப் பார்ப்பமா?''

''வேண்டாம். இந்தப் பிரச்சினையை அவ காது வரைக்கும் கொண்டு போய்க் கஷ்டப்படுத்த வேண்டாம். சே! இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சிருந்தா பேசாம மெட்ராசிலேயே இருந்திருக்கலாம்! இண்டர்வியூக்கு வரப் போய் இப்ப என்னோட நிம்மதியே போயிடுச்சு. இந்த பாழாப் போற சொத்து அவ பேருக்கு மாத்தறதுக்குள்ளே நம்ம சந்தோஷம் காணாம போயிடும் போலிருக்கு!''

''காம் டவுன் புவனா!''

''உங்களை மாதிரி என்னால நிம்மதியா இருக்க முடியலைங்க! மைத்ரேயிகிட்ட நீங்க நடிப்புக்காக கொஞ்சிப் பேசினாலும்கூட எனக்கு வயித்தையெல்லாம் கலக்குதுங்க. நீங்க அவ பக்கத்துல உட்கார்ந்தா என் உடம்பெல்லாம் பத்தி எரியற மாதிரி இருக்கு!''

''ஷுக் புவனா! நீ படிச்ச பொண்ணு! சாதாரண கிராமத்துப் பொண்ணு மாதிரி நடந்துகிட்டு காரியத்தைக் கெடுத்துடாதே! ஒரே ஒரு மாசம் பல்லைக் கடிச்சுட்டு பொறுமையா இருந்துடு! என் பேரிலேயும் மைத்ரேயி பேரிலேயும் உனக்கு நம்பிக்கை இல்லையா என்ன?''

''யார் எந்த நேரத்துல எப்படி மாறுவாங்கன்னு யாருக்குத் தெரியும்?''

''புவனா! திஸ் ஈஸ் டூ மச். நீ இப்படியெல்லாம் பேசறது சரியில்லை. என்னைப் பத்தியும் உனக்குத் தெரியும். மைத்ரேயியைப் பத்தியும் உனக்குத் தெரியும். அப்புறம் எதுக்கு வீணான சந்தேகம்?''

''இது சந்தேகமில்லைங்க...''

''பின்ன என்னவாம்?''

''ஒருவித முன் ஜாக்கிரதைத்தனம். லலிதா மாதிரி நானும் ஏமாந்து போயிடக்கூடாது இல்லையா?''

''ஓ! அந்த லலிதா வந்து ஏதேதோ சொல்லி உன் மனசைக் கலைச்சிருக்காளா?''

''அவ என்னோட மனசைக் கலைக்கலைங்க. தெளிவு படுத்திட்டுப் போயிருக்கா. நான் என்னோட பொருளைப் பாதுகாத்துக்க விரும்பறதுல என்ன தப்பு?''

கிருஷ்ணகுமார் ஏதோ பேச முயன்ற விநாடி - மாடி வராந்தாவில் சக்கர நாற்காலி உருளும் சத்தம் கேட்டது.



''புவனா! மைத்ரேயி வந்துட்டிருக்கா. அவகிட்டே ஏதும் பேசிடாதே! முகத்தை சிரிச்ச மாதிரி வெச்சுக்க. நம்ம சண்டையை வெளியே எங்கேயாவது போய் வெச்சுக்கலாம்!''

''ம்... ம்...''

அடுத்த சில விநாடிகளில் -

மைத்ரேயியின் சக்கர நாற்காலி புவனாவின் அறைக்குள் நுழைந்தது. காதுகளில் மாட்டியிருந்த வாக்மேனை எடுத்துக்கொண்டே கேட்டாள். ''என்னடி புவனா! ஆளை ரொம்ப நேரமா காணோம்? இங்கே ரூம்ல தனியா உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணிட்டிருக்கே?''

கிருஷ்ணகுமார் குறுக்கிட்டுச் சொன்னான். ''அவளுக்கு தலைவலியாம். தலைக்கு கர்ச்சீப்பை கட்டிகிட்டு படுத்துட்டிருந்தா.''

மைத்ரேயி புவனாவுக்குப் பக்கத்தில் போய் அவளைத் தொட்டாள். ''மாத்திரை எடுத்துக்கிட்டியா?''

''ம்...!''

''உடம்புகூட லேசா சுடற மாதிரி இருக்கு. டாக்டரை வேணும்ன்னா வரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம். நவ் அயாம் ஆல்ரைட்.''

கிருஷ்ணகுமார் மறுபடியும் குறுக்கிட்டான். ''மைத்ரேயி நீங்க புவனாகிட்டே பேசிட்டிருங்க. நான் என்னோட ரீஜனல் ஆபீஸ் வரைக்கும் போயிட்டு வந்துடறேன். புவனாவுக்கு மெட்ராசிலேயே போஸ்டிங் கிடைச்சிருக்கிறதுனால எனக்கு உடனடியா பாம்பேக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் வேண்டாம்ன்னு சொல்லிட்டு வரணும்.''

''ரீஜனல் ஆபீஸ் எங்கே இருக்கு?''

''கல்யாண்ல.''

''போயிட்டு மத்தியானத்துக்குள்ளே வந்துடுவீங்க இல்லே.''

''ம் வந்துடுவேன்!''

''லேட் பண்ணிடாதீங்க. நீங்க வந்த பின்னாடிதான் நான் சாப்பிடுவேன்.''

மைத்ரேயியின் கெஞ்சலான பேச்சு புவனாவுக்கு வயிற்றில் நெருப்புப் பற்றிக்கொண்ட மாதிரி தகதகத்தது.

''புவனா! நான் வர்றேன். நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ. சாயந்தரம் நாம மூணு பேரும் எங்கேயாவது வெளியே போயிட்டு வரலாம்'' கிருஷ்ணகுமார் சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனதும் -

மைத்ரேயி புவனாவின் இடுப்பைக் கிள்ளினாள்.

''வா என்னோட ரூமுக்குப் போகலாம்...''

''எதுக்கு...?''

''நார்மன் விஸ்டம் காமெடி கேசட் ஒண்ணை டெக்ல போட்டுப் பார்த்தா உன்னோட தலைவலியெல்லாம் பறந்து போயிடும்...!''

''வேண்டாம். படம் பார்த்தா தலைவலி இன்னமும் அதிகமாயிடும். எனக்குப் படுத்துத் தூங்கணும் போலிருக்கு!''

''சரி தூங்கு. மத்தியான சாப்பாட்டுக்கு நானே வந்து எழுப்பறேன்!'' மறுபடியும் வாக்மேனை காதுக்கு மாட்டிக்கொண்டு சக்கர நாற்காலியை உருட்டியபடி சென்றாள் மைத்ரேயி. போகிற அவளையே வெறித்துப் பார்த்தாள் புவனா.

**ம**த்தியானம் இரண்டு மணிக்கு மேல் கல்யாணியிலிருந்து வீடு திரும்பினான் கிருஷ்ணகுமார். டாக்சிக்கு சார்ஜை எடுத்துக் கொடுத்துவிட்டு இறங்கியவன் ஸ்கூட்டரில் பாலமுரளி வருவதைப் பார்த்ததும் உள்ளே போகாமல் நின்றான்.

''என்ன கிருஷ்ணகுமார், எங்கே போயிட்டு வர்றீங்க?''

''என்னோட பேங்க் ரீஜினல் ஆபீசுக்குத்தான்!''

''டிரான்ஸ்பர் விசயமாவா?''

''ஆமா...! நீங்க?''

''ஒரு ஐ.டி. ப்ராப்ளம். மேடத்தோட அப்பா உயிரோட இருந்தப்ப உருவான ப்ராப்ளம். அது சம்பந்தமா ஓர் என்கொயரிக்குப் போயிட்டு வந்தேன்!''

இருவரும் பங்களாவுக்குள் நுழைந்தார்கள். ஹால் நிசப்தமாய் இருந்தது.

''என்ன யாரையும் காணோம்?'' பாலமுரளி கேட்டுக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான். ''வேலைக்காரி சோனி வீட்டுக்குப் போயிட்டா போலிருக்கே!''

கிருஷ்ணகுமார் மாடிப்படி ஏறினான்.

''மொதல்ல சாப்பிடணும். அகோரப் பசி.''

''எனக்கும்தான்.''

இருவரும் ஏறி மாடி வராந்தாவுக்கு வந்தார்கள். புவனாவின் அறைக் கதவைக் கிருஷ்ணகுமார் தொட்டான். கதவு திறந்துகொள்ள, உள்ளே போனான்.

அறை வெறிச்சென்று இருந்தது.

புவனாவைக் காணோம்.

''புவனா...''

பாத்ரூமுக்குள் எட்டிப் பார்த்தான். காணோம்.

''எங்கே போனான்னு தெரியலையே?''

''ஒருவேளை மேடம் ரூம்ல இருப்பாங்க... கிருஷ்ணகுமார்! லஞ்ச் டைம். சாப்பிட்டுக்கிட்டு இருக்கலாம்...'' பாலமுரளி சொல்ல, கிருஷ்ணகுமார் வெளியே வந்து மைத்ரேயியின் அறையை நோக்கிப் போனான்.



அறையை நெருங்கி கதவைத் தள்ள, அது சுலபமாய் உள்ளே போயிற்று. பார்வை அறைக்குள் பாய அதிர்ந்தான் கிருஷ்ணகுமார்.

சக்கர நாற்காலிக்குப் பக்கத்தில் மல்லாந்து விழுந்திருந்தாள் மைத்ரேயி. முகம், கழுத்து, மார்பு என்று ரத்தம் உறைந்து போயிருக்க, திறந்திருந்த பாதி வாயும், விழிகளும் அவள் உயிரோடு இல்லை என்பதை சத்தியமாய் எடுத்துச் சொல்லியது.




**இ**ன்ஸ்பெக்டர் ஜோஷி தன் போலீஸ் சடங்குகளை பாரன்சிக் ஆட்களோடு சேர்த்து நடத்திக் கொண்டிருக்க, முகம், கழுத்து, மார்பு என்று ரத்தம் உறைந்து போயிருந்த நிலையில் மல்லாந்து உயிரை விட்டிருந்த மைத்ரேயியை போலீஸ் போட்டோகிராபர் ஏதோ கல்யாணத்திற்கு வந்து போட்டோ எடுப்பவரைப்போல இயல்பாக காமிராவை 'க்ளிக்'கிக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் ஜோஷி தன் புஷ்டியான மீசையை இடக்கை விரல்களால் செல்லமாய் வருடிக்கொண்டே பாரன்சிக் ஆபீசர் ஒருவரிடம் இந்தியிலும், மராத்தியிலும் மாறி மாறி பேசிக் கொண்டிருந்தார்.

''மரணம் எதனால...?''

''ஏதோ ஒரு பலமான ஆயுதத்தாலே தலையோட முன்பகுதியைத் தாக்கியிருக்காங்க. ரத்தம் அதிகமா வெளியேறி அதனால் மரணம்.''

''எந்த ஆயுதமாய் இருக்கும்ங்கிறதை அனுமானம் பண்ண முடியுதா?''

''கனமான மரக்கட்டை அல்லது இரும்புத் தடியா இருக்கலாம். தலையில் ஒரேயொரு காயம்தான். அதுவும் ஆழமாய் பொத்துக்கொண்டு போயிருக்கிறது.''

இன்ஸ்பெக்டர் ஜோஷி - அறையின் மூலையில் சுவருக்குச் சாய்ந்தபடி கலக்கமான முகங்களோடு நிறைந்திருந்த கிருஷ்ணகுமாரையும், பாலமுரளியையும் நெருங்கினார். இந்தியில் கேட்டார்.

''இந்த வீட்ல மொத்தம் எத்தனை பேர்?''

''அஞ்சு பேர்.''

''யார் யார்?''

''மைத்ரேயியோட சேர்ந்து தான் கிருஷ்ணகுமார், புவனா, அப்புறம் வேலைக்காரி சோனி.''

''புவனாவும், சோனியும் எங்கே?''

''அதான் தெரியலை. இன்ஸ்பெக்டர்! நானும், கிருஷ்ணகுமாரும் வீட்டுக்குள்ளே நுழையும்போது இங்கே யாரும் இல்லை. வழக்கமா வேலைக்காரி சோனி சாயந்திரம் ஆறு மணி வரைக்கும் இருப்பா.''

''காலையில சோனி வேலைக்கு வந்திருந்தாளா?''

''வந்திருந்தா!''

''அவ வந்ததை நீங்க பார்த்தீங்களா?''

''பார்த்தேன்!''

''இப்ப அவ எங்கே?''

''தெரியலை. எங்கேயாவது வெளியே போயிருக்கலாம்!''

''மைத்ரேயியோட ப்ரெண்ட் புவனாவும் எங்கே போயிருக்காங்கன்னு தெரியாதா?''

''தெரியாது சார்!''

ஜோஷி கேட்ட கேள்விக்கெல்லாம் பாலமுரளி பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - சுவர் அலமாரியில் வைக்கப்பட்டிருந்த டெலிபோன் அலறிக் கூப்பிட்டது. ஜோஷி போய் ரிசீவரை எடுத்தார்.

''அலோ...''

''அலோ கிருஷ்ணகுமாரா? நான் ஆடிட்டர் பேசறேன். மைத்ரேயி பக்கத்துல இருந்தா ரிசீவரைக் கொடுங்க. டாக்குமெண்ட்ஸ் சம்பந்தமா ஒரு சந்தேகம் கேக்கணும்.''

ஜோஷி கேட்டார்.

''நீங்க மைத்ரேயிக்கு பேமிலி ஆடிட்டரா?''

''பேசறது யாரு? கிருஷ்ணகுமார் இல்லையா?''

''நோ... ஐயாம் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், ஜோஷி.''

''இ... இன்ஸ்பெக்டரா? அ... அங்க எதுக்கு?''

''உங்களுக்கு இன்னும் விஷயம் தெரியாதுன்னு நினைக்கிறேன்!''

''விஷயமா? என்ன விஷயம்?''

''மைத்ரேயி மர்டர்...''

மறுமுனையில் -

''வ்... வாட்...?'' என்று ஆடிட்டர் அலறினார்.

''எஸ்... ஷி ஈஸ் மர்டர் பை சம்படி!''

''எப்போ...!''

''ஒரு மணி நேரத்துக்கு முந்தி தகவல் கிடைச்சு வந்தோம்!''

''நம்ப முடியலையே? யார் இந்த பாதகத்தை செய்தது? ஹூ இஸ் தட் மர்டர்?'' ஆடிட்டர் குரல் அடைக்கக் கேட்டார்.

''இன்வெஸ்டிகேசனை இப்பத்தான் ஆரம்பிச்சிருக்கோம்...!''

''மைத்ரேயியின் கணவர் கிருஷ்ணகுமார் அங்கே இருக்காரா?''

இன்ஸ்பெக்டர் ஜோஷி நெற்றியைச் சுருக்கினார்.

''என்ன கிருஷ்ணகுமார் மைத்ரேயியின் கணவரா?''

''எஸ்...''

''அவரை விசாரிக்கும்போது அந்த உறவை அவர் சொல்லலையே?''

''வேற என்ன சொன்னார்?''



''வீட்டில் தங்கியிருக்கிற 'கெஸ்ட்' என்று சொன்னார்!''

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர். நானும் இன்னொரு லாயரும் மைத்ரேயியின் பேமிலி ப்ரெண்ட்ஸ். நானும், அவரும் உடனே அங்கே வர்றோம்!''

''ப்ளீஸ் கம்!''

ரிசீவரை வைத்த ஜோஷி மெதுவாய் நடையிட்டு வியர்த்த முகமாய் நின்றிருந்த கிருஷ்ணகுமாரை நெருங்கினார். ஆங்கிலத்தில் வாயை அசைத்தார்.

''எனக்கு உண்மை தெரியணும்.''

''ச...சார்...''

''மைத்ரேயிக்கு நீங்க என்ன ஆகணும்?''

''அ... அது வந்து.''

''நீங்க சொல்ற ஒவ்வொரு பொய்யும் உங்களை ஒரு விபரீதத்துக்குக் கொண்டு போகலாம். ஸோ... பொய் வேண்டாம்!''

கிருஷ்ணகுமார் எச்சில் விழுங்கினான். ''சார்! நான் உண்மையைச் சொல்லிடறேன். இனிமே எந்த விசயத்தையும் மறைச்சுப் பிரயோஜனமில்லை. புவனா தான் என்னோட மனைவி. புவனாவும், மைத்ரேயியும் ப்ரெண்ட்ஸ்'' என்று ஆரம்பித்து ஒரு ஐந்து நிமிஷ நேரத்தைச் செலவிட்டு எல்லா விவரத்தையும் சொல்லி முடித்தான் கிருஷ்ணகுமார். ஜோஷி தன் சதைப்பிடிப்பான முகத்தில் விதவிதமாய் ஆச்சரியப்பட்டுக்கொண்டே செவிமடுத்துவிட்டுக் கேட்டார்.

''அப்படியானால் உங்களுக்கும் மைத்ரேயிக்கும் நடந்த கல்யாணம் ஒரு செட்டப் இல்லையா?''

''ஆமாம்!''

''இந்தக் கல்யாணத்திற்கு உங்க மனைவியின் பரிபூரண சம்மதம் கிடைச்சுதா?''

''கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ததே புவனாதான். அவள் என்னை வற்புறுத்தப்போய் தான் மைத்ரேயியின் செட்டப் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்!''

''இதுசட்டத்தை ஏமாத்துகிற மோசடி இல்லையா?''

''சாரி, இன்ஸ்பெக்டர்! இந்த கல்யாணத்தை ஏற்பாடு செய்தவர்கள் யாருக்குமே சட்டத்தை ஏமாற்ற வேண்டும் என்கிற எண்ணம் இல்லை. உயில் வாசகப்படி சொத்து மைத்ரேயிக்குச் சேர வேண்டும் என்பதற்காகத்தான் அப்படியொரு நாடகத்தைப் போட்டோம்!''

''சரி, மைத்ரேயியைக் கொலை செய்தது யார்? இந்தக் கொலை நடைபெற என்ன மோட்டீவ் இருக்க முடியும்?''

''தெரியலை!''

ஜோஷி சில்மிஷமாய்ப் புன்னகைத்தார். ''தெரியாம இருக்கக் காரணமே இல்லை. நீங்க, மைத்ரேயி, புவனா உங்க மூணு பேருக்குள்ளே ஏதோ விவகாரம் கிளம்பியிருக்கு. அதனோட எதிரொலிதான் இந்த மர்டர். உண்மையை இங்கே ஒத்துக்கறீங்களா? இல்லை போலீஸ் லாக்கப்புக்குப் போய் ஒத்துக்கறீங்களா?''



www.cleanindians.com

இதயம் இரைய கிருஷ்ணகுமார் வியர்த்தான்.

''இன்ஸ்பெக்டர்! எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை!''

''பிரச்சினை இல்லைன்னா இந்த மரணம் எப்படி சாத்தியம்?'' ஜோஷி கேட்டுக் கொண்டிருக்கும்போதே லாயரும், ஆடிட்டரும் பதற்றமாய்ப் படியேறி வேகவேகமாய் உள்ளே நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டரிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபின் மல்லாந்து விழுந்திருந்த மைத்ரேயிக்குப் பக்கத்தில் போய் நின்றுவிட்டுத் திரும்பினார்கள். கண்களில் கண்ணீர்.

ஜோஷி கேட்டார். ''மைத்ரேயி கொலையானதுக்கு காரணம் யார்ங்கிறதை உங்க ரெண்டு பேராலே அனுமானிக்க முடியுதா லாயர் அண்ட் ஆடிட்டர் சார்?''

''நோ...''

''மைத்ரேயிக்கும் தனக்கும் நடந்த கல்யாணம் ஒரு 'செட்டப்'ங்கிறதை கிருஷ்ணகுமார் ஒத்துக்கிட்டார். அவருடைய உண்மையான மனைவி வேறு யாருமில்லை. புவனாதான். இந்த விவகாரமெல்லாம் உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?''

இருவரும் திடுக்கிட்டார்கள்.

''என்னது? செட்டப் மேரேஜா?''

''எஸ்!''

ஆடிட்டரும் லாயரும் திகைப்பாய் நிமிர்ந்து கிருஷ்ணகுமாரைப் பார்த்தார்கள். பின் ஜோஷியை ஏறிட்டார்கள். அவசரக்குரலில் மாறி மாறிப் பேசினார்கள்.

''எங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே லேசாய் சந்தேகம் இருந்தது இன்ஸ்பெக்டர்! அதனால்தான் இங்கே வந்து இரண்டு பேரையும் கண்காணிச்சோம். ஆனா, இவங்க நடிப்புல நாங்க ஏமாந்துட்டோம். கிருஷ்ணகுமாரும், புவனாவும் எங்களை மட்டும் ஏமாத்தலை. சட்டத்தையும் ஏமாத்தியிருக்காங்க, எல்லாத்துக்கும் மேலாய்...?''

லாயர் பேச்சை நிறுத்த ஜோஷி உசுப்பினார்.

''ப்ளீஸ் ப்ரொசீட்...!''

''மைத்ரேயியோட சொத்து பூராவும் தனக்கே சொந்தமாகணும்ங்கிற நினைப்பில் கிருஷ்ணகுமார்தான் அவளைத் தீர்த்துக் கட்டியிருக்கணும்!''

''நோ லாயர் சார்!திஸ் ஈஸ் டூ மச். நானும் புவனாவும் மைத்ரேயிக்கு உதவி பண்ணத்தான் நினைச்சோம். சொத்து பூராவும் அநியாயமா கோயில்களுக்கும், அநாதை விடுதிகளுக்கும் போய்ச் சேர்ந்துடக்கூடாதுங்கிற எண்ணத்துலதான் மைத்ரேயிக்கு ஒரு பத்து நாள் கணவரா நடிக்க சம்மதிச்சேன். மைத்ரேயியை நான் கொலை பண்ணலை!''

முகம் இறுகிய ஜோஷி, கிருஷ்ணகுமார் தோள் மேல் கையை வைத்தார். ''சாரி, நீங்க இங்கே இருந்தா பொய்யைத் தவிர வேற எதையும் பேச மாட்டீங்க. வாங்க



ஸ்டேஷனுக்குப் போயிடலாம். அதுதான் உங்களுக்குச் சரியான இடம்!''

கிருஷ்ணகுமார் தன் மீது கொஞ்சம் கொஞ்சமாய் படிய ஆரம்பித்திருக்கும் கொலைப் பழியின் பயங்கரத்தை உணர்ந்து சுவாசிக்கத் திணறினான். 'இந்த நேரம் பார்த்து புவனா எங்கே போனாள்?'

யோசித்த அதே விநாடி -

இன்ஸ்பெக்டர் ஜோஷியிடம் அந்த பாரன்சிக் துறையைச் சேர்ந்த டாக்டர் நெருங்கினார்.

''மிஸ்டர் ஜோஷி... !''

''எஸ் டாக்டர்'' திரும்பினார்.

''இப்போது ஓர் உண்மை பிடிபட்டிருக்கிறது.''

''என்ன?''

''மைத்ரேயியை கனமான ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்தவர்கள் அதற்கு முன்பாய் விஷத்தையும் கொடுத்திருக்கிறார்கள். விஷத்தால் அவள் சாகவில்லை என்று தெரிந்ததும் பின் தலையில் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். பாய்சன் அண்ட் தென் மர்டர்.''

''ஷ்யூர்?''

''எஸ்... மைத்ரேயியின் உதடு, காது மடல், கன்னப்பகுதிகளில் விஷத்தின் நீலச் சாயல் படிய ஆரம்பித்திருக்கிறது!''

ஜோஷி கிருஷ்ணகுமாரை ஏறிட்டார்.

''டாக்டர் சொல்றது உண்மையா?''

''எ... எனக்கு தெரி... தெரியாது.''

''யூ நோ எவ்ரி திங்க்.''

''இன்ஸ்பெக்டர்! என்னை நம்புங்க. ஐயாம் ஹார்ம்லெஸ்...''

''மைத்ரேயியை நீங்க கொலை செய்யலைன்னா வேற யார் பண்ணியிருப்பாங்க? உங்க மனைவி புவனாவா?''

கிருஷ்ணகுமாருக்கு 'இருக்கலாமோ' என்று தோன்றியது.




இன்ஸ்பெக்டர் ஜோஷி கிருஷ்ணகுமாரின் தோளைத் தட்டி, ''என்ன யோசிக்கிறீங்க? நீங்க இந்தக் கொலையைச் செய்திருக்காத பட்சத்தில் உங்க மனைவி புவனா செய்து இருக்கலாமோன்னு கேட்டேன்.''

''இருக்காது சார்! மைத்ரேயியைக் கொலை செய்யற அளவுக்கு அவ மேல புவனாவுக்கு எந்தவிதமான ஆத்திரமோ, கோபமோ கிடையாது. அவங்க ரெண்டு பேரும் நெருங்கிப் பழகின சிநேகிதிங்க.''

''சிநேகிதிகளா இருந்தவங்க பகையாளியா மாற முடியாதா என்ன?''

''ச... சார்...'' கிருஷ்ணகுமார் ஏதோ சொல்ல முயன்ற விநாடி - மாடிப்படிகளில் யாரோ வேகமாய் ஏறி வரும் சத்தம் கேட்டது. அந்த அறையில் இருந்த எல்லாருமே திரும்பிப் பார்த்தார்கள்.

புவனா! மூச்சிரைத்துக்கொண்டு நின்றாள்.

''மைத்...ரே...யீ...'' என்று தீனமாய் அலறிக்கொண்டே அவளுடைய உடல் கிடந்த பக்கமாய் ஓடிப்போய் மண்டியிட்டுக் குனிந்தாள். உதடு பிளக்க குரல் உடைந்து வெளியே வந்தது.

''மை...த்...ரே...யீ...!''

இன்ஸ்பெக்டர் ஜோஷி பக்கத்தில் வந்து நின்றார். ''மிஸஸ் புவனா! நீங்க இப்போ வெளியே எங்கே போயிட்டு வர்றீங்கன்னு சொல்ல முடியுமா?''

புவனா கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

''நா... நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயிட்டு அப்படியே என்னோட ப்ரெண்ட் லலிதாவைப் பார்த்துட்டு வர்றேன். டாக்சியில் வந்து இறங்கறப்போ வாசலில் கூடியிருந்த கும்பலைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. விவரம் சொன்னதும் ஆடிப்போயிட்டேன். இன்ஸ்பெக்டர்! மைத்ரேயியைக் கொலை செஞ்சது யாரு? இந்த பாதகத்தைச் செய்தது யாரு?''

''அதை நீங்கதான் சொல்லணும் மிஸஸ் புவனா...''

''இன்ஸ்பெக்டர்! வாட் டூ யூ மீன்?''

''இப்ப நீங்க எங்கே போயிட்டு வர்றதா சொன்னீங்க?''

''ரயில்வே ஸ்டேஷனுக்கும், என் ப்ரெண்ட் லலிதாவோட வீட்டுக்கும்!''

''எதுக்குப் போனீங்க?''

''நான் மெட்ராஸ் திரும்பறதுக்காக தாதர் எக்ஸ்பிரசில் டிக்கட் ரிசர்வ் செய்யறதுக்காக போனேன்.''

''டிக்கட் ரிசர்வ் செய்துட்டீங்களா?''

''செய்துட்டேன்.'' சொன்னவள் தன் கையில் வைத்திருந்த சிறிய பையின் ஜிப்பைப் பிரித்து உள்ளே இருந்த டிக்கெட்டை எடுத்து ஜோஷியிடம் நீட்டினாள். அவர் வாங்கிப் பார்த்துவிட்டு, ''நாளைக்கு மறுநாள் புறப்படறதுக்காக டிக்கெட் வாங்கியிருக்கீங்க, இல்லையா?'' என்று கேட்டார்.

''ஆமா.''

''நீங்க மெட்ராஸ் புறப்பட்டுப் போறத உங்க கணவர்கிட்ட சொல்லலையா?''

''கணவர்...'' புவனா திகைக்க, ஜோஷி தன் பெரிய சதைப்பிடிப்பான உதடுகளைப் புன்னகையில் விரித்தார். ''என்ன அப்படிப் பார்க்கறீங்க புவனா? உங்க செட்டப் மேரேஜ் திட்டமெல்லாம் வெட்ட வெளிச்சமாயிடுச்சு.''

புவனா தன்னுடைய கணவனைப் பார்க்க, ஜோஷி சிரித்தார்.



''உங்க கணவர் எல்லாத்தையும் ஒப்புக்கிட்டார். மைத்ரேயியைக் கொலை செய்தது யார்ன்னு கேட்டா மட்டும் மவுனம் சாதிக்கிறார். நீங்களாவது உண்மையைச் சொல்றீங்களா புவனா?''

''உ.... உண்மையா? என்ன உண்மை?''

''மைத்ரேயிக்கு அந்த அவலமான முடிவைக் கொடுத்தது யார்?''

''எ... எனக்குத் தெரியாது.''

''யாராய் இருக்கலாம்னு நினைக்கறீங்க?''

''எ... எதுவும் தோ... தோணலை எனக்கு?''

''சரி. உங்க கணவருக்குத் தெரியாமே ரயில்வே ஸ்டேசனுக்குப் போய் மெட்ராஸ் போக டிக்கட் ரிசர்வ் செய்திருக்கீங்களே. அதுக்குக் காரணம் என்ன?''

''நான் மெட்ராஸ் புறப்பட்டுப் போக முடிவு செய்தோம். அவர் வீட்ல இல்லை. அவரோட ரீஜினல் ஆபீஸ்ல யாரையோ பார்க்கறதுக்காகப் போயிருந்தார்.''

''நீங்க ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும்போது மைத்ரேயிகிட்டே சொல்லிட்டுப் போனீங்களா?''

''ரயில்வே ஸ்டேஷனுக்குப் போறதாச் சொல்லலை. என்னோட ப்ரெண்ட் லலிதா வீட்டுக்குப் போறதா சொன்னேன்.''

''ஏன் அப்படிச் சொன்னீங்க?''

''நான் மெட்ராஸ் போறதாக சொன்னா மைத்ரேயி என்னைப் போக விடமாட்டா. டிக்கெட் ரிசர்வ் செய்துட்டு வந்த பின்னாடி அவகிட்டே சொல்லிக்கலாம்னு இருந்தேன்!''

''திடீர்ன்னு மெட்ராஸ் புறப்பட்டுப் போக ஏன் முடிவு செய்தீங்க?''

''எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலை.''

''காரணம்?''

''சொல்லத் தெரியலை...''

''நான் சொல்றேன் மிஸஸ் புவனா! மைத்ரேயிக்கும் உங்க கணவருக்கும் நடந்த 'செட்டப் மேரேஜ்' விசயத்தில் ஏதோ ஒரு தகராறு உங்க மூணு பேருக்கும் மத்தியிலே மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கு. அந்த மனஸ்தாபம்தான் இந்தக் கொலைக்குக் காரணம். நான் சொன்னது சரியா?''

''இன்ஸ்பெக்டர்! எனக்கும் என்னோட கணவருக்கும் ஒரு சின்ன மனஸ்தாபம் ஏற்பட்டது உண்மைதான். ஆனா அது மைத்ரேயியைக் கொலை செய்யற அளவுக்கு துவேஷமா வளரலை. எனக்கும் என்னுடைய கணவருக்கும் நடுவில் இருந்த மனஸ்தாபம் என்னங்கிறதையும் சொல்லிடறேன். மைத்ரேயிக்கும் என்னோட கணவருக்கும் நடந்த செட்டப் மேரேஜை நான் ஆரம்பத்தில் வேடிக்கையா எடுத்துக்கிட்டேன். ஆனா, என்னோட ப்ரெண்ட் லலிதாவோட வாழ்க்கை நாசமாக நேர்ந்த காரணத்தைக் கேட்டதும் என் மனசுக்குள்ளே

ஒரு பயம் வந்தது. வேற ஒரு பெண்ணைத் தன் கணவனோடு நெருங்கிப் பழக விட்டா என்ன மாதிரியான விபரீதம் நேருங்கிறதை அவ மூலமா தெரிஞ்சுகிட்ட விநாடியிலிருந்து மைத்ரேயியையும் என்னோட கணவரையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்க ஆரம்பிச்சுட்டேன். இந்த இறுக்கமான சூழ்நிலையில் இங்கே இருக்க எனக்குப் பிடிக்கலை. அதான் மெட்ராஸ் போக முடிவு செய்து இரயில்வே ஸ்டேஷனுக்கு டிக்கட் எடுக்கப் போனேன்.''

''அப்ப மணி எவ்வளவு இருக்கும்?''

''பன்னிரெண்டு மணி இருக்கலாம்.''

''ஸ்டேஷனுக்கு போனதும் ரிசர்வேஷன் செய்துட்டீங்களா?''

''இல்லை. க்யூவில் ஒரு மணி நேரம் காத்திருந்தேன். ஒண்ணே கால் மணிக்கு ரிசர்வேஷனை முடிச்சுக்கிட்டு ப்ரெண்ட் லலிதாகிட்டே போய் என்னோட பிரச்சினையைச் சொன்னேன். அவ நீ மெட்ராஸ் போக வேண்டாம். இங்கேயே இருன்னு அட்வைஸ் செய்தா. ஓர் அரை மணி நேரம் அவகிட்ட பேசிட்டிருந்துவிட்டு நேராக இங்கே வர்றேன்!''

''அந்த லலிதாவோட டெலிபோன் நம்பர் என்ன?''

. சொன்னாள்.

பக்கத்தில் நின்றிருந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த நம்பரைத் தன் கையில் வைத்திருந்த டைரியில் குறித்துக்கொண்டதும் ஜோஷி கேட்டார்.

''மைத்ரேயிக்கும் உங்களுக்கும் ஏதாவது வாக்குவாதம் நடந்ததா?''

''இல்லையே!''

''மிஸஸ் புவனா! சந்தேகத்தின் அடிப்படையில் உங்க கணவரை நாங்க ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுபோறோம். இந்த வீட்ல வெச்சு விசாரிச்சா எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உண்மைகள் கிடைக்காது.''

''நோ... இன்ஸ்பெக்டர்! என்னோட கணவருக்கு மைத்ரேயி மேலே எந்தப் பகைமையும் இல்லை. ஒரு பெண்ணை கொலை பண்ற அளவுக்கு அவர் கொடூரமான மனசும் கொண்டவர் இல்லை!''

''அவர் கொலை செஞ்சாரா இல்லையாங்கிறது நாங்க செய்யப் போகிற விசாரணையிலே தெரிஞ்சுடும்.'' சொன்ன இன்ஸ்பெக்டர் ஜோஷி தனக்குப் பக்கத்தில் இருந்த சப்-இன்ஸ்பெக்டருக்குக் கண்ணைக் காட்ட, அவர் கிருஷ்ணகுமாரை நோக்கிப் போனார்.

கிருஷ்ணகுமார் ஏறக்குறைய அலறினான்.

''நோ இன்ஸ்பெக்டர்... ஐயாம் நாட்.''

''ஜீப்புக்கு நீங்களே வந்துட்டாப் பரவாயில்லை. தள்ளிட்டுப் போற அளவுக்கு நிலைமையை மோசமாக் கிடாதீங்க.''



கிருஷ்ணகுமார் தலை குனிந்து நடந்தான்.

போலீஸ் ஸ்டேஷன் மோசமான நிலைமையில் இருந்தது. ஒரு நாலாந்தர டாய்லெட்டைப் போல் சுவர்கள் பூராவும் பான் கறை, சுண்ணாம்புத் "துற்றல்கள், தொப்பை தள்ளிய கான்ஸ்டபிள்கள் பீடி குடித்து சிரித்தார்கள். லாக்கப்பின் கம்பி வலைக் கதவுக்குப் பின்னால் அடிபட்ட ரத்தக் காய முகங்களோடு நான்கைந்து பேர் எட்டிப் பார்த்தார்கள்.

கிருஷ்ணகுமாருக்கு அடிவயிற்றைப் பிசைந்தது. எந்த விநாடியும் வாந்தி வருவது போன்ற உணர்ச்சி தொண்டையில் காத்திருந்தது.

'அசிஸ்டண்ட் கமிஷனர்' என்று இந்தியில் எழுதப்பட்டிருந்த அறைக்குள் கிருஷ்ணகுமாரை அழைத்துப்போன இன்ஸ்பெக்டர் ஜோஷி ஓர் உடைந்த பெஞ்சைக் காட்டி, 'பைட்டோ' என்றார்.

கிருஷ்ணகுமார் தயக்கமாய் உட்கார்ந்தான். ஜோஷி தொடர்ந்தார். சற்றே மரியாதைக் குறைவான இந்தியில், ''ஏ.சி. இப்ப வந்துடுவார். என்கிட்டே பேசற மாதிரி அவர்கிட்டே பேசினா ஒண்ணும் பிரயோஜனப்படாது. எப்பேர்ப்பட்ட கல்லுளி மங்கன்கிட்டேயிருந்தும் அவர் உண்மையை வரவழைச்சுடுவார்!'' சொல்லிவிட்டு ஜோஷி வெளியே போனதும் வியர்த்தபடி காத்திருந்தான் கிருஷ்ணகுமார்.

பதினைந்து நிமிஷம் கழித்து வாய் நிறைய 'பான்' மென்று கொண்டு மெகா சைஸ் தொப்பியைத் தூக்கிக்கொண்டு வந்தார் அசிஸ்டெண்ட் கமிஷனர். நாற்காலியில் விழுந்து தொப்பியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்தபடி தன் சிறிய கண்களால் கிருஷ்ணகுமாரை எறிட்டபடி ஆங்கிலத்தில் கேட்டார், உடைந்த ஆங்கிலம்.

''இதுக்கு முன்னாடி போலீஸ் ஸ்டேசனுக்குப் போயிருக்கியா?''

''இ... இல்லை.''

''போலீஸ் அடி எப்படி இருக்கும்னு உனக்குத் தெரியாது. படிச்ச ஆசாமியான நீ குற்றத்தை ஒப்புக்கிட்டா ஒரு பிரச்சினையும் இல்லை. நான் கொலை செய்யலைன்னு ஒரே பாட்டைத் திரும்பத் திரும்ப பாடினா எனக்குப் பிடிக்காது. மைத்ரேயியைக் கொலை செய்தது நீதானே?''

''இல்ல சார்.''

''போலீஸ் அடியைத் தாங்கற உடம்பு உனக்கில்லை. சொல்லு மைத்ரேயியைக் கொலை செய்தது நீதானே?''

''இ... இல்லை சார்! எனக்கு ரத்தத்தைப் பார்த்தாலே மயக்கம் வரும். மைத்ரேயியை நான் கொலை செய்யல.''

மேஜை மேலே இருந்த உருட்டுக் கட்டையை எடுத்துக்கொண்டார் ஏ.சி.

''சிமூவ் யுவர் டிரஸ்...''

''ச... சார்.''

''பேண்ட் சட்டையைக் கழட்டு மேன்!உடம்புல ஜட்டியைத் தவிர எதுவும் இருக்கக்கூடாது.''

கிருஷ்ணகுமாரின் அடிவயிறு கலங்கியது.

## 21

''என்ன மேன் சொன்னது காதுல விழலை...? ரிமூவ் யுவர் ட்ரஸ்...'' அசிஸ்டெண்ட் கமிஷனர் தன் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் கிருஷ்ணகுமாரின் தோளில் மெல்லத் தட்டினார்.

கிருஷ்ணகுமார் கைகளைக் கூப்பினான். ''சார்! ஹியர் மீ... ஐயாம் ஹார்ம்லஸ்... பிலாக்கிங்டு எ ரெஸ்பெக்டட்பிள் பேமிலி... மோர் ஓவர்...''

ஏ.சி. மட்டமான மரியாதை குறைந்த இந்தியில் வாயில் இருந்த பான் எச்சில் தெறிக்கக் கத்தினார். ''டேய் டிரஸ்ஸைக் கழட்டுன்னு சொல்லி ரெண்டு நிமிஷமாச்சு... இப்ப நீ டிரஸ்ஸைக் கழட்டறியா... இல்ல லேடி கான்ஸ்டபிளை விட்டு கழட்டச் சொல்லட்டா?''

கிருஷ்ணகுமார் பயந்து போய் டிரஸ்ஸை உருவ ஆரம்பித்தான். தொப்பை கான்ஸ்டபிள்கள் எட்டிப்பார்த்து சத்தமில்லாமல் சிரித்துவிட்டு நகர்ந்தார்கள். ஏ.சி. மேஜை முனை மேல் ஏறி உட்கார்ந்து வெறும் ஜட்டியோடு நின்ற கிருஷ்ணகுமாரின் வயிற்றில் உருட்டுக்கட்டையை வைத்தார்.

''இப்பவும் ஒண்ணும் லேட்டாயிடலை... உண்மையை ஒப்புக்க. இந்த லாட்டிக்கு நான் வேலை தரலை... இதால அடி வாங்கினா எப்படி இருக்கும் தெரியுமா? வயித்துக்குள்ளே இருக்கிற ஒவ்வோர் உறுப்பும் சீழ் கட்டிக்கும். நீ தண்ணிகூட குடிக்க முடியாது.''

''சார்! ப்லீஸ் மீ. நான் அந்தக் கொலையைச் செய்யலை. மைத்ரேயிக்கு உதவி செய்யத்தான் மெட்ராசிலிருந்து வந்தேன்... மைத்ரேயியோட கொலைக்குப் பின்னாடி வேற யாரோ இருக்காங்க. உண்மையான குற்றவாளியை விட்டுவிட்டு நீங்க என்னை...''

கிருஷ்ணகுமார் பேசிக் கொண்டிருக்கும்போதே உருட்டுக்கட்டை மேலே உயர்ந்து அவன் தோளில் இறங்கியது!

ஏ.சி. பால் கறைப் பற்களோடு சிரித்தார். இந்தியில் மிக மோசமான ஒரு கெட்ட வார்த்தையை உதிர்த்துவிட்டு, ''இது சாம்பிள்! மேஜை மேல் மல்லாக்கப் படுக்கவைச்சு வயித்து மேலே இதால ஒரு போடு போட்டா எப்படி இருக்கும் தெரியுமா? எங்கே மேஜை மேல் ஏறிப்படு.''

கிருஷ்ணகுமார் தயங்க, ஏ.சி. உருமினார்.

''ம். ஏறிப்படு.''

லாட்டியை ஆத்திரமாய் ஓங்கிய வினாடி -

மேஜை மேலிருந்த டெலிபோன் கூப்பிட்டது.



வாய்க்குள் அடக்கியிருந்த பான் எச்சிலை ஜன்னல் கம்பிகளுக்கு இடைவெளியில் மறுபக்கம் தெரிந்த செடியின் மேல் உமிழ்ந்துவிட்டு சாவகாசமாய் வந்து ரிசீவரை எடுத்தார்.

''அலோ...''

''அசிஸ்டெண்ட் கமிஷனரா?''

''எஸ், ஹோல்டிங்...''

'சார்...! நான் பாரன்சிக் அசிஸ்டெண்ட் மல்ஹோத்ரா பேசறேன். நீங்க உடனே மைத்ரேயி வீட்டுக்கு வரணும்.''

''என்ன விஷயம்?''

''சார் அந்தப் பெண் இறந்துபோன சம்பவம் குறித்து எழுந்த சந்தேகங்களுக்கு விடை கிடைச்சிருக்கு.''

''விடையா?''

''எஸ் சார், அந்தப் பொண்ணை யாரும் கொலை செய்யலை.''

''தென்?''

''தற்கொலை.''

ஏ.சி. திடுக்கிட்டார்.

''தற்கொலையா? எப்படி அந்த முடிவுக்கு வந்தீங்க?''

''மைத்ரேயி கைப்பட எழுதின லெட்டர் கிடைச்சிருக்கு சார்! பாரன்சிக் தடயங்களுக்காக வீட்டை அங்குலம் அங்குலமா அலசிப் பார்த்திட்டிருந்தப்ப அந்த லெட்டர் மேஜை மேலிருந்து கீழே விழுந்து தரை விரிப்புக்குள்ளே எப்படியோ போயிருக்கு. நீங்க உடனே ஸ்பாட்டுக்கு வாங்க சார்! ஐ வில் எக்ஸ்ப்பிளைன் யூ.''

ஜீப்பை மைத்ரேயியின் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு இறங்கிய அசிஸ்டெண்ட் கமிஷனரை பாரன்சிக் அசிஸ்டெண்ட் மல்ஹோத்ரா எதிர்கொண்டு சல்யூட் செய்தார். ஏ.சி. உள்ளே வந்துகொண்டே இருந்தார்.

''தற்கொலைதானே...?''

''பர்பெக்ட் சூசைடு சார்.''

''ஷோ மீ த லெட்டர்...''

மல்ஹோத்ரா தன் கையில் மடித்து வைத்திருந்த கடிதத்தை நீட்ட, ஏ.சி. வாங்கிப் பார்த்தார். தன் பார்வையை கவரோரமாய் கவலை முகங்களோடு நின்றிருந்த லாயர், ஆடிட்டர், புவனா, பாலமுரளி ஆகியோரின் மேல் அவசர அவசரமாய் வீசிவிட்டு கடித வரிகளுக்குக் கொண்டு வந்தார். கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

'போலீஸ் துறைக்கு,

மைத்ரேயி எழுதிக் கொண்ட கடிதம். நான் தற்கொலை செய்துகொள்ளப் போவதற்கு முன் இந்த கடிதத்தை எழுதுவதால் - இதில் உள்ள வாசகங்களை என் வாக்குமூலமாகவும் வைத்துக்கொள்ளலாம். என் இறப்புக்கு யாருமே காரணம் இல்லை. நானாக விரும்பித் தான் என் இறப்பைத் தேடிக் கொண்டேன். புவனா என் உயிர் சிநேகிதி. அவளும், அவளுடைய கணவர் கிருஷ்ண

குமாரும் நான் கட்டாயப்படுத்தியதன் பேரில்தான் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டார்கள். கிருஷ்ணகுமாரை எனக்கு கணவராக நடித்தால் சொத்து என் பெயருக்கு மாறும் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் இந்த திட்டத்தை அமுல்படுத்த முயன்றேன். கிருஷ்ணகுமார் எனக்குக் கணவராக நடிப்பதால் பல சிக்கல்கள். லாயரும், ஆடிட்டரும் சந்தேகப்பட்டார்கள். இதனால் நான் மனஅமைதி இழந்தேன். எனக்கு என் மீதே வெறுப்பு ஏற்பட்டது. வாழ்க்கையை முடித்துக்கொள்வது என்கிற தீர்மானத்துக்கு வந்தேன். விஷத்தை அருந்தப்போகும் கடைசி விநாடிகளில் - போலீஸ் துறைக்கு மறுபடியும் என் கோரிக்கை. நான் செய்து கொண்டது தற்கொலை. என் இறப்புக்காக யாரையும் காரணமாக்காதீர்கள். முக்கியமாக கிருஷ்ணகுமார் - புவனா! இந்த இரண்டு பேரும் எனக்கு நன்மை செய்ய நினைத்தவர்கள். யாருக்கும் எந்தவிதமான மனக்கஷ்டத்தையும் போலீசார் தரக்கூடாது என்கிற கோரிக்கையோடு என் கடிதத்தையும் வாழ்க்கையையும் முடித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
மைத்ரேயி.

கடிதத்தைப் படித்து முடித்த ஏ.சி. நிமிர்ந்து மல்ஹோத்ராவை ஏறிட்டார். ''லெட்டர் உங்களுக்கு எங்கிருந்து கிடைச்சது!''

''மேஜையை ஒட்டியிருந்த தரை விரிப்புக்குக் கீழே நான்காய் மடிச்ச இந்த லெட்டர் கிடைச்சது!''

''தற்கொலை பண்ணிக்கிறதா மைத்ரேயி எழுதிய கடிதம் பார்வைக்குப் படுகிற மாதிரி மேஜை மேல்தானே இருக்கணும்? தரை விரிப்புக்குக் கீழே எப்படிப் போச்சு?''

நெற்றியைச் சுருக்கினார் ஏ.சி.

''பாசிபிலிடி ஈஸ் தேர் சார்.''

''எப்படி?''

''குட் யூ கம் வித் மீ சார்'' மல்ஹோத்ரா பணிவாய்க் கேட்டு மாடிக்குக் கூட்டிப் போனார். மைத்ரேயியின் மேஜையொட்டியபடி இருந்த தரை விரிப்பைக் காட்டினார். விரிப்பின் முனை மடங்கி உயர்ந்து உள்வாங்கியிருக்க, அந்த இடம் வாய் பிளந்த மாதிரி தெரிந்தது.

''மைத்ரேயி லெட்டரை எழுதி மேஜை மேல வெச்சுட்டு விஷத்தைக் குடிச்ச பின்னாடி அந்த லெட்டர் மேஜையிலிருந்து நழுவி இந்த தரை விரிப்போட மடங்கிய பகுதிக்குள் விழுந்திருக்கணும். தடயங்களுக்காக அறையை அங்குலம் அங்குலமாய் அலசும்போதுதான் தரை விரிப்புக்கு கீழே மறைஞ்சிருந்த இந்த லெட்டர் கண் பார்வைக்குக் கிடைச்சது.''

ஏ.சி. கேட்டார். ''மைத்ரேயியோட மரணம் விஷத்தினால்தானே?''

''ஆமா சார்!''



''பின்னே அவளோட நெற்றியில் ரத்தக் காயம் இருந்ததே?''

''காயம் ஏற்பட்டதுக்கு காரணம் இதுதான் சார்! ஸ்டூலோட முனையை உத்துப் பாருங்க சார்!''

பார்த்தார் ஏ.சி.

செங்கல் தூள் மாதிரி ஏதோ ஒட்டியிருந்தது.

''என்னது?''

''ரத்தக் கறை சார்! மைத்ரேயியோட ரத்தம். விஷத்தை குடிச்சு கட்டிலில் படுத்த மைத்ரேயி மரண அவஸ்தையில் புரண்டிருக்கணும். அப்படிப் புரளும்போது கீழே விழ வாய்ப்பு அதிகம். மைத்ரேயி கீழே விழும்போது ஸ்டூலின் இரும்பு முனை அவளுடைய நெற்றியை செம்மையா தாக்கியிருக்கு. அதன் பிளீடிங், மைத்ரேயியோட முகத்துல ரத்ததைப் பார்த்ததும் நாம அதை மர்டர்ன்னு முடிவு கட்டிட்டோம். கொஞ்ச நேரத்துக்கு முந்தி கிடைச்ச போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்கூட மைத்ரேயி இறந்தது விஷத்தினால்தான்னு சொல்லியிருக்கு. அவ சாப்பிட்ட விஷத்தோட ஜாதி சயனைட்.''

அறையின் சூழ்நிலைகளை ஏ.சி. ஆராய்ந்துவிட்டு சொன்னார். ''யூ மே பி ரைட் மிஸ்டர் மல்ஹோத்ரா! பட் இந்த லெட்டரில் இருக்கிற கையெழுத்து மைத்ரேயினுடையதுதானா?''

லாயரும், ஆடிட்டரும் ஒரே குரலில் குறுக்கிட்டார்கள்.

''நோ டவுட் சார்! அது மைத்ரேயியின் கையெழுத்து தான்!''

ஏசி. தோள்களைக் குலுக்கினார்.

''இட்ஸ் ஓ.கே.''

புவனா முன்னால் வந்தாள்.

''சார்! என்னோட கணவர்?''

''ஸ்டேசனுக்கு வந்து ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்துட்டு உங்க கணவரைக் கூட்டிட்டுப் போலாம். அவர்கிட்ட நான் கொஞ்சம் ப்ருட்டலா நடந்துக் கிட்டதுக்காக மன்னிப்புக் கேட்டுக்கறேன்.''

**மை**த்ரேயியின் கடைசி காரியங்களை முடித்துவிட்டு மெட்ராஸ் புறப்பட்டுப் போக தங்களுடைய சூட்கேஸ்களில் உடைகளை மடித்துத் திணித்துக் கொண்டிருந்தார்கள் புவனாவும், கிருஷ்ணகுமாரும்.

''புவனா.''

''ம்.''

''அந்த லெட்டர் மட்டும் கிடைக்காம இருந்திருந்தா என்னோட நிலைமை என்னாகும்னு யோசிச்சுப் பார்த்திருக்கியா?''

''அதை ஞாபகப்படுத்தாதீங்க! நிஜங்களோட நிறத்தை விளையாட்டுக்குக்கூட மாத்தக் கூடாதுங்கிறத மைத்ரேயி மூலமா கத்துக்கிட்டேன்.''

''இந்த உன்னோட டயரி.''

மேஜை மேலிருந்த புவனாவின் டயரியை எடுத்து நீட்டினான் கிருஷ்ணகுமார்.

கை நழுவி விழ -

டயரிக்குள்ளிருந்து மடிக்கப்பட்ட அந்தக் காகிதம் விழுந்தது. புவனா எடுத்துப் பிரித்தாள். இருதயம் அதிர்ந்தது.

மைத்ரேயியின் கையெழுத்தில் அந்தக் கடிதம் நிரம்பியிருந்தது.

''என் உயிர் சிநேகிதி புவனாவுக்கு, உன் மைத்ரேயியின் முடியப்போகிற வாழ்க்கையின் கடைசி நிமிஷத்தில் எழுதிய கடிதம். நான் என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளப் போவதாக போலீஸ் துறைக்கு இப்போதுதான் கடிதம் எழுதினேன். அதில் என் தற்கொலைக்கான காரணத்தைச் சொல்லியிருந்தாலும் என் ப்ரிய தோழியான உன்னிடம் அதைப் பகிர்ந்து கொள்கிறேன். எனக்குக் கணவராக நடித்த கிருஷ்ணகுமார் உன்னுடைய சொந்து என்று தெரிந்திருந்தும் என் மனம் அலைபாய ஆரம்பித்துவிட்டது. அவர் என்னிடம் யதார்த்தமாய் பழகினாலும் எனக்குள் விகாரமான எண்ணங்கள் முளைவிட ஆரம்பித்தன. உன்னோடு அவர் பேசுவதை என்னுடைய கண்கள் பொறாமையாய்ப் பார்க்க ஆரம்பித்தன. உன்னுடைய வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் எங்கே நான் பறித்துக் கொள்வேனோ என்கிற பயமும் எனக்குள் கிளர்ந்தது. நான் உனக்கு கெட்டவளாகிவிடும் முன் நல்லவளாக சாக விரும்புகிறேன். என் மரணத்திற்கு வருத்தப்படாதே! உனக்கும் உன் கணவருக்கும் என் கடைசி வணக்கங்கள்.

உன்

மைத்ரேயி.

கடிதத்தின் கடைசி வரிகள் புவனாவின் இதயத்தை உலுக்க, அவள் உடைந்தாள். கடிதத்தை முகத்தில் பொத்தியபடி ஒரு சின்னக் குழந்தையைப் போல் தேம்பி அழுதுகொண்டே சரிந்து உட்கார்ந்தாள் புவனா.

'மைத்ரேயீஈ ஈ ஈ ஈ!'

மனசு மானசீகமாய்க் கதறியது.

(முற்றும்)


**SECRET NOVEL**

Edited, Published & Owned by **M.MANIVANNAN**, at 13, Theetharappan Street, Triplicane, Chennai - 600 005. Printed at R.Murugan, Wonder Prints, Triplicane, Chennai-600 005.